பக்கங்கள்: 18 + VI = 24

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 வைகாசி 31 ஞாயிற்றுக்கிழமை (13-06-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 201

## புலிகளோடு பேசும் அதேசமயத்தில் ஏனைய கட்சிகளோடும் ஆலோசனை

### நாட்டு மக்களுக்கான உரையில் ஜனாதிபதி தெரிவிப்பு



கொழும்பு,ஜூன்13

நாடாளுமன்றத்தில் அங்கத்துவம வகிக்கும் பல்வேறு இனங்கள் மற்றும் குழுக்களின் அரசியல் தலைவர்களோடு தொடர் பேச்சுக்களை நாம் ஏற்படுத்திக் கொள்வோம்.

புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான பேச்சுக்கு சமாந்தரமாக இந்தக் கலந்தாலோசனைகள் முன்னெடுக்கப்படும். ஒருபுறம் புலிகளுடனான பேச்சுக்களின் முன்னேற்றம் குறித்து நாட்டுக்கும் மறுபுறம் சம்பந்தப்பட்ட தரப்புகளின் கருத்தைப் புலிகளுக்கும தெரியப்படுத்தும் நோக்கில் இது மேற்கொள்ளப்படும்.

- இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

பேச்சுக்கான திகதி நிர்ணயிக்கப்பட்டதும் சிரேஷ்ட அமைச்சர்கள் மத்தியில் இருந்து ஒரு பேச்சுக்குழ தெரிவு செய்யப்படும் - என்றும் ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியமைத்து இரண்டு மாதங்கள் நிறைவடைவதை ஒட்டி ஜனாதிபதி குமாரதுங்க நேற்று நாட்டு மக்களுக்கு தொலைக்காட்சி மூலம் உரையாற்றினார்.

அப்போது அவர் தெரிவித்ததாவது:-

பேச்சுக்கள் வெளிப்படையானதாகவும் திறந்த அடிப்படையிலும் இருக்கும் என்று ஐ.ம.சு.கூட்டமைப்பு உறுதி அளிததிருப்பதால் சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான தேசிய ஆலோசனைக் கவுன்ஸில் என்ற விசாலமான தேசிய அமைப்பு ஒன்றை நான் உருவாக்குகிறேன். அதன்மூலம் மக்கள் அரசியல் தீர்வுக்கும், நல்லிணக்கத்தை நோக்கியும் தங்கள் பங்

(18ஆம் பக்கம் பார்க்க)

### அமைதி நடவடிக்கைகளைத் தொடங்குவதாயின்

# கால அட்டவணையுடன் கூடிய நிகழ்ச்சி நிரலுடன்தான் பேச்சு!

## அதற்கான ஆவணத்தைத் தயாரிப்பதில் நோர்வேத் தரப்பு உறுதியாக உள்ளது

ஒஸ்லோ,ஜூன்13

**ஸ்ரீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே மீண்டும் அமைதி நடவடிக்கைகளைத் தொடங்குவதாயின் கால அட்டவணையுடன் கூடிய நிகழ்ச்சி நிரல் ஒன்றுடனேயே பேச்சுக்களை ஆரம்பிப்பது என்பதில் நோர்வேத் தரப்பு மிக உறுதியாக உள்ளது. அதற்காக இருதரப்பு இணக்கப்பாட்டுடன் கூடிய ஆவணம் ஒன்றைத் தயாரிப்பதற்கான முயற்சியில் அது மும்முரமாக ஈடுபட்டிருப்பதாகத் தெரிகின்றது.**

விடயமறிந்த வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன.

பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நான்கு அடிப்படை விடயங்களைப புலிகள் தொடர்ந்து வலியுறுத்தி வருவதும் -

ஆனால், அந்த நான்கு அடிப்படைகளில் மூன்றுக்கு இணங்கிய அரசுத் தரப்பு நான்காவது அம்சத்தை - அதாவது இடைக்காலத் (18ஆம் பக்கம் பார்க்க)

## தற்போதைய நிலைமைகளின் கீழ் பேச்சுக்கள் தொடர்வது சந்தேகமே!

### சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

லண்டன்,ஜூன்13

ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் தற்போதைய நிலைமைகளின் கீழ் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அரசுக்கும் இடையிலான சமாதானப பேச்சுக்கள் தொடர்வதில் சந்தேகம் தோன்றியுள்ளதாக, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்த்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் செயலகத்தில் இடம்பெற்ற சந்திப்பு ஒன்றின்போது, வெளிநாட்டு ஊடகவியலாளர் மத்தியில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறி

(18ஆம் பக்கம் பார்க்க)



சரித்திரப் புகழ்மிக்க நல்லூர் கந்தசுவாமி கோயில் கார்த்திகைக் கற்பூரத் திருவிழா நேற்று மாலை நடைபெற்றது. அப்போது சுவாமி வீதிவலம் வந்து அடியார்களுக்கு அருள்பாலித்த காட்சி. *(படம்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

## புதிய இந்தியத் தூதராக நிருபாமா றோய் நியமனம்

புதுடில்லி,ஜூன்13

இலங்கைக்கான இந்தியத் தூதராக நிருபாமா றோய் நியமிக்கப்பட்டிருக்கிறார். இந்தியத் தூதராக இலங்கையில் பதவியேற்கும் முதல் பெண்மணி இவராவார்.

தற்சமயம் தூதராகப் பணிபுரியும் நிருபம்சென் ஐ.நாவுக்கான இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ளார். அவரது இடத்திற்கே நிருபாமா றோய் நியமனம் பெறுகிறார்.

இந்திய வெளிவிவகார அமைச்சில் நிர்வாகத்துக்குப் பொறுப்பான மேல

(18ஆம் பக்கம் பார்க்க)

## ஏ-9 விபத்துக்களைத் தடுக்க விழிப்புணர்வுக் கண்காட்சி

கிளிநொச்சி,ஜூன்13

வவுனியாவுக்கும் முகமாலைக்கும் இடையில் ஏ-9 பாதையில் விபத்துக்கள் அதிகரிப்பதையடுத்து, விபத்துக்களைத் தடுப்பதற்கான விழிப்புணர்வு நடவடிக்கைகளை கிளிநொச்சி மருத்துவர் சங்கம் முன்னெடுத்துள்ளது.

முதல் நடவடிக்கையாக விபத்துக்கள் தொடர்பான கண்காட்சி ஒன்றை நடத்த சங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

விபத்துக்களில் சிக்கும் வாகனங்கள், காயமடைவோர், உயிரிழப்

(18ஆம் பக்கம் பார்க்க)

## ஈராக் அமைச்சர் சுட்டுக் கொலை!

பக்தாத்,ஜூன்13

ஈராக் இடைக்கால நிர்வாகத்தின் பிரதி வெளிவிவகார அமைச்சர் பஸ்ஸம் கவ்பா சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறார். தலைநகர் பக்தாத்தில் அல்அஸமியா மாவட்டத்தில் அவர் பயணஞ்

(18ஆம் பக்கம் பார்க்க)

'சூரிய காந்தி'
தனி இணைப்பாக...
கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள்!

### வடக்கில் ஐந்து மாவட்டங்களிலும்

## புனர்வாழ்வுப் பணிகளுக்கு ஒதுக்கிய நிதியை பயன்படுத்த வேண்டாம் என்று பணிப்புரை

யாழ்ப்பாணம்,ஜூன்13

வடக்கில் உள்ள மாவட்டங்களில் புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியைப் பயன்படுத்துவதை நிறுத்துமாறு அந்தந்த மாவட்டச் செயலகங்களுககு புனர்வாழ்வு, புனரமைப்பு, நல்லிணக்க அமைச்சு அறிவித்திருப்பதாகத் தெரிய வருகின்றது.

வடக்கில் உள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்காக நிதி ஒதுக்கீடுகளை இந்த அமைச்சு முன்னர் அறிவித்திருந்தது.

இதன்படி திட்டங்களை இனங்கண்டு அவற்றை நடைமுறைப்படுத்த அந்த

(18ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி லண்டன் பயணம்

கொழும்பு,ஜூன்13

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்றுக்காலை லண்டன் புறப்பட்டார். ஜனாதிபதி நாட்டை விட்டு வெளியேறிய அதேவேளை, நாட்டு மக்களுக்கான அவரது உரை அரச தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டது. இந்த உரை நேற்றுமுன்தினம் பதிவு செய்யப்பட்டது என்று தெரிவிக்கப் பட்டது.

(18ஆம் பக்கம் பார்க்க).

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## விளையாட்டு விஞ்ஞான டிப்ளோமா

# கற்கைநெறியைப் பூர்த்திசெய்த 42 மாணவர்களுக்கு சான்றிதழ்

யாழ்ப்பாணம்,ஜூன்13

யாழ்.பல்கலைக்கழகத்தில் உடற்கல்வி டிப்ளோமா கற்கை நெறியைப் பூர்த்தி செய்த 4 ஆவது அணி மாணவர்களுக்கான டிப்ளோமாச் சான்றிதழ்கள் நேற்று வழங்கப்பட்டன.

இச்சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு நேற்று யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகின் இணைப்பாளர் வைத்திய கலாநிதி கே.குணராஜசிங்கம் தலைமையில் கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.

4 ஆவது அணியில் டிப்ளோமா கற்கை நெறியைப் பூர்த்திசெய்த 42 மாணவர்களுக்கான டிப்ளோமா பட்டச்சான்றிதழ்களை யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் வழங்கினார்.

யாழ்.பல்கலைக்கழக பதிவாளர் திருமதி என்.தங்கராசா, உடற்கல்வி அலகு இணைப்பாளர் எம்.இளம்பிறையன், உடற்கல்வித்துறை விரிவுரையாளர் திருமதி பவானி மற்றும் திருமதி தேவரஞ்சினி சிவாஸ்கரன் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (51)

## இன்றும் நாளையும் முகமாலையூடான போக்குவரத்து நேரம் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்13

விடுதலைப் புலிகளின் கிளிநொச்சி சமாதானச் செயலகத்தின் வேண்டுகோளுக்கு அமையப் புதூர் நாகதம்பிரான் ஆலயப் பொங்கல் தினத்தினை முன்னிட்டு இன்றும், நாளையும் முகமாலைச் சோதனை சாவடியூடான போக்குவரத்துக்கான நேரம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

வழமையாக மாலை 5.30 மணியுடன் மூடப்படும் இச்சோதனைச் சாவடி இன்றும், நாளையும் மாலை 6.30 மணி வரை திறந்திருக்கும் என செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு அறிவித்துள்ளது. (10-ரி)

## கட்டாக்காலி நாய்களின் தொல்லையை கட்டுப்படுத்த நடவடிக்கை வேண்டும்

### காரைநகர் வைத்திய அதிகாரி தெரிவிப்பு

காரைநகர்,ஜூன்13

காரைநகர் பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்களின் கடிக்கு இலக்காகி வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும், கட்டாக்காலி நாய்களின் தொல்லையைச் கட்டுப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்டோர் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் காரைநகர் வைத்தியசாலை வைத்திய அதிகாரி திருமதி எஸ்.கனகசபை கவலை தெரிவித்துள்ளார்.

கடந்த ஐந்து மாதங்களில் 68 பேரும், கடந்த ஆண்டில் 159 பேரும் இவ்வாறு நாய்க்கடிக்கு இலக்காகி காரைநகர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

கடந்த மாதம் நாய்க்கடிக்கு இலக்கான 25 பேரில் மூவர் விசர் நாய்க் கடிக்கு இலக்கானதாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவ்வைத்தியசாலையில் விசர் நாய்க்கடிக்கான ஏற்புத்தடைஊசி மருந்து ஏற்றும் வசதி இல்லாமையால் அவர்கள் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - காரைநகரில் கட்டாக்காலி நாய்களின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுவதுடன் இவை வீதிகளில் பொதுமக்களின் கால் நடைகள் மற்றும் கோழிகளை கடித்துக் குதறியும் வருகின்றன.

இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நீண்டகாலமாக எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லையெனப் பொதுமக்கள் தரப்பில் கவலை தெரிவிக்கப்படுவதுடன் இவற்றைக் கட்டுப்படுத்த விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.(10-73)

## பெறுபேறுகள் வெளியாகின

யாழ்ப்பாணம்,ஜூன்13

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் 2002, 2003 கல்வியாண்டு ஆசிரிய மாணவர்களின் இறுதிப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

மேற்படி பெறுபேறுகளைக் கலாசாலையில் பார்வையிடலாம் எனக் கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி தெரிவித்துள்ளார். (10-ரி)

## நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,ஜூன்13

'ஆன்மவிசாரம்' என்ற நூலின் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக கிழமை மாலை 3.30 மணிக்கு கந்தா மடம் சிவகுருநாத பீடத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கனகரத்தினம் ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (-8)







யாழ்.பல்கலைக்கழகத்தில் உடற்கல்வி டிப்ளோமா கற்கை நெறியைப் பூர்த்தி செய்த 4 ஆவது அணி மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் நேற்று நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள்.
(படங்கள்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)

### ஈராக்கின்

# இடைக்கால அரசுக்கு நிபந்தனையுடன் ஆதரவு!

## ஷியா முஸ்லிம் தலைவர் மெக்ராடா சதார் அறிவிப்பு

அமெரிக்காவின் கைப்பொம்மையெனத் தம்மால் விமர்சிக்கப்பட்ட ஈராக்கின் இடைக்கால அரசுக்கு நிபந்தனையுடனான ஆதரவு வழங்குவதற்கு ஷியா முஸ்லிம் தலைவரான மெக்ராடா சதார் முன்வந்துள்ளார்.

கடந்த வெள்ளியன்று கூபா நகரில் நடைபெற்ற மத பிரசங்க வைபவத்தில் ஈராக்கிய பாதுகாப்புப் படைகளுக்கெதிரான தாக்குதல்களை நிறுத்துமாறும் அவர் அறிக்கை மூலம் தமது ஆதரவாளர்களைக் கேட்டுக் கொண்டார்.

கடந்த மார்ச் மாதம் வரை அமெரிக்கப் படையினரை எதிர்த்துக் கடுமையாகப் போராடிவந்த குழுவினருக்குத் தலைமைதாங்கிய சதார் இம மோதலுக்கு முடிவு காணப்படவேண்டுமெனத் தெரிவித்துள்ள நிலையில் அவரது ஆதரவாளர்களுக்கும் அமெரிக்கப் படையணியொன்றுக்குமிடையே 'நஜாவ்' நகருக்கு அண்மையில் மோதல் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

இமாம் அலியின் பள்ளிவாசலுக்கு அருகில் இடம்பெற்ற இம்மோதலின் போது கற்கள் மற்றும் காலணிகள் என்பன வீசப்பட்டதுடன், இம்மோதல் காரணமாக பல பொதுமக்கள் காயமடையவும், வெள்ளிக்கிழமைத தொழுகையை இரத்துச் செய்யவும் நேரிட்டுள்ளது.

இதனிடையே உதவியாளர் ஒருவரால் வாசிக்கப்பட்ட சதாரின் மதப் பிரசங்கத்தில், ஈராக்கிய அதிகாரிகளால் தயாரிக்கப்பட்ட கால அட்டவணைக்கேற்ப ஆக்கிரமிப்பை முடிவுக்குக் கொண்டுவருமாறு இடைக்கால அரசு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இப்புதிய நிர்வாக உருவாக்கம் பழைய கருத்து வேறுபாடுகளைக் களைந்து ஈராக்கின் ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு சந்தர்ப்பமாக அமைவதாக சதாரின் பிரசங்க அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நகரின் பிரதான பள்ளிவாசலில் வழக்கமாக வெள்ளிக்கிழமைகளில் சதாரினால் நிகழ்த்தப்படும் மதப் பிரசங்க வரிசையில் இடம்பெற்ற மதப் பிரசங்கத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கு இது வரை எதுவித பிரதிபலிப்பையும் காணமுடியவில்லை.

சதாம் ஹுசேனின் ஆட்சி வீழ்த்தப்பட்டதையடுத்து இடம்பெற்ற ஷியா முஸ்லிம் பிரிவுத் தலைவர் அப்துல் மஜீட் அல்கேயின் கொலைக்கு சதாரே காரணம் என அமெரிக்காவின் தலைமையிலான கூட்டுப்படைகள் சதார் மீது குற்றம் சுமத்தியிருந்தன.

இதனிடையே, ஈராக்கில் அமெரிக்காவின் ஆக்கிரமிப்புக்குப் பின்னரும் நஜாப் நகரத்தின் இமாம் அலி பள்ளிவாசலில் வெள்ளிக்கிழமைகளில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவந்த தொழுகைகள் சதாரின் ஆதரவாளர்களின் வற்புறுத்தலையடுத்து முதற் தடவையாக நிறுத்தப்பட்டுள்ளது.(8)

## பணக்கார நாடுகள் பட்டியலில் இந்தியாவும் சீனாவும் இணையும்

வாஷிங்ரன்,ஜூன்13

பணக்கார நாடுகள் மட்டுமே உறுப்பினராக உள்ள ஜி-8 அமைப்பில் உறுப்பினராகும்படி - இந்தியா, சீனா நாடுகளுக்கு ஜி-8 நாடுகளின் தலைவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

ஜோர்ஜியா நாட்டின் 'ஸீ ஐலண்ட்' தீவில் நடைபெற்ற ஜி-8 நாடுகளின் தலைவர்கள் பங்கேற்ற உச்சி மாநாடு முடிவுக்கு வந்துள்ளது. இந்த மாநாட்டில் பேசிய பணக்கார நாடுகளின் தலைவர்கள், மிக வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரத்தைக கொண்ட இந்தியாவையும் சீனாவையும் ஜி-8 அமைப்பில் உறுப்பினராகும்படி அழைப்புவிடுத்துள்ளனர்.

ஜி-8 அமைப்பை விரிவுபடுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. அதில் இந்தியாவையும் சீனாவையும் உறுப்பு நாடுகளாகச் சேர்க்கத் திட்டமிட்டுள்ளோம். அதற்கான பணிகள் ஆரம்பமாகிவிட்டன என பிரிட்டன் பிரதமர் ரொனி பிளேயர் கூறியுள்ளார்.

இந்தியாவும் சீனாவும் மிகப் பெரிய சந்தையைக் கொண்ட நாடுகள். அவற்றின் வளர்ச்சி வேகம் அபரிமிதமாக உள்ளது. தொடர்ந்து அவை முன்னேறி வருகின்றன. எனவே ஜி-8 அமைப்பில் அந்த இரு நாடுகளையும் சேர்க்க வேண்டியது மிகவும் அவசியம் என ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் கூறியுள்ளார்.

இத்தாலிய பிரதமர் சில்வியோ பெர்லுஸ்கானியும் இதே கருத்தை வலியுறுத்தியுள்ளார். ஜி-8 அமைப்பில் உறுப்பினராகும்படி இந்தியாவுககும் சீனாவுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. உலக அரங்கில் மிகப் பெரிய பொருளாதார சக்தியாக உருவெடுத்து வரும் இந்த இரு நாடுகளையும் விட்டுவிட்டு, எதிர்கால பொருளாதாரத்தைப் பற்றிப் பேசுவதில் அர்த்தமில்லை, என இத்தாலிய பிரதமர் சில்வியோ கூறியுள்ளார். (8)

## இந்திய வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங் சீனா செல்கிறார்

### பாகிஸ்தான், சீனா வெளியுறவு அமைச்சர்களுடன் பேசுவார்

பெய்ஜிங்,ஜூன்13

பாகிஸ்தான் மற்றும் சீன வெளியுறவு அமைச்சர்களுடன் ஜூன் 21 ஆம் திகதி இந்திய வெளியுறவு அமைச்சர் கே.நட்வர்சிங் பேச்சு நடத்துவார் என்று கூறப்படுகிறது.

மூன்று நாடுகளும் இதை ஊர்ஜிதம் செய்யாத போதிலும் இத்தகவலை சீன வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

சீனாவின் கிழக்குக் கடலோரத்தில் உள்ள குயிங்டாவோ நகரில் இம்மாதம் 21, 22 ஆம் திகதிகளில் ஆசிய ஒத்துழைப்புக் கூட்டம் நடைபெறுகிறது. இதில் 22 நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் பங்கேற்கின்றனர். (-8)

## செவ்வாயில் தண்ணீர் ஆதாரத்தை கண்டறிந்தது 'ஸ்பிரிட்' விண்கலம்

வாஷிங்ரன்,ஜூன்13

செவ்வாய் கிரகத்தில் முன்பு தண்ணீர் இருந்ததற்கான மற்றொரு ஆதாரத்தை நாஸாவின் 'ஸ்பிரிட்' விண்கலம் கண்டறிந்துள்ளது.

கிரகத்தின் நிலப்பரப்பின் கீழ்ப் பகுதியில் உப்புப் படிவங்களை அது கண்டுபிடித்துள்ளது. இதன்மூலம் செவ்வாய்க் கிரகத்தில் முன்பொரு காலத்தில் தண்ணீர் இருந்தது குறித்த ஆய்வில் முன்னேற்றமடைந்துள்ளது.

கிரகத்தில் 'ஸ்பிரிட்' விண்கலம் தோண்டிய மிகப் பெரிய பள்ளத்திலிருந்து எடுக்கப்பட்ட பொருள்களில் உப்புப் படிவங்களும் காணப்பட்டன. முன்பொருகாலத்தில் இங்கு தண்ணீர் இருந்து, அது வற்றியிருக்க வேண்டும் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர். (8)

## இந்திய - அமெரிக்க உறவை மேலும் பலப்படுத்துவோம்

### கொலின் பவல் தெரிவிக்கிறார்

வாஷிங்ரன்,ஜூன்13

இந்திய - அமெரிக்க உறவை மேலும் வலுப்படுத்துவோம் என்று அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் கொலின் பவல் கூறியுள்ளார்.

கொலின் பவலும் இந்திய வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங்கும் வாஷிங்ரனில் வியாழக்கிழமை சந்தித்துப் பேசினர். சந்திப்புக்குப் பின் நிருபர்களிடம் பவல் கூறியதாவது:-

இருதரப்புப் பிரச்சினைகளையும் பிராந்தியப் பிரச்சினைகளையும் விரிவாக விவாதித்தோம்.

இந்தியாவுக்கும் - அமெரிக்காவுக்கும் இடையே நல்லுறவு நிலவுகிறது.

இந்த உறவைத் தொடர்ந்து அப்படியே நீடிக்கச் செய்வதோடு மேலும் வலிமைப்படுத்தவும் முன்னேற்றம் ஏற்படுத்தவும் விரும்புகிறோம்.

பாகிஸ்தானில் இருந்து இந்தியாவுக்குள் தீவிரவாதிகள் ஊடுருவும் சம்பவங்கள் குறைந்துள்ளன.

இந்தியா மிகப்பெரிய ஜனநாயக நாடு.

இந்திய மக்கள் தேர்ந்தெடுத்துள்ள புதிய அரசுடன் இணைந்து செயற்படுவோம் என்றார் பவல். (8)

| | | | |
|---|---|---|---|
| | சந் ரா. | கு.▲ | செவ், புத, வெ. சனி |
| | இராசிச் சக்கரம் | | |
| | | | வியா. |
| | | கே. | |

# இந்த வார இராசி பலன்

## 13-06-2004 - 19-06-2004

**மாற்றம் :**

13.06.2004இல் அச்சுவினி நட்சத்திரம் - மேடம் இராசியில் சந்திரன் நிற்கும்.

16.06.2004இல் செவ்வாய் - கடகராசிக்கு மாறும்.
வெள்ளி - இடபராசிக்கு மாறும்.

தேர்தல் சூடுபிடிக்கும். அரசு தடுமாறும். எதிர்ப்புகளுக்கு மத்தியில் - மக்கள் பதட்டப்படுவர். அமைதிகாக்க அந்நிய உதவி தேவையா? என ஆலோசிக்கப்படும். அரசியல்வாதிகள் குழப்பத்தை ஏற்படுத்தி தடுமாறுவார்கள். இந்தியா உதவி செய்யக் காத்திருக்கும். இந்தியாவின் வடபகுதியில் வன்செயல்கள் வலுப்பெறும். பாகிஸ்தானில் வன்செயல் புதியவடிவம் பெறும். ஈராக்கில் புதிய ஆட்சிக்கு நெருக்கடிகள் ஏற்படும். மேற்குலக நாடுகளில் பொருளாதார வீழ்ச்சி, யுத்த மேகக் கூட்டம். அதிதீவிர நவீன திட்டங்கள் தீட்டப்பட்டுக்கொண்டிருக்கும் காலமாகும். அதிககாற்று, திடீர் சீதோஷ்ண நிலை, மாற்றம், அரபிய - இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகளில் ஆதிக்கமுறும் எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

திட்டமற்றநிலை, பணவரவு, உற்சாகம். மனதில் உடல் வருத்தம், புத்திரருக்கு நன்மை, தொழில் பீடத்தில் மேலதிகாரிகள் உதவி செய்வர். வயிற்றில் வருத்தம். தூரதேசம் போகாதீர்கள். இருட்பதை இழந்து விடுவீர்கள். சகோதர உதவி கிடைக்கும். மாணவர்கள் நன்மை அடைவர். சந்தைவியாபாரிகளுக்கு நன்மைகள் ஏற்படும். திடீர் பிரயாணங்களால் இழப்பு ஏற்பட இடமுண்டு. ஆசிரியத்துறையினர் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள் : திங்கள், புதன், வெள்ளி.*

### இடபம்

தனிக்காட்டு ராஜா நீங்கள், எதையும் சாதிக்கும் துணிவை உதயத்தில் இருக்கும் சூரியன் செய்வார். பணவரவு தேடி வரும். இடமாற்றங்கள் சகஜம். பெரியவர்களின் உதவிகள் கிடைக்கும். கை,கால் உளைவு, நாரிநோ ஏற்படும். மாணவர்களுக்கு நற்பலன் சித்திகள் கிடைக்கும். தூரதேசப் பிரயாணங்களைத் தவிர்க்கவும். வியாபாரிகள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: புதன், வெள்ளி.*

### மிதுனம்

வரட்டு வேதாந்தம் பேசி காலத்தை ஏன் வீணாக்குகிறீர்கள். பிறருக்கு உதவி செய்து வாருங்கள். அதனால் நற்பலன் கிடைக்கும். கொடுத்த பொருள் வராது. களவு போகலாம். மாமன், மாமி வழியினருடன் வீண் வாக்குக் கலகம் ஏற்படலாம். கால் பிடிப்பு, சளித்தொல்லை கொடுக்கும். வைத்தியம் செய்து வாருங்கள் சுகமாகும்.

*அதிர்ஷ்டநாள்கள் : புதன், சனி.*

### கடகம்

மூத்த சகோதரரின் உதவிகளால் நன்மைகள் கொடுக்கும். இடமாற்றம் நன்று, வீடு, மனை, பொருள், வாகனச்செலவுகளால் கடன்படநேரிடும். அடுத்தவர் வேலையில் தலையிட்டு வீண் குறை கேட்காதீர்கள். மாணவர்களுக்கு சித்திகள் கிடைக்கும். அந்நிய உதவியால் சிறப்பு அடைவீர்கள். அரசியல்வாதிகள் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள் : புதன், சனி.*

### சிங்கம்

உறுதியான செயலால் மேலதிகாரிகள் வாழ்த்துதல், குழந்தைகளாலோ, சகோதரர்களாலோ யோசனை. தொழில் ஸ்தானத்தில் மாற்றம். பணவரவு, மருந்துச் செலவு, தாய் வழியினர் உபத்திரவம். புதியநட்பு, மனக்குழப்பம், அயலவரின் தொல்லைகள். வயிற்றுப் போக்கு, காய்ச்சல் ஏற்படும். களவுகள் போகலாம். கவனமாக இருக்கவும்.

*அதிர்ஷ்டநாள்கள் :- புதன், சனி.*

### கன்னி

தொழில் ஸ்தானத்தில் புதிய பிரச்சினைகள். கட்டுமீறிய செலவுகள். இடமாற்ற யோசனை, உறவினர்கள் வீண்பழி சுமத்துவர். பழைய வரவுகளால் அடிக்கடி ஆத்திரப்படுதல். புதிய திட்டங்களைத் தள்ளிபோடல், வாகன வசதியால் நன்மை ஏற்படும். கால், நாரி உளைவு ஏற்படும். வியாபாரிகள் நன்மையடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள், புதன், வெள்ளி, சனி.*

### துலாம்

புதிய நண்பர்களால் உதவி கிடைத்தல். இடமாற்றம், கல்வியால் மாணவர்கள் சிறப்பு அடைவர். எதிர்ப்பாலார் குறைசொல்லுவர். அரசியல்வாதிகளின் உதவி கிடைக்கும். குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். அரசியல் துறையினர்கள், குருத்துறையினர்களுக்கு புதிய வரவுகள் அதிகரித்தல் என்பன நடக்கப் பலன் உண்டு.

*அதிர்ஷ்டநாள்கள் :- திங்கள், புதன், சனி, வெள்ளி.*

### விருச்சிகம்

ஒரு புதிய விடிவுக்காகப் போராடுவீர்கள். பணவரவு, தெய்வபக்தி, மறைமுக எதிர்ப்பு, நண்பர்களுடன் வாக்குக் கலகம். தூரச்செய்திகள் மனக் கலக்கம், கவலைகள் அயலவர் வீண்பழி சுமத்துவர். பொருள் இழப்பு, மறதி, கால்வருத்தம் என்பனவற்றால் வருந்துவீர்கள். தெய்வத்தொண்டு சிறப்புத்தரும். அட்டமத்துச்சனியால் பிறரிடம் குறை கேட்பீர்கள். வியாபாரிகள் நன்மை அடைவீர்கள்.

*அதிர்ஷ்டநாள்கள் :- திங்கள், புதன், வெள்ளி, சனி.*

### தனுசு

அரச கௌரவம். புதிய திட்டமிட்டு வெற்றி. செலவுகள் அதிகரிக்கும். அன்னிய உதவிகள் கிடைக்கும். சக ஊழியர்கள் நன்மை அடைவர். புதிய வாகனசுகம் கிடைக்கும். பணவரவுக்கு திட்டமிடுவீர்கள். நாரி உளைவு சளித்தொல்லை ஏற்படும். வைத்தியம் செய்து சுகம் அடையுங்கள்.

*அதிர்ஷ்டநாள்கள் : ஞாயிறு, திங்கள், புதன், வெள்ளி, சனி.*

### மகரம்

வசதிகள் பெருகும். நண்பர்கள் உதவுவார்கள். பணவரவு புதிய வழிகளிலிருந்து கிடைக்கும். சகோதரருடன் சொத்து அல்லது பணம் சம்பந்தமான வாக்குக் கலகம், புதிய நண்பர்களால் உதவிகள் வரும். கால் வருத்தம் அதிகரிக்கும். மாணவர்கள் பிரயாணங்களைத் தவிர்க்கவும்.

*அதிர்ஷ்டநாள்கள் :- ஞாயிறு, திங்கள், வெள்ளி, சனி.*

### கும்பம்

பிறருக்கு உதவுதல், பணவரவு. தொழில் பீடத்தில் மேலதிகாரிகளின் உதவிகள் கிடைக்கும் . அயலவர்கள் பொருமல் குடும்பச் செலவு அதிகரித்தல். புத்திரர்களின் கல்விக்காக ஓடியாடித்திரிதல். வாகனத்தால் செலவு. சக தொழிலாளர்கள் தொல்லை தருவர். வீண்கலக்கம், மாணவர்கள் அவதிப்படுவர். ஆஸ்பத்திரிச் செலவுகள் வியாபாரிகள் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்ட நாள்கள் : ஞாயிறு, திங்கள், சனி.*

### மீனம்

காத்திருந்த ஒரு செயற்பாடு வெற்றி தராது. புத்திரர் பிரிவு. தூரதேசச் செய்தி அல்லது திடீர் பிரயாணம் வரவு மந்தமாகும். புதிய தொழிலுக்குத் திட்டமிடுதல். நண்பர்கள் உதவி செய்வார்கள். மருந்து வியாபாரிகள், கடல் தொழிலாளர்கள் பொருள் வளம் பெற்று நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: ஞாயிறு, திங்கள், சனி.*

**மகாதேவா ஜோதிடம்**


# பழுது பார்த்தல்

1975 ஆம் ஆண்டில் இருந்து 25 வருடங்களுக்கு மேலாக,
அனுபவமிக்க, விஷேட சேவையுடன் மக்கள் மத்தியில் நன்மதிப்பையும்,
பாராட்டையும் பெற்றுக் கொண்ட விசுவாசமிக்க சேர்விஸ் சென்டர்.

திறமை வாய்ந்த தொழில்நுட்ப வல்லுநர்கள் 40 பேர்களுடன்,
அதி நவீன தொழில்நுட்பத்தைக் கையாண்டு, ஒரே நாளில்
கொம்பியூட்டர் மயப்படுத்தப்பட்ட துரித சேவை,
ஒரு வருட உத்தரவாதம்!

**கெமரா பழுது பார்த்தல்**



**மின்சார உபகரணங்கள் பழுது பார்த்தல்**



டிஜிட்டல், ஸ்டில் & வீடியோ கெமரா, லென்சஸ், ஸூம் கெமரா பிளேக்ஸ் சேர்கியுற்,
றீபிளேஸ்மன்ட்ஸ், ஸ்டூடியோ பிளாஷஸ், கொம்பியுடரைஸ்ட்,
ஃபிளாஷ் கன்ஸ்ஹை-பை எம்பிலிபையர்ஸ், சற்டலைட்ஸ்.

LD, CD, VCD, DVD கெசட்ஸ், CD இயந்திரங்களை VCD யாக மாற்றுதல்
செலுலர் தொலைபேசிகள், பக்ஸ்மெசின்கள், கோட்லெஸ், அனலொக் தொலைபேசிகள்,
இலக்றோனிக் டைப்ரைட்டர்கள்,மைக்றோவேவ்ஸ் ஒவன், பொலிஷர், பிளென்டர்,
மின்சார விசிறிகள், சலவை இயந்திரங்கள், குளிர்சாதனப் பெட்டிகள், மோட்டார்கள்.

GRAYON

**DURST ELECTRONICS (PVT) LTD.**

364, காலி வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு-3. போன்: 2575480, 2565756
P.G. மாட்டினுக்கு எதிரிலும், ரேனுகா ஹோட்டலுக்கு அருகிலும் (கடல் பக்கம்)


# பேரம்பல வைரவர் ஆலய பொங்கல் விழா நேற்று

## 350 கடாக்கள், 100 கோழிகள் பலியிடப்பட்டன!

வலி.வடக்கு,ஜூன்13

தெல்லிப்பழை பேரம்பல வைரவர் ஆலய வருடாந்த பொங்கல் விழாவான நேற்று சுமார் 350இற்கு மேற்பட்ட கடாக்கள் பலியிடப்பட்டுள்ளன.

நேற்றுக் காலை முதல் கடாக்கள் அலங்கரிக்கப்பட்டு, உழவு இயந்திரங்கள் மற்றும் லான்ட் மாஸ்டரில் அயல் கிராமங்களில் இருந்து கொண்டுவரப்பட்டன.

வலி.வடக்குப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து வேறு இடங்களில் வசிப்பவர்களும் கூட கடாக்களை கொண்டுவந்து பலியிட்டனர்.

இந்த நிகழ்வில் சுமார் ஆயிரத்து ஐந்நூறுக்கு மேற்பட்ட அடியார்கள் கலந்துகொண்டனர். பொங்கல் நிகழ்வும் இடம்பெற்றது.

நூற்றுக்கு மேற்பட்ட கோழிகளும் பலியிடப்பட்டுள்ளன.

ஆலய சுற்றாடலில் கடாக்கள் 30ஆயிரம் ரூபா வரை விற்கப்பட்டதையும் அவதானிக்கமுடிந்தது.

(4-86)

# முற்போக்கு வாலிபர் கழகக் கட்டடம் பொலிஸாரால் நிர்வாகத்திடம் ஒப்படைப்பு

கொழும்புத்துறை,ஜூன்11

ஆரியகுளம் முற்போக்கு வாலிபர் கழகக் கட்டடம் 8 வருடங்களின் பின்னர் கழக நிர்வாகிகளிடம் பொலிஸாரினால் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கட்டடம் 1996 ஆம் ஆண்டு தொடக்கம் ஆரியகுளம் சந்திப் பகுதியில் நிலைகொண்டிருந்த இராணுவம் மற்றும் பொலிஸாரினால் பயன்படுத்தப்பட்டு வந்தது.

தமது கழக செயற்பாடுகளையும் படிப்பகத்தையும் மீள ஆரம்பிக்க வசதியாகக் கட்டடத்தை ஒப்படைக்குமாறு தாம் பல தடவைகள் சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை விடுத்து வந்ததை அடுத்து கடந்த 8ஆம் திகதி பொலிஸார் கட்டடத்தைத் தம்மிடம் ஒப்படைத்துள்ளதாக கழகச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

கழகத்தையும் கட்டடத்தையும் புனரமைத்து விரைவில் செயற்பட வைக்க முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

(10-30)

## கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!


முருகைக் கற்பாறைகள் 93 நாடுகளில் குறிப்பிட்டுச் சொல்லுமளவுக்குத் தரம் இழந்துள்ளன. உலகில் மீந்திருக்கும் பவளப் பாறைகளில் 60 வீதமானவை வரும் 30 ஆண்டுகளுக்குள் பாரிய அழிவைச் சந்திக்கும் அபாயத்தில் இருப்பதாக அறியப்பட்டுள்ளது.

## நாளை கொடியேற்றம்

14.06.2004 திங்கட்கிழமை சுழிபுரம், பறாளாய்

### ஈசுர விநாயகரின் கொடியேற்றத் திருவிழா

நேரம்: முற்பகல் 10.30 மணியளவில் (33012)(34-14) - சோழியூரான் - பிறைசூடிக்குரு.




### தேவை

திருநெல்வேலியில் இயங்கும் கணனி நிறுவனத்திற்கு ரைப் செற்றிங் தெரிந்த பெண்பிள்ளைகள் தேவை.

விளம்பர இல.:2298

C/O உதயன், யாழ்ப்பாணம். (33021)

### படிவம் (HNDE)

இலங்கை உயர்தொழில்நுட்ப நிறுவனத்தில் உயர்தேசிய பொறியியல் டிப்ளோமா கற்கைநெறிக்கு (HNDE) விண்ணப்பிப்பதற்கான படிவம் விற்பனைக்கு உண்டு.

விண்ணப்ப முடிவுதிகதி :09.07.2004.

BHARATHI PATHIPPAKAM
OFFSET PRINTERS
430, K.K.S. Road, Jaffna. (33556)

### கண்ணீர் அஞ்சலி



இடைக்காடு மாணிக்க இடைக்காடர் சனசமூக நிலையக் கட்டட நிர்மாணத்துக்கு நிதயுதவி செய்ததுடன் கட்டட நிர்மாணப் பணிகளை முன்னின்று திட்டமிட்டு நெறிப்படுத்திய வரும் எமது கிராமத்தின் சிறந்த சேவையாளனுமாகிய

கட்டடக்கலைஞர்

**வே.நமசிவாயம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இடைக்காடு மாணிக்க இடைக்காடர் சனசமூக நிலைய உறுப்பினர்களும், இடைக்காடு வாழ் மக்களும்.

(33017)(37-34-14)

புகைத்தல், வெற்றிலை மற்றும் மதுபானப் பாவனையாளர்களுக்கென விசேடமாக தயாரிக்கப்பட்ட

## SMOKERS HEALTH

புகைத்தல், வெற்றிலை, மதுபானம் என்பவற்றின் பாவனையினால் வாயில் ஏற்படும் பக்கவிளைவுகளுக்கும், துர்நாற்றம், இரத்தம்கசிதல், பல்கூச்சம், வாய் சுருங்குதல் மற்றும் பல்லில் ஏற்படும் கறைகளை நீக்கி பற்களுக்கு வெண்மை தர தற்போது யாழ்ப்பாணத்தில் அறிமுகமாகிறது.

தற்போது அனைத்து பாமசிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.




முற்றிலும் இயற்கை மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்பட்ட ஓர் உன்னத பற்பசை

இலங்கையில் சந்தைப்படுத்துவோர்.
SB PHARMAEXIM
COLOMBO- 15

(33016)

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 20 - 07 - 1940



விண்ணில் 26 - 05 - 2003

அமரர் **மாணிக்கசாமி வைத்தீஸ்வரன்**

(ஓய்வுபெற்ற காணிப் பதிவாளர் - யாழ்.மாவட்டம்)

கனவுதிர்ந்து காலடியில்
கனன்றது போல
மலருதிர்ந்து மண்ணாகிப்
போனது போல
நீயுதிர்ந்து போனாலும்
- எம் நெஞ்சில்
உதிராமல் உயிர்வாழும்
உன் நினைவுகள்.

அன்புடன்:
மனைவி,
பிள்ளைகள்.

204, Dr.சுப்பிரமணியம் ரோட்,
சுன்னாகம். (33022)(39-34-14)

### நீங்கா நினைவினில் 8 ஆம் ஆண்டு

அன்னை மடியில் 21 - 02 - 1977



அமரன் அடியில் 13 - 06 - 1996

செல்வன் **வேலு சனகன்**

(முன்னாள் மாணவன், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி)

எட்டாண்டுகள் ஆனாலும் எம்துயர் மாறாது! என்றும் உன் நினைவுகளோடும் உணர்வுகளோடும் கலந்துவாழும்

அம்மா, அக்காமார், தங்கை, அத்தான்மார், மருமகள், மருமகன்.

அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.
(33019)(34-14)

உங்கள் தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்தின்

கச்சிதமான செயல்பாடுகளுக்கு

METASUN

## செல்ப் டயலிங் மெஷின்



1 வருட உத்தரவாதம்



ஒப்பிடமுடியாத வரிசைகளில்
STD / ISD / PCO மொனிடர்களுடன்
குறைந்த விலையில்
உயர் தொழில் நுட்பத்துடன்

- 1500 அழைப்புகளையும் 10000 நிலைய பெயர்களையும் களஞ்சியப்படுத்தலாம்
- 60 நாளைய கணக்காய்வு அறிக்கையை களஞ்சியப்படுத்தலாம் (365 நாள் தெரிவு)
- கணக்காய்வு நாள் அறிக்கை மற்றும் தன்னியக்க பிரிண்ட் அவுட்
- அழைப்புகளின் எண்ணிக்கை காட்சியளித்தல்
- கணக்கு வைக்கும் வசதி
- 40 மணி நேர பாட்டரி

ஹொட்லைன் 071-4808872

மதுரா ஹோல்டிங்ஸ் இன்டர்நெஷனல் பிரைவட் லிமிடெட்

# 9-2/3, 33 வது ஒழுங்கை, காலி வீதி, கொழும்பு 06.
தொலைபேசி: 2552553, 4517750 பெக்ஸ்: 4517718
இ-மெயில: mathurh@sltnet.lk

உதயன்

# இடைக்கால நிர்வாகமே இன்றைய அவசிய தேவை

நாட்டின் தேசியப் பிரச்சினையான இனப்பூசலுக்கு பேச்சு மூலமான அமைதித் தீர்வைக் காணும் முயற்சியில், இப்போது சர்ச்சைக்கு உள்ளாகியிருப்பது இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை விடயமாகும்.

இனப்பூசலுக்கு இறுதித் தீர்வு காண்பதற்கு நீண்ட காலம் பிடிக்கும். யுத்தத்தின் அவலத்தினால் அல்லற்பட்டு அவஸ்தைப்படும் தமிழர் தாயக மக்களின் அவசரமான அன்றாடப் பிரச்சினைகள் முதலில் தீர்க்கப்படவேண்டும். இடம்பெயர்ந்து, அன்றாட ஜீவனோபாயத்தை - தொழிலை - இழந்து, வாழவழியின்றி, நிர்க்கதி நிலையில் தவிக்கும் பல்லாயிரக்கணக்கான தமிழர்களுக்கு அவசர - அவசிய - மனிதாபிமானப் பணிகளை முன்னெடுப்பதே இன்றைய காலத்தின் கட்டாயப் பணியாகும்.

அதனை நிறைவு செய்யவே இடைக்கால நிர்வாகசபை அவசரமாகவும், அவசியமாகவும் தேவைப்படுகின்றது. தமிழ் மக்களின் இந்தக் கோரிக்கையின் நியாயம் சர்வதேசத் தாலும் உணரப்பட்டிருக்கும் நிலையில் அதற்கு இணங்கு வதற்கு இலங்கை அரசு மறுத்து வருகின்றது.

சமாதானப் பேச்சுகளில் இவ்விடயம் முன்னுரிமை பெறு வதைத் தவிர்ப்பதற்காகத் தந்திரமாக நடக்க முயல்கிறது அது. தந்திரோபாய யுக்திகளை நாடியும் நிற்கின்றது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட ஈழத்தமிழர்களின் அன்றாட - அவசிய - அவசர - தேவைகளை நிறைவு செய்யாமல் -

புனர்வாழ்வு - புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொள் ளாமல் -

யுத்தக் கொடூரங்கள், பாதிப்புக்களிலிருந்து அவர்களை மீட்பதற்கான நிவாரண நடவடிக்கைகளை முன்னெடுக் காமல் -

இதுவரை பார்த்திருந்த அரசு இப்போது தனது சுருதியை மாற்ற முயல்கின்றது.

யுத்தத்தால் பாதிப்புற்ற மக்களின் அவசர - அன்றாட - தேவைகளை நிறைவு செய்யாமல், வந்த நிதியை யுத்த தீவிரத்துக்குக் கொட்டிக் கொடுத்த அரசுத் தரப்பு இப்போது புதிய வேடம் போட - நாடகம் ஆட - முயல் கின்றது.

உததேச இடைக்கால நிர்வாக சபை நிறைவு செய்யக் கூடிய - நிறைவுசெய்யவேண்டிய பணிகளை வேறு வடிவங்கள், அமைப்புகள் மூலம் இப்போது செயற்படுத் துவது போன்ற தோற்றத்தை ஏற்படுத்துவதன் வாயிலாக, இடைக்கால நிர்வாக சபையே அவசியமற்றது என்பது போன்ற ஒரு மாயையினை உருவாக்க அது முயல்கின்றது.

ஜனாதிபதி தமக்குக் கீழ் புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சை நேரடியாக வைத்துக் கொண்டு வடக்கு - கிழக்கில் புனர்வாழ்வு மற்றும் மனிதாபிமானப் பணிகளை முன்னெடுக்கப் போகின்றவர் போல தடல் புடல் ஏற்பாடு களைச் செய்து காட்சி காட்டுவதும் -

இதுவரை புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகள் குறித்து அதிகம் சிந்திக்காது தூங்குபவர் போல இருந்த வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர், திடீரென விழித்து எழுந்து இந்த விடயங்களைத் தாமே பெருத்த எடுப்பில் கையா ளப் போகின்றவர் போல கூட்டங்களைக் கூட்டி ஆர வாரப்படுத்துவதும் -

வடக்கு - கிழக்கில் புனர்வாழ்வு மற்றும் மனிதாபிமா னப் பணிகளைத் தற்சமயம் மேற்கொண்டு வரும் சர்வ தேச நிறுவனப் பிரதிநிதிகளுக்கு திடீரென கொழும்பில் உயர்மட்ட மாநாடுகளை நடத்துவதும் -

- இவ்வாறு இடைக்கால நிர்வாக சபையின் அவசி யத்தை குறைத்து, அது தேவையற்றது என்பதை வெளிப் படுத்திக்காட்ட மேற்கொள்ளப்படும் எத்தனங்களே அன்றி வேறில்லை.

இப்படிச் செய்வதால் வடக்குக் கிழக்கில் தமிழர் தாய கத்தில் - புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளை முன்னெடுப் பதில் அரசு அதீத அக்கறை கொண்டுள்ளது என்பது அர்த்தமல்ல.

அத்தகைய பணிகளை முன்னெடுப்பதாகக் காட்டு வதன் மூலம் சர்வதேச உதவிகளை அதிகம் கறந்து, அரசுத் தேவைகளுக்குப் பயன்படுத்திக் கொள்வதே அரசின் உள்நோக்கம், திட்டம், கபட எண்ணம் எல்லாமே.

ஆனால், அமைதிப் பேச்சுக்களை - சமாதான முயற்சி களை - ஆக்கபூர்வமான முறையில் அரசு முன்னெடுக்காத வரை சர்வதேச உதவிகள் கிடைக்கப்போவதில்லை.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை குறித்து மட்டும் முதலில் பேசி, அதை அமைத்துச் செயற்படுத்து வதற்கு அரசு இணங்காதவரை சமாதானப் பேச்சுகளுக்குப் புலிகளும் இணக்கப்போவதில்லை.

ஆகவே, இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை உருவாக்குவதற்கு இணங்கிப் பேச்சு நடத்த அரசு முன்வராதவரை சர்வதேச உதவிகள் கிடைக்க வாய்ப் பேயில்லை என்பதை அரசு உணர்ந்து கொள்ளவேண்டும்.

எனவே, இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை ஆற்றவேண்டிய பணிகளை அந்தச் சபையின் முக்கியத் துவத்தைக் குறைக்கச் செய்யும் முயற்சியாக வேறு அமைப்புகள் மூலம் முன்னெடுக்கும் 'குயுக்தி' வேலையை விட்டுவிட்டு, இடைக்கால நிர்வாக சபையை அமைப்பது குறித்துப் பேசி, முடிவு கண்டு, அதனை நடைமுறைப் படுத்துவதற்கு அரசு முன்வருவதே சாலச் சிறந்த தாகும்.

அதுவே, நாட்டுக்கும், மக்களுக்கும் நன்மை பயக்கக் கூடிய நல்லதைத் தரும் என்பதை அரச உயர் பீடத்தில் இருப்போர் உணர்ந்து கொள்வது மெத்தவும் நல்லது.

# உலக வங்கியின் நிதியுதவியுடன் நான்கு கிராமங்களில் 100 வீடுகள்

கொக்குவில்,ஜூன்13

உலக வங்கியின் நிதியுதவியுடன் யாழ்ப்பாணத்திலுள்ள நான்கு கிராமங்களில் தலா 25 வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

கடந்த கால யுத்த அனர்த்தங்களினால் அழிவடைந்த அல்லது சேதமடைந்த வீடுகளைப் புனரமைக்கும் நோக்குடன் வீடமைப்புத்திட்டமொன்றினை வடக்கு - கிழக்கில் செயல்படுத்து வதற்கு உலக வங்கி முன்வந்துள்ளது.

இத்திட்டத்தில் முதற் கட்டமாக யாழ்.மாவட்டத்தில் தென்ம ராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் மட்டுவில் கிராமமும், யாழ்ப் பாணம் பிரதேச செயலர் பிரிவில் கொழும்புத்துறை கிராமமும், நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் அரியாலை கிராமமும், மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் ஆழியவளை கிராம மும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இக்கிராமங்கள் ஒவ்வொன்றிலும் தலா 25 வீடுகள் அமைக்கப் படவுள்ளன.

வீட்டின் 60 சதவீதத்துக்கு மேற்பட்ட பகுதி சேதமடைந் திருந்தால் அதனை முழு அழிவாகக் கருதி அதன் புனரமைப் புக்கு ஒரு லட்சத்து 60 ஆயிரம் ரூபா வழங்கப்படும்.

வீட்டின் சேதம் 60 சதவீதத்திற்குக் குறைந்திருந்தால் அதனைப் புனரமைப்பதற்கு 50 ஆயிரம் ரூபா வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(4-76)

# மூவாயிரம் பட்டதாரிகள் வேலை கோரி விண்ணப்பம்

கொக்குவில்,ஜூன்13

வேலையற்ற பட்டதாரிகளை அரச சேவையில் சேர்த்துக் கொளளும் திட்டத்தில் யாழ்.மாவட்டத்தில் இதுவரை 2 ஆயிரத்து 977 பட்டதாரிகள் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் 207 விண்ணப்பங் களும், கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் 327 விண்ணப்பங் களும், பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 235 விண்ணப்பங களும், நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 437 விண்ணப்பங் களும், சங்கானை பிரதேச செயலர் பிரிவில் 185 விண்ணப்பங் களும் கிடைத்துள்ளன.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 212 விண்ணப்பங் களும், உடுவில் பிரதேச செயலர் பிரிவில் 295 விண்ணப்பங் களும், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 248 விண்ணப்பங் களும், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் 296 விண்ணப்பங் களும், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 351 விண்ணப்பங களும் கிடைத்திருக்கின்றன.

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவில் 15 விண்ணப் பங்களும், மருதங்கேணிப் பிரிவில் 34 விண்ணப்பங்களும், காரைநகர் பிரிவில் 55 விண்ணப்பங்களும், வேலணை பிரிவில் 42 விண்ணப்பங்களும், நெடுந்தீவு உதவி அரச அதிபர் பிரிவில 01 விண்ணப்பமும் கிடைத்திருக்கின்றன.

பதிவு செய்த வேலையற்ற பட்டதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சைகள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக நடைபெற்று வருகின்றன.

(4-76)

# அரச ஊழியர்களுக்கு ஆக்கத்திறன் போட்டிகள்

வலி.வடக்கு,ஜூன்13

அரச ஊழியர்களுக்கான ஆக்கத்திறன் போட்டியொன்றை மத்திய அரசின் பண்பாட்டஅலுவல்கள் திணைக்களம் நடத்த வுள்ளது.

அரச மற்றும் அரசுடன் இணைந்த நிறுவனங்களில் சேவை யாற்றும் ஆக்கத்திறன் மிக்கவர்களின் ஆற்றல்களை ஊக்கு வித்து அவர்களின் படைப்பாற்றலை வெளிக்கொண்டுவரும் வகையில் இப்போட்டிகள் நடத்தப்படவிருக்கின்றன.

சிறுகதை, இசைப்பாடல், கவிதை, சிறுவர் கதைகள் என நான்கு பிரிவுகளாக இப்போட்டிகள் இடம்பெறவுள்ளன.

சிறுகதைகள் 1500 சொற்களுக்கு மேற்படாதவாறும், கவிதை கள் 3 முதல் 3¼ நிமிடங்களுக்கு வாசிக்கக்கூடியதாகவும், இசைப்பாடல் 10 அடிகள் (வரிகள்) கொண்டதாகவும் இருக்க வேண்டும்.

சிறுகதைகள் 10 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு பொருத்த மானதாகவும் நாட்டின் எதிர்காலத்தை ஒளிமயமாக்ககூடிய தாகவும் சிந்தனைகள் மனதை தொடக் கூடியதாகவும் கலர் படங்கள் உட்பட 16 பக்கங்களுக்கு உட்பட்டதாகவும் இருக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

ஒரு போட்டியாளர் போட்டியொன்றுக்கு ஒரு ஆக்கம் என்ற அடிப்படையில் நான்கு போட்டிகளிலும் கலந்துகொள்ள முடியும்.

விண்ணப்பங்களை அடுத்தமாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் திணைக்களத்தலைவரின் சிபார்சுடன் சிரேஷ்ட உதவிச்செய லாளர், கலாசார மேம்பாட்டுப்பிரிவு, கலாசார மற்றும் தேசிய விழுமியங்களுக்கான அமைச்சு, 8 ஆவது மாடி, செஞ்சிறிபாய, பததரமுல்ல என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக் கப்பட்டுள்ளது.

(4-86)

## வடக்கு - கிழக்கில்

# கண்ணி அகற்றும் பணிக்கு ஜப்பான் அரசு நிதியுதவி

கொழும்பு,ஜூன்13

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் கண்ணிவெடிகளை அகற றும் திட்டத்துக்கு ஜப்பான் அரசு 18லட்சம் அமெரிக்க டொலர் களை உதவியாக வழங்கமுன்வந்துள்ளது.

எதிர்வரும் 2006ஆம் ஆண்டின் முடிவில் கண்ணிவெடி அற்ற நாடாக இலங்கையைப் பிரகடனப்படுத்தும் அரசின் திட்டத்தை நடைமுறைப்படுத்த இந்த நிதி பயன்படுத்தப்படும் என்று தெரி விக்கப்படுகிறது.

நோர்வே மக்கள் நிதி, டென்மார்க் கண்ணிவெடியகற்றும் குழு, ஹலோ ட்ரஸ்ட் கண்ணிவெடிகள் ஆலோசனைக்குழு ஆகியவற்றுக்கு இந்த நிதி பகிர்ந்தளிக்கப்படவுள்ளது எனவும் கூறப்பட்டது.

இதற்கான உடன்படிக்கைகள் எதிர்வரும் 18ஆம் திகதி நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் நல்லிணக்க அமைச்சில் கைச் சாத்திடப்படவுள்ளன. இந்த உடன்படிக்கைகளில் கண்ணி வெடி அகற்றும் அமைப்புகளும் ஜப்பானியத் தூதரகமும் கைச் சாத்திடவுள்ளன என்று தெரி விக்கப்பட்டது.

(4-9)

**நாளை**

வைகாசி 32
திங்கட்கிழமை
(14.06.2004)
திதி: துவாதசி
இரவு 8.50 வரை.
நட்சத்திரம்:பரணி
பின்னிரவு 2.17 வரை
சுபநேரம்: 11.53 - 1.23
ராகுகாலம்: 7.23 - 8.53
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

புண்பட்ட மனதைத் தேற்றக் கூடியன ஆறுதல் வார்த்தைகளும் கனி வான பேச்சும் தான்.

# கணவனை இழந்தோருக்கு சண்டிலிப்பாயில் கடனுதவி

வலிகாமம் தெற்கு,ஜூன்13

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்குட்பட்ட கணவனை இழந்த குடும்பப் பெண்களுக்கு சுழற்சி முறையில் கடன் உதவி கள் வழங்கப்படவுள்ளன.

இக்கடனுதவிகள் யாவும் கிராம சேவையாளர்கள் ஊடாக வழங்கப்படவுள்ளன. இதுதொடர்பான விண்ணப்பங்கள் அந்தப் பகுதி கிராம சேவையாளர்களால் தற்பொழுது திரட்டப்பட்டு வருகின்றன.

கடந்த கால யுத்தங்கள் மற்றும் வன்முறை சம்பவங்களால் கணவனை இழந்த, வறிய நிலையில் உள்ள குடும்பப் பெண் களுக்கு முன்னுரிமை அடிப்படையில் இக்கடன்கள் வழங்கப் படவுள்ளன.

(4-152)

# நாய்களுக்குப் பயிற்சி!

ஒட்டுசுட்டான்,ஜூன்13

கணணிவெடிகளை மோப்பம் பிடித்து அறிவதற்காக அமெரிகக மோப்ப நாய்களுக்கு வவுனியாவில் பயிற்சி வழங்கப்பட்டுவரு கின்றது.

ஆறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டு வரும் இந்த நாய்கள் இம்மாத நடுப்பகுதியிலிருந்து கண்ணி அகற றும் பணிகளில் ஈடுபடுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நாய்கள் அனைத்தும் அமெரிக்க அரசினால் நன்கொடை யாக வழங்கப்பட்டவை என ஐ.நா.அபிவிருத்தித் திட்டத்தின் தகவல் அதிகாரி ருக்கான் இரத்தினம் தெரிவித்தார்.(4-341)

# சாரதாதேவி அன்னை ரதம் திருமலைக்குப் பவனி

யாழ்ப்பாணம்,ஜூன்13

பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா ஆச்சிரமத்திலிருந்து தூய அன்னை ஸ்ரீசாரதா தேவியின் ரதம் திருகோணமலைக்குப் பவனி செல்லவுள்ளது.

எதிர்வரும் 16ஆம்திகதி புதன்கிழமையன்று அன்னையின் ரதம் புறப்படும். வழியெங்கும் உள்ள பாடசாலைகளில் சிறப்பு நிகழ்வுகள் இடம் பெறும். கிளிநொச்சியில் மகாதேவா ஆச்சிர மத்தை சென்றடையும் ரதம், மறுநாள் வியாழக்கிழமை திருகோண மலையை நோக்கிப்புறப்படும்.

தூயஅன்னை ஸ்ரீசாரதாதேவியின் 150ஆவது பிறந்தநாளை முன்னிட்டு பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா ஆச்சிரமத் தால் இப்பவனி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

(9-173)

# மாணவர்களின் முதுகுச் சுமை அடுத்த வருடத்துடன் குறைகிறது!

கொழும்பு,ஜூன்13

பாடசாலை மாணவர்களின் முதுகுச் சுமை அடுத்த வருடம் முதல் குறையப்போகிறது. இந்தச் சுமையினைக் குறைக்கும் நோக்குடன் அடுத்த வருடம் முதல் சகல பாடப் புத்தகங்களும் மூன்று பிரிவுகளாக அச்சடித்து வழங்கப்படவிருக்கின்றன.

இது வரைகாலமும் மூன்று தவணைகளுக்குமான பாடத் திட்டங்கள் அடங்கிய புத்தகங்கள் ஒரே தடவையில் - பெரிய அளவில் அச்சிட்டு மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்தன.

இதனால், மாணவர்களின் புத்தகச்சுமை அதிகமாக இருக் கிறது எனவும் மாணவர்கள் உடல், உள ரீதியாகப் பாதிப் படைவதற்கு இது வழி வகுக்கிறது எனவும் சுட்டிக் காட்டப் பட்டு வந்தது.

இதனையடுத்தே, அடுத்த வருடம் முதல் ஒவ்வொரு தவணைக்குமான பாடத்திட்டங்களைத் தனித்தனிப் புத்தகங் களாக அச்சிட்டு மாணவர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக கல்வி அமைச்சு அறிவித்திருக்கிறது.

இதன் பின்னர் மாணவர்கள் அந்தந்தத் தவணைக்குரிய பாடப்புத்தகங்களை மட்டுமே பாடசாலைக்கு கொண்டு செல்ல முடியும்.

பெரிய பெரிய புத்தகங்கள் அடங்கிய புத்தகப்பைகளை முதுகிலே சுமந்து கொண்டு வளைந்து நெளிந்து பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களே! கவலையை விடுங்கள்; அடுத்த வரு டம் தொடக்கம் உங்களின் சுமை குறையப்கிறது. (4-ரி)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

தற்போது பாவனையிலுள்ள மோட்டோரோலா (சோலர் இல்லாதது) தொலைபேசி விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: T.P.:0777 563107. (32915)

நல்லநிலையிலுள்ள 3ஸ்ரீ மொறிஸ்மைனர் கார் விற்பனைக்கு உணடு. தொடர்பு: 67, கண்டிவீதி, யாழ்ப்பாணம் (கச்சேரியடி சோமசுந்தரம் அவெனியூவுக்குஅருகில்). (32955)

அச்சகத்துக்குரிய அமர்த்தும் இயநதிரம், மரஅலுமாரிகள், T.V. ஸ்ராண்ட், உபயோகித்த நாய் வளர்க்கும் கூடு, பெண்களுக்கான (24") சிறிய சைக்கிள் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: த.குமாரசாமி, 352, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.(32974)

7 மாதம் நிரம்பிய, தடுப்பூசிகள் யாவும் போடப்பட்ட கறுப்புநிற டோமன் பெண் நாய்க்குட்டி விற்பனைக்கு உணடு. தொடர்பு:65, நல்லூர் குறுக்கு வீதி, நல்லூர். (32996)

ஒறிஜினல் இத்தாலியன் வெஸ்பா ஸ்கூட்டர் (செல்வ் ஸ்ராட் மொடல்) உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 96, அம்பலவாணர் வீதி, அத்தியடி,யாழ்ப்பாணம். (32971)

யாழ்ப்பாணம்,சோமசுந்தரம் அவனியுவில், இல.20 இல் 10½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை. தொடர்பு: 452, பிரதான வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 0777 - 283636 (ஜெயக்குமார்). (32986)

கலர்மீன்கள், தொட்டிகள், அழகுப் பொருட்கள், பூங்கன்றுகள், சாடிகள், பல இனக்குருவிகள், கூடுகள், அல்சேஷன், பொமனேரியன் நாய்க்குட்டிகள் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 40/11, தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம். (32895)

**Pure Bred Doberman Pincher** (2½ மாதம் நிரம்பிய) ஆண் நாய்க்குட்டி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (32959)

நல்ல தரமான **Prima Broiler** மற்றும் **Prima Layer (Brown/White)** கோழிக்குஞ்சுகள் 21.06.2004 பிற்பகல் விநியோகிக்கப்படும். **Suddi Farm** (வட்டுக்கோட்டை), பருத்தித்துறைக்கிளையிலும் பெறறுக்கொள்ளலாம். முன்கூட்டியே பதிவுசெய்யவும். தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுஙகை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (32960)

5 மாதங்கள் பாவித்த **Intel Inside Pentium 4 Computer** விற்பனைக்குண்டு. தொடர்பு: இ.பிரபாகரன், 252, கொழும்புத்துறை வீதி, கொழும்புத்துறை யாழ்ப்பாணம்.T.P.:077 6176644. (32966)

கடையிற்சுவாமி வீதி, நீராவியடி யாழ்ப்பாணத்தில் வீடு கட்டக்கூடிய 3பரபபுக் காணி விற்பனைக்கு உணடு. தொடர்பு:வி.செந்தூரன்,11/27, பிறவுண் வீதி,யாழ்ப்பாணம், தொ.பே.:222 5690 (33008)

**SONY TV 21" Made in Japan** (பாவித்தது) **Model KV 2182/83** விற்பனைக்கு உண்டு. விலை 14,500/= தொடர்புகளுக்கு: S.மகேஸ்வரன், காங்கேசன்துறை வீதி, (சிறுவர் பூங்கா முன்பாக), மல்லாகம். (33007)

**T.V.S Scooty Pep, Organ** மற்றும் கதிரை, மேசை என்பன விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு:122, இரண்டாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். T.P.: 0777 247969 (33006)

பண்டத்தரிப்பு, அரசடிவீதி, வலது பக்க இரண்டாவது ஒழுங்கையில் 9 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவேண்டிய முகவரி: சு.சணமுகநாதன் (சின்ராசா), அரசடி வீதி, வடலியடைப்பு, பண்டத்தரிப்பு. (சி-35554)

தனிப்பாவனையில் உள்ள புதிய **Bajaj Legend (Four Stroke Model) Scooter** மற்றும் **Panasonic CD Player (5CD Player,VCD,MP3)** ஆகியன விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: திரு.சுதாகர்,55/23 தலையாழி, கொக்குவில். (33003)

பகிராஇன புறொயிலர் குஞ்சுகளும், பிறீமாஇன சிவப்பு வெள்ளைப் பேட்டுக்குஞ்சுகளும் 16.6.2004 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும். தொடர்பு: ராஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி, T.P:3529,2867, P.ரவி தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (32999)

## தேவை

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் 2 பரப்புக் காணி அல்லது வீட்டுடன் சேர்ந்த காணி உடன்தேவை. தொடர்புகட்கு: 0777 689547. (33000)

## மணமகள் தேவை

யாழ். புலோலி உயர் கௌரவ இந்து குடும்பத்தைச் சேர்ந்த,பெற்றோர் தமது 31வயதுடைய கொழும்பில் பிரபல கம்பனியில் 10,000/= மேல்வருமானம் பெறும் காணிகளும் உடைய புத்திரனுக்கு அதே குலத்தில் அரச தொழில் புரியும் பெண்ணைத் தேடுகின்றனர். ஜாதகக் குறிப்பு விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். தொடர்பு: S.சிதம்பரநாதன், புங்கடி, கொடிகாமம் றோட், புலோலி தெற்கு, பருத்தித்துறை. (32929)

## வாடகைக்கு

அரசாங்க உத்தியோகத்தருக்கும், பல்கலைக்கழக மாணவர்களுககும், வெளிமாவட்ட உத்தியோகத்தாகளுககும் ஏற்ற தனி அறைகள் யாழ். நகரில் வாடகைக்கு உண்டு. 16.06.2004 ஆம் திகதிக்கு முன் தொடர்புகொள்ளவும். விளம்பர இல.: 2296, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (33009)

யாழ். நகரில் இல.16, கந்தப்பசேகரம் வீதியிலுள்ள புதிதாக அமைக்கப்பட்ட சகல வசதிகளுடன் கூடிய 1800 ச.அடி (900+900) கட்டடம் வாடகைக்குக் கொடுக்கப்படவுள்ளது. இன்று (13.06.2004) ஞாயிறு தொடர்பு கொள்ளவும்.தொடர்பு: 222-3130. (33010)

## வீடு விற்பனைக்கு

27/17, புங்கன்குளம் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணத்தில் அழகிய மேலமாடியுடன் (மொட்டை மாடியுடன் - சமுர்த்தி வங்கிக்கு முன் ஒழுங்கையில்) நல்ல சூழலில் வாகனத் தரிப்பிட வசதியுடன் 3 பரப்புக்காணியில் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0777 305533, 0777 570279. (சி-35429)

நீர்கொழும்பில் சகல வசதிகளுடன் கூடிய சொகுசு மாடி வீடுகள் விற்பனைக்கு உண்டு. உங்களின் விருப்பத்திற்கேற்ப தெரிவுசெய்வதற்கும் கட்டணங்களைத் தவணைமுறையில் செலுத்துவதற்கும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. தொடர்புகளுக்கு:T.P:0714 944952, 0712 300847. (33005)

## தவறிவிட்டது

மல்லாகம் (விசாலாட்சி வித்தியாசாலை), பாடசாலை ஒழுங்கையைச் சேர்ந்த அ.அரியதாசன் என்பவருடைய கைக்கடிகாரம் (கசியோ) ஒன்று மல்லாகம் சந்திக்கும், சுன்னாகம் சந்திக்குமிடையில் 12.06.2004 சனிக்கிழமை காலை 9மணியளவில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (33020)

### ஓட்டோ விற்பனைக்கு

17-xxxx இலக்கமுடைய ஓட்டோ உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:
பிள்ளையார் பலம் பொருள் வாணிபம், தாவடி. (33001)

### விற்பனைக்கு

சொந்தப் பாவனையிலுள்ள 10ஸ்ரீ தொடரிலக்கமுடைய "வோக்ஸ் வகன்"கார் விற்பனைக்குண்டு.
தொடர்பு: இல.555
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
**கிழமை நாள்களில் காலை 9 மணி முதல் மதியம் 1 மணி வரை.**
(32824)

### விற்பனைக்கு

41சிறீ தொடரிலக்கமுடைய ELF150[அலுமினிய (Body) பொடி] எல்ப்ரக வாகனம் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
**0773000834**
(சி35551)



இணைப்புக்களுடனான மேசைத் தொலைபேசி
விசேட கழிவில் விற்பனைக்கு!
24 மணி நேரத்தில் பக்கேஜ் இணைப்புக்களுடனான மேசைத் தொலைபேசி எப்பிரதேசத்திற்கும் பொருத்தித் தரப்படும்
HAND PHONE பழுது பார்க்கப்படும்.
HAND PHONE UNLOCK செய்து தரப்படும்
எமது சேவை கேபிள் இணைப்புக்கள் இல்லாமல் எப்பிரதேசத்திற்கும் இயங்கக்கூடிய சேவை என அறியத் தருகின்றோம். அத்துடன் அன்ரனா மூலம் இயங்குகின்றது. மொபிடெல் ஸ்ரீலங்கா ரெலிகொம்முடன் முற்றுமுழுதான துணை நிறுவனம்.
உள்வரும் அழைப்பு முற்றிலும் இலவசம்
I.D.D இணைப்புக்கள் ஸ்ரீலங்கா ரெலிகொம் கட்டணம் 25/=
மொபிடெல் ஸ்ரீலங்கா ரெலிகொம்முடன் முற்றுமுழுதான துணை நிறுவனம்
பவர் செல்லுலர் ட்ரேடிங் கம்பனி
இல. 185, முதலாம் மாடி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
வின்சர் தியேட்டர் முன்பாக நியூ லலிதா கட்டடம் (கடை முதலாம் மாடியில் உள்ளது)
T.P.: 021 222 7070
071 239 9220
077 723 1521
(C/35485)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்



ஈழவன்

நயினாதீவைச் சேர்ந்த
திரு.திருமதி ரங்கேஸ்வரன் - சிவானந்தி
தம்பதிகளின் செல்வப் புதல்வன்

### ரங்கேஸ்வரன் ஈழவன்

13 - 06 - 2004

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (13.06.2004) ஞாயிற்றுக் கிழமை லண்டனிலுள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, யாழ்ப்பாணத்திலுள்ள அப்பம்மா, சித்தப்பா, சுவிஸில வசிக்கும் பெரியப்பா குடும்பம், கனடாவில் வசிக்கும் மாமி குடும்பம் மற்றும், யாழ்ப்பாணத்தில் வசிக்கும் தாத்தா, அம்மம்மா, சித்திமார்கள், மாமா மற்றும் உற்றார், உறவினர்கள் நயினை நாகபூசணி அம்மன் அருள் பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

(C/32917)

புளியங்கூடல்.

தகவல் :-
மு.நாகராஜா
(தாத்தா)

## இரண்டாவது பிறந்ததின வாழ்த்து

13.06.2004



### செல்வன் விஜயரட்னம் ஹரிகரன்


இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டியைச் சேர்ந்த
**விஜயரட்னம் - விஜயகலா** தம்பதியினரின்
செல்வப் புதல்வன் **ஹரிகரன்**

தனது இரண்டாவது பிறந்தநாளை இன்று (13.06.2004) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மம்மா, அப்பம்மா, பெரியப்பம்மா, அத்தைமார், மாமாமார், அம்மம்மாமார், அப்பப்பாமார், அன்ரிமார், அக்காமார், அண்ணாமார், மச்சாள்மார், மச்சான்மார், அயலவர்கள், உற்றார், உறவினர் அனைவரும் இமையூர் ஸ்ரீமுருகன் அருளால் நல்வித்தைகளும் பலகற்று சான்றோர் வழிநடந்து சற்குணவானாய்த் திகழ்ந்திட வேண்டுமென வாழ்த்துகின்றனர்.

- **விஜயரட்னம்** (அப்பா).

*இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி.* (32970)(34-19-17).

எனது ஆயுள்
காப்புறுதி
எங்கள்
குடும்பத்துக்கும்
காப்புறுதி
காப்பை
பெற்றுக்
கொடுத்தது.



வீடமைப்பு கடனுடன்
எங்களுக்கு ஓர்
இல்லத்தையும்
பெற்றுக் கொடுத்தது.

செலிங்கோ லை∴ப் எனக்கு வழங்கும் கவனிப்பு ஆயுள் காப்புறுதியை விட அதிகமாகவுள்ளது. நான் எனக்கு ஆயுள் காப்புறுதியை எடுத்தபோது, எனது குடும்பத்துக்கும் எனக்கும் சொந்தமான ஒரு இல்லம் **வீடமைப்பு கடன்** மூலம் கிடைத்தது. அதுவும் விசேட வட்டி வீதத்தில் கிடைத்தது. செலிங்கோ லை∴ப் இன்சூரன்ஸ் பங்குதாரராக இணைந்தமை குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன்.

செலிங்கோ லை∴ப். எதிர்பார்ப்புகளுக்கு அப்பாற்பட்டது.



செலிங்கோ லை∴ப்

இல. 134, காலி வீதி, கொழும்பு 03,
தொ.பே: 2461461 ∴பெக்ஸ்: 2437613
வெப்தளம்: www.ceylincolife.com
ஈ-மெயில்: service@ceylife.lk
பதிவுசெய்த காப்புறுதியாளர்

PHOENIX O&M 0844

# மனோதத்துவ வைத்தியம்
## (GENERAL PSYCHO THERAPY)

இப்பொழுது யாழ்ப்பாணத்தில் 15.06.2004 - 20.06.2004 வரை
*முன்கூட்டியே பதிவு செய்யவும்*

இளைஞர்களே!

☆ சக்தி குறைவு ☆ ஞாபக மறதி ☆ பயம்
☆ ஆளுமைக்குறைவு ☆ நடுக்கம் ☆ நித்திரைக் குறைவு

என்பவற்றால் தாழ்வு மனப்பான்மையா?
கவலையை விடுங்கள் ஆரம்ப மனநோய் பாதிப்பு உடனடியாக நீங்க என்னுடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்! ஆண்மைச் சக்தி குறைவுதான் உங்கள் கவலையா? மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம். பலர் இங்கே சிகிச்சை பெற்று பூரண சுகமடைந்தமைக்கு ஆதாரம் உண்டு.

*குறிப்பு:* இறுதி நேரத்தில் வருவதைத் தவிர்க்கவும்.

தொடர்புகளுக்கு:

பிரபல மனோதத்துவ நிபுணர்
**Dr.P.ஆறுமுகம் S.M.P.**
A.S.N. சுற்றுலா விடுதி,
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
(பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்குமிடையில்).
Govt. Regd. No. 9492
Hot Line: 0777 569205
T.P.: 3181, 5399
(முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்)

(சி-35532) (24-19-13)



உங்களுக்காகப் புதிய மெருகுடன்!
உங்கள் உணவகம்
ஜோ-எகட்டனின்
**ஜெசித்தாராவின்**

**விசேட தயாரிப்பு - சிக்கன்**
**M-DOT புரியாணி**
வழமையான உணவுப் பொதிகள்
வழமைபோல முற்பகல் 11 மணி -
பிற்பகல் 3 மணி வரை.
மனைக்கு வெளியே ஒருமனை.
**ஜெசித்தாரா**
மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.
T.P.:222-7227.
(சி35504)


# இறக்குமதியாளர் கவனத்திற்கு!

வருவாய்ப்பகுதியில் இறக்குமதிக்கான உரிமத்தைப் பெற்று, இறக்குமதியில் ஈடுபடாத இறக்குமதியாளர்கள் அனைவரையும் 2004.06.30 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னதாக கிளிநொச்சியில் அமைந்துள்ள வருவாய்ப் பகுதிச் செயலகத்திற்கு நேரில்வருமாறு வேண்டுகின்றோம். தவறுவோரின் உரிமம் நீக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

பொறுப்பாளர்,
நடுவப்பணியகம்,
வருவாய்ப்பகுதி - நிதித்துறை,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

(32969) (42-19-14)


# YOGI BEAUTY PARLOUR
## (Academy of Beauty Culture & Hair Dressing)
## HOME SCIENCE ACADEMY

**குறுகிய கால புதிய பயிற்சி வகுப்புகள் 21-06-2004 முதல் ஆரம்பமாகவுள்ளன.**

1) அழகுக் கலையும் சிகிச்சை முறைகளும் (Beauty Culture and Therapy)
2) முக ஒப்பனையும், தலை அலங்காரங்களும், மணப்பெண் அலங்காரமும்

இதில் பாடக்குறிப்புகளுடன் கூடிய செய்முறை விளக்கங்கள் பயிற்சி அளிக்கப்படும். சேரவிரும்பும் மாணவிகள் உடன் தொடர்பு கொள்ளவும்.

கேக் கண்காட்சி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று 27-06-2004 பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளதால் பயிற்சிகள் முடித்த மாணவிகள் இதில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

**75, அம்மன் றோட், நல்லூர், யாழ்ப்பாணம்.**
**(நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக)**
**T.P.222 2796**



மீண்டும் யாழ் நகரில்..........

# பிள்ளையார் லேணேர்ஸ்

*சாரதிப் பயிற்சியளிப்பதில் யாழ் நகரின் முன்னோடிகள்*
எமது மீள்வரவை முன்னிட்டு ஒவ்வொரு மாதமும்
ஒரு அதிர்ஷ்டசாலிக்கு

## இலவசப்பயிற்சியுடன் லைசென்ஸ்

**239, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**
சட்ட அங்கிகார எண்: D.S. 379



## அருள் கொமினிக்கேஷன்ஸ்
## CALLING CARDS

☆ எந்த இடத்திலிருந்தும்
☆ எந்தத் தொலைபேசியிலிருந்தும்
☆ எந்த நேரத்திலும்

மிகமிகக் குறைந்த கட்டணத்தில்
வெளிநாட்டு அழைப்புக்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
☞ மத்திய கிழக்கு நாடுகள் மற்றும்
இந்தியாவுக்கு மிகக் குறைந்த கட்டணம்

01, பிறவுண் வீதி, நாவலர் வீதி (சந்தி),
யாழ்ப்பாணம். T.P. 222 3536.

(32965)(21-19-14)


# வலயக் கல்வி அலுவலகம் - தென்மராட்சி

# கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் கேள்விச் சபைத் தலைவரும் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளருமாகிய என்னால் 01.07.2004 ஆம் திகதி மு.ப.10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு, அன்றைய தினமே மு.ப. 10.30 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்துமூலம் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

| பாடசாலையின் பெயரும் வேலை விபரமும் | மீளளிக்கப்படாத வைப்புப் பணம் | மீளளிக்கப்படும் வைப்புப் பணம் |
|---|---|---|
| யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி., மிகுதி வேலை 90'x25' | 500.00 | 2000.00 |
| யா/மிருசுவில் றோ.க.த.க.பா. மிகுதி வேலை 50'x25' | 500.00 | 2000.00 |
| யா/மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி. கணனி அறை புனரமைப்பு 20'x20' | 500.00 | 750.00 |

01. மேற்படி வேலைகளுக்கு இக்ராட் (ICTAD) நிறுவனத்தில் தரம் 9உம் அதற்கு மேற்பட்ட தரத்திற்கும்.

02. கேள்விப் பத்திரங்களில் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT), சேர்க்கப்பட்ட கேள்வித் தொகை, பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT), சேர்க்கப்படாத கேள்வித்தொகை என்பன தனித்தனியாகக் குறிப்பிட[illegible]ணடும்.

03. மேற்படி வேலைகளுக்கமைவாகக் கேள்விப் பத்திரத்தைத் தங்களுக்கு வசதியான வங்கியிலிட்டு *வலயக் கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி* என்ற பெயரில் வங்கிக் கட்டளையைப் பெற்று (Pay Order) தென்மராட்சி வலயப் பாடசாலைகள் வேலைகள் கிளையில் சமர்ப்பித்து 2004.06.15ஆம் திகதி தொடக்கம் 2004.06.23ஆம் திகதி வரை கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள[illegible]ம்.

04. இவ்வேலை[illegible]ன கேள்விப் பத்திரங்கள் இருபிரதிகளில் பூர்த்திசெய்யப்பட்டு மூலப்பிரதியும், இணைப்பிரதியும, தனித்தனிக் கடித உறைகளில் இடப்பட்டு, உறைகளின் இடப்பக்க மேற்பக்கத்தில் வேலையின் விவரம் எழுதப்படல் வேண்டும். தனித்தனியாக உறைகளில் இடப்பட்ட கேள்விப் பத்திர[illegible]கள் இரண்டையும் பிறிதொரு உறையில் இட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தகாரரின் முத்தரையிட்டு *வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், தென்மராட்சி, சாவகச்சேரி* என முகவரியிட்டு வலயக் கல்வி அலுவலகத்தில் வலயக் கல்விப் பணிப்பாளரின் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பத்திரப்பெட்டியில் 2004.07.01ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு முன்னர் இடப்படல்வேண்டும். மேற்குறிப்பிட்ட காலநேரத்திற்குப் பிந்திய கேள்விப் பத்திரங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

05. கேள்விச் சபையால் தெரிவுசெய்யப்படும் ஒப்பந்தகாரர் தெரிவுசெய்யப்பட்ட திகதியிலிருந்து 10 நாள்களுக்குள் கேள்விச் சபைத் தலைவருடன் வேலைக்கான ஒப்பந்தமொன்றைச் செய்து 4 மாதங்களுக்குள் வேலையைப் பூர்த்திசெய்து கையளித்தல் வேண்டும். எவ்வித காலதாமதமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. சரியாக நிரப்பப்படாத கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

06. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன் இவ்வேலை தொடர்பான மேலதிக விவரங்களை தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகப் பாடசாலைகள் வேலைகள் கிளையில் பெற்றுக்கொள்ளலாம் என அறியத்தருகிறேன்.

**வ.செல்வராசா**
கேள்விச் சபைத் தலைவர்,
வலயக் கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி.

பாடசாலை வேலைகள் கிளை,
வலயக் கல்வி அலுவல்கம்,
தென்மராட்சி.

(சி-35543) (34-21-14-19)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

மலர்வு
20 - 10 - 1932



உதிர்வு
15 - 05 - 2004

**N.P.S.**
## நாகநாதி பாவிலு சவிரிமுத்து
(சின்னத்துரை)

**சீவியத்தில் என்னை நேசித்தவர்களே!**
**மரணத்திலும் என்னை மறவாதீர்கள்!**
ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

நாளை (14-06-2004) திங்கட்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ள மதியபோசனத்திலும் பிற்பகல் 4.30 மணிக்கு அல்லைப்பிட்டி புனித யுவானியார் ஆலயத்தில் நடைபெறவுள்ள திருப்பலியிலும் கலந்துகொள்வதோடு நிகழ்வுக்கு வருகைதந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தனை செய்யுமாறும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
**சவிரிமுத்து அன்ரன் சகாயநாதன்**
(மகன்).

முதலாம் வட்டாரம்,
அல்லைப்பிட்டி. (32977) (21-

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# "எங்களது எல்லா நிகழ்வுகளையும் தமிழர்களது ஆதரவோடுதான் செய்தோம்..."


முத்துமீரான்

*கேள்வி:* தமிழர் தொடர்பில் முஸ்லிம்களின் பார்வை எவ்வாறுள்ளது?

*பதில்:* நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களோ இல்லையோ நாங்கள் தமிழர்களை உள்ளத்தால் நேசிக்கிறோம். எனெனில், நாங்கள் அவர்களுடனேயே வாழ்ந்தோம்; வாழப்போகிறோம். எங்களது எல்லா நிகழ்வுகளையும் அவர்களது ஆதரவோடுதான் செய்தோம். அவ்வாறான நல்ல சூழல் இன்று இல்லைத்தான். ஆனால், புதுவை இரத்தினதுரை கூறியதுபோல, நாங்களும் ஒரே நேர்கோட்டில் வரவே விரும்புகிறோம். அந்த நல்ல சூழல் நிச்சயம் வரும்.

*கேள்வி:* தமிழர் தேசிய விடுதலைப் போராட்டம் தொடர்பாக என்ன கருதுகிறீர்கள்? அது முஸ்லிம்களின் அபிலாஷைகளை கருத்தில் கொள்வதாகக் கருதுகிறீர்களா?

*பதில்:* விடுதலைப் புலிகளின் போராட்ட நெறிப்படுத்தல் இறுதியில் தமிழர்களுக்கு மட்டும் வரையறுக்கப்படப்போவதில்லை. அது தமிழ் பேசும் இனத்துக்கான தீர்வையே பெற்றுத் தரும். சிறுசிறு பிரச்சினைகளை வைத்துக் கொண்டு தவறான அரசியற் கண்கொண்டு சிலர் பார்க்கிறார்கள். இறுதியில் நல்ல முடிவு ஏற்படும் என்றே முஸ்லிம்கள் எதிர்பார்க்கின்றனர்.

*கேள்வி:* அரசு - புலிகள் பேச்சின் போது சில அதிருப்திகளை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவு,ப் ஹக்கீம் வெளியிட்டார். முஸ்லிம்களை தனித்தரப்பாக அங்கீகரிக்க வேண்டுமென அவர் கோரியுள்ளார். விடுதலைப் புலிகள் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை வலியுறுத்தியுள்ளனர். இந்தப் பின்னணியில் முஸ்லிம் மக்கள் வலியுறுத்துவதென்ன? அதாவது அச்சபைக்கு உட்பட்டுச் செயற்பட விரும்புகிறீர்களா? சுயமான தனியொரு அதிகாரசபையை வேண்டி நிற்கிறீர்களா?

*பதில்:* ...மான தனிச் சபையை உருவாக்கும் நோக்கம் முஸ்லிம்களிடமும் இல்லை. முஸ்லிம காங்கிரஸிடமும் இல்லை. முஸ்லிம் காங்கிரஸ் என்ன நினைக்கிறதென்றால் இணைந்த வடக்கு - கிழக்கு மாநிலத்துக்கு உட்பட்ட தீர்வு ஏற படுகின்றபோது, நாங்களும் சுய கௌரவத்துடன் வாழக்கூடிய நிலையை ஏற்படுத்தும் ஒரு பங்களிப்பையே.

*கேள்வி:* உப அலுவலக அல்லது பாண்டிச்சேரியில் உள்ள Non Teritorial fedaral போலவா, எந்த அடிப்படையில்?

*பதில்:* அது எந்த நிலையிலாயினும் சரி, அல்லது கரையோர மாவட்டத்துக்குட்பட்ட பிரதேசமாயினும் சரி (தென் கிழக்கு அதிகார அலகு)

*கேள்வி:* தங்கள் பிரச்சினைகள தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் கலந்துரையாடினீர்களா?

*பதில்:* தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுதலைப் புலிகளின் ஒரே குரல்தான். விடுதலைப் புலிகளே தமிழர்களுடைய பிரச்சினைகள் தொடர்பாகப பேசக்கூடிய சக்தியாக உள்ளனர். அந்தச் சக்தியை விடுத்து இன்னொரு உப சக்தியிடம் பேசுவது பொருத்தமானதல்ல.

*கேள்வி:* தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை உருவாக்கியதுபோல முஸ்லிம்தேசியக் கூட்டமைப்பை உருவாக்க முயன்றதாக கொழும்பு மாநகர பிரதிமேயர் ஆசாத் சாலி கூறியுள்ளார். முஸ்லிம்களுக்கிடையில் இவ்வாறான ஒற்றுமையின்மைக்கு என்ன காரணம்?

**ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மத்திய குழு உறுப்பினரான சின்னத்தம்பி முத்துமீரான் அண்மையில் யாழ்ப்பாணம் வருகை தந்தபோது சமகால அரசியல் மற்றும் முஸ்லிம்களின் நிலைப்பாடு குறித்து உதயனுக்கு அளித்த செவ்வி இது. கிழக்கிலங்கையின் இலக்கியத்துறையில் பரவலாக அறியப்பட்டவரான முத்துமீரான் தனது இலக்கிய ஈடுபாடு தொடர்பாக அளித்த மற்றொரு செவ்வி சூரியகாந்தி இணைப்பிதழில் பிரசுரமாகியுள்ளது.**

*பதில்:* முஸ்லிம் காங்கிரஸ் இந்த அளவுக்குப் பிளவுபட்டிருப்பதற்குக் காரணம் இந்த நாட்டின் ஜனாதிபதிதான். அவரது பயங்கரத் திட்டத்தால்தான் அதாவுல்லா அணியினர் பிரிந்துசெல்ல வேண்டியேற்பட்டது. ரணிலும் கூட இக்கட்சியை உடைக்கும் நிலைப்பாட்டிலேயே இருந்தார். ரவு,ப் ஹக்கீம் மேற்கொண்ட சில செயற்பாடுகளுக்கு அவர் தடை போட்டார். அப்போது அதாவுல்லா சார்பாகச் செயற்பட்டார். அதேபோல நுஆவை (பேரியல் அஷ்ரப்) பயன்படுத்தி மேலும பிரச்சினைகளை உருவாக்க சந்திரிகா முயற்சி செய்தார். உண்மையிலேயே சிறுபான்மைக் கட்சிகள் இல்லாமல் எதையும் செய்யமுடியாத நிலைக்கு பெரும்பான்மைக் கட்சிகள் தள்ளப்பட்டிருக்கின்றன. அதனால், அவைகள் சிறுபான்மைக் கட்சிகளைப் பலவீனப்படுத்தப் பார்க்கின்றன. ரவு,ப் ஹக்கீமுக்கும் குமாரி என்ற பெண்ணுக்கும் இடையிலான தொடர்பு பற்றி வெளியான அசிங்கமான செய்திகளும் இவ்வாறானவையே.

*கேள்வி:* கூட்டுத் தலைமைத்துவம் ஒன்றின் மூலம் முஸ்லிம் காங்கிரஸை ஒன்றுபடுத்துவது பற்றி என்ன கருதுகிறீர்கள்?

*பதில்:* முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் யாப்பின்படி ஒரு தலைவரே செயற்பட முடியும். பேரியல் அஷ்ரப்போ, அதாவுல்லாவோ, மயோன் முஸ்தபாவோ... இவர்களெல்லாம் தாங்களும் தலைவர்களாகச் செயற்பட விரும்பியமையாலேயே பிரிந்து போனார்கள். ரவு,ப் ஹக்கீம் எல்லோரையும் இரு கரம் நீட்டி அழைத்துக்கொண்டேயுள்ளார். எங்களைப் பொறுத்தவரை முஸ்லிம்கள் எல்லோரையும் ஒன்றிணைத்துச் செயற்படவே நாங்கள் முயற்சி செய்து வருகிறோம். ஆனால், கூட்டுத் தலைமைத்துவம் ஒன்றினால் ஒருநாளும் கட்சியை வழிநடத்திச் செல்ல முடியாது. அதே போல் முஸ்லிம் காங்கிரஸ் மக்கள் மத்தியில் வேரூன்றிய கட்சி. இவ்வாறு பிரிந்து செயற்படுபவர்களால் ஒருபோதும் முஸ்லிம் காங்கிரஸை அழிக்க முடியாது.

*கேள்வி:* ஜனாதிபதியின் கோரிக்கை காரணமாகச் சமாதானப் பேச்சுக்கள் தேங்கியிருப்பது தொடர்பாகத் தங்களின் பார்வை என்ன?

*பதில்:* இந்த நாட்டில் சமாதானமாக வாழ வேண்டும் என்றே எல்லோரும் விரும்புகிறோம். எமக்கு ஏற்பட்ட இழப்புகள் அதிகம். மேலும் இழப்புகள் ஏற்படக்கூடாது. எனவே, வாக்குறுதிகளோடு வந்த அரசு பேச்சு மேசைக்கு வந்து முடிவைப் பெற்றுத் தரவேண்டும். அதை விடுத்து பிள்ளையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டும் வேலையைத்தான் அரசு செய்கிறது. சிங்களவர்களும் சமாதானத்துக்கே வாக்களித்தார்கள். ஆனால், இன்று பல இடங்களிலும் புதிதாகச்சோதனைச் சாவடிகள் முளைத்துள்ளன. இந்த அரசுக்கு எதுவிதமான கொள்கையும் இல்லை. சிங்கள இனவாதம் பேசும் ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்து இந்த அரசு தமிழர்களுக்கோ முஸ்லிம்களுக்கோ - நாம் கேட்பதில் கொஞ்சத்தையாவது தருவதற்கு முன்வருவார்களா என்பதே சந்தேகமாகவுள்ளது.

*கேள்வி:* அண்மையில் மட்டக்களப்பில் பத்திரிகையாளர் நடேசன் படுகொலை செய்யப்பட்டார். இது போன்ற சம்பவங்கள் அங்கு வேறும் நடந்துள்ளன. இது தொடர்பாக என்ன கருதுகிறீர்கள்?

*பதில்:* நடேசன் என்னுடைய ஆப்த நண்பன். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் வருமானவரி அலுவலராக மட்டக்களப்பு நீதிமன்றத்துக்கு அவர் வருவார். நாங்கள் இருவரும் சிற்றுண்டிச சாலையில் தேநீர் குடித்து, இலக்கியம், அரசியல் என்றெல்லாம் பேசுவோம். அடுத்தவாரம் வரும் போது வழக்கு சம்பந்தமான இரண்டு கோவைப் பிரதிகளை எடுத்து வருவதாக வாக்குறுதி அளித்து விட்... மறுநாள் நான் நீதிமன்றத்தில... இன்னொரு நண்பரான ஏ.எல்.எம்.சல. கொல்லப்பட்ட செய்தியைக் கூறினார். மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்திய செய்தியாக அது அமைந்துவிட்டது. 'ஏன் இப்படி?' என்று எனக்குள் கேட்கிறேன். உண்மையில் அவர் நடுநிலைமையாகத்தான் செய்திகளை வெளியிட்டார். எவருக்கும் அநியாயமான முறையில் எதுவும் எழுதவில்லை. யதார்த்தத்தைத்தான் எழுதினார். இந்த நாட்டில் யதார்த்தத்துக்கு இடமில்லை என்பதைத்தான் அவரது கொலை சுட்டிக்காட்டுகிறது.

*கேள்வி:* கிழக்கிலங்கையில் முஸ்லிம் ஆயுதக் குழுக்கள் பற்றி ஊடகங்களில் வெளிவரும் செய்திகள் தொடர்பாக என்ன கூறுகிறீர்கள்?

*பதில்:* அஷ்ரப் முஸ்லிம் காங்கிரஸைத் தொடக்கிய காலத்திலிருந்தே இத்தகைய பொய்யான பிரசாரங்களை ஊடகங்களும், சில கட்சிகளும் வெளியிட்டு வருகின்றன. ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எவ் போன்ற இயக்கங்கள் சில முஸ்லிம் இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சியளித்துத் தம்முடன் இணைத்து வைத்துள்ளன. மற்றப்படி முஸ்லிம்களிடம் 'ஜிகாத்' போன்ற ஆயுதக் குழுக்கள் இருப்பதாக நான் அறியவில்லை. தமிழர் - முஸ்லிம்களுக்கிடையில் பிளவினை ஏற்படுத்தப் பெரும்பான்மை சமூகம் மேற்கொள்ளும் திருகுதாளமே இத்தகைய கட்டுக்கதைகளாகும்.

*கேள்வி:* முஸ்லிம்களைப் பொலீஸ் படையில் சேர்த்துக் கொள்ளுமாறு ஹக்கீம் கோரிக்கை விடுத்துள்ளார். அது தமிழ்-முஸ்லிம் உறவுகளைப் பாதிக்கக் கூடிய பின் விளைவுகளை உருவாக்குமென அவர் கருதவில்லையா?

*பதில்:* உண்மையில் ஒரு பொலீஸ் நிலையத்துக்கு முறைப்பாடு செய்யச் சென்றால் அங்கு ஒரு தமிழ் தெரிந்த பொலீஸாரும் இருக்க மாட்டார்கள். சிங்களத்தில் முறைப்பாட்டைத் தலைகழாகப் பதிவு செய்து கையொப்பம் வாங்கி விடுவார்கள். இதனால் நீதிமன்றத்தில் பல்வேறு பிரச்சினைகள், முறைப்பாட்டுக்காரரே பாதிப்படையக் கூடிய சம்பவங்களும நடந்துள்ளன. இதனையடுத்து, நாங்கள் சட்டத்தரணிகளே தமிழ் பேசும் பொலீஸாரை ஆள்சேர்க்க வலியுறுத்துமாறு ஹக்கீமிடம் கோரினோம். ஊடகங்களே இவற்றைப் பிழையாகத் திரித்துக் கூறிவிட்டன. அது தமிழர்களாக இருந்தாலும்சரி, முஸ்லிம்களாக இருந்தாலும்சரி தமிழ் பேசும் பொலீஸாராக இருப்பதே எமது விருப்பம்.

**நேர்காணல், படங்கள்: இயல்வாணன்**

★

# முழு இலங்கையினதும் மூத்த எழுத்தாளர் கணேஷ்

**கடந்த வாரம் அமரரான மூத்த எழுத்தாளரும் பத்திரிகையாளருமான தலத்து ஓயா கே.கணேஷ் நினைவாக இக் கட்டுரை பிரசுர மாகின்றது.**



பேராசிரியர்

**கார்த்திகேசு சிவத்தம்பி**

இந்திய இதிகாசங்களில் ஒன்றாகிய மகாபாரதத்தில் வரும் சில பாத்திரங்கள் மகாபாரதத்துக்குரிய நெருக்கடிகள், மோதல்கள் ஆகியவற்றுக்கு அப்பாலே நின்று ஞான நிலை வழிகாட்டிகளாகக் கொள்ளப்பட்டு போற்றப்படுகின்ற ஓர் இயல்பினை நாம் காணலாம். அத்தகைய பாத்திரங்களினூடாகத்தான் மகாபாரதத்து மோதுகைகளில் முக்கிய இடம்பெறும் பாத்திரங்கள் தங்கள் இயங்கு முறைமைகளைப் பெற்றுக் கொண்டார்கள். பீஷ்மர், துரோணர், விதுரன் போன்றவர்களை நாம் இந்தப் பட்டியலினுள் சேர்க்கலாம்.

நண்பர் கே.கணேஷைப்பற்றிச் சிந்திக்கும்பொழுது பீஷ்மர், துரோணர் போன்றவர்களுடைய - குறிப்பாகத் துரோணர் போன்ற ஒருவருடைய படிமந்தான் என் மனத்தினுள் சுற்றிச் சுற்றி வருகின்றது. நம்மிடையே வாழுகின்ற எழுத்தாளர்களுள் வயதால், அனுபவத்தால் சிரேஷ்டராக விளங்கியவர் என்பது மாத்திரமல்லாமல் இன்று நாம் ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின் சிறப்பான சில அம்சங்கள் என வளர்த்து எடுத்துக்கொண்டுள்ள சில பண்புகளினது ரிஷிமூலம் நதிமூலமாகவும் அவர் விளக்கினார் என்பது ஒரு முக்கிய உண்மையாகும். அதாவது, நண்பர் கணேஷ் அவர்களை முதிர்ச்சியடைந்த ஓர் எழுத்தாளர் என்பதிலும் பார்க்க ஈழத்து இலக்கியத்தின் தடத்தை, அதன் காத்திரமான செல்நெறியை உருவாக்கியவர்களுள் அவர் முக்கியமானவர் என்பதும், தன்னுடைய அந்த முக்கியத்துவத்தைத் தானே பறைசாற்றிக் கொள்ளாதவர் என்பதும்தான் கணேஷினுடைய மிகப்பெரிய ஆத்ம பலமாகும்.

கணேஸோடு பழகியவற்றையும், பேசியவற்றையும் அவ்வுரையாடல்களின் மூலமாகப் பெற்றுக்கொண்டவற்றையும் ஒருங்குசேர நினைவுறுத்திக்கொள்ளும்பொழுது கணேஷினுடைய ஆளுமை முகில்களுக்கு மேலே கூர்மைப்பட்டுச் செல்லும் மலை உச்சியின் படிமம்தான் எனது நெஞ்சில் திரழ்கிறது. அந்த முகில்களுக்கு மேலே நிற்கும் அந்த மலையுச்சியில் சூரியனின் நிரந்தரமான ஒளியைக காணலாம். முகில் மட்டத்துக்குக் கீழேயுள்ள இடிகள், மின்னல்கள், திடீர் வெள்ளங்கள், வரட்சிகள் இவை எதுவுமே அவரது கருத்துநிலை ஸ்திரத்தைப் பாதிப்பவையல்ல.

## முற்போக்கு இலக்கியம்

உண்மையில் கணேஷை முழு இலங்கையினதும் மூத்த எழுத்தாளர் என்றே போற்றுதல் வேண்டும். 1930களில் இங்கிலாந்தில் பயின்ற சமதா்ம பொதுவுடைமை வாத, மாணவர்கள் மூலமாகத்தான் முற்போக்கு இலக்கியவாதமும் மக்கள் அரங்கு முறைமையும் இந்தியாவுக்கு கொண்டுவரப்பட்டன. சோவியத் யூனியனை மாதிரியாகக்கொண்டு ஸ்பானிஷ் போரை போராட்ட உதாரணமாகக் கொண்டு ஏகாதிபத்திய எதிர்ப்பு காலணித்துவ எதிர்ப்புப் போராட்டத்தை இந்தியாவுக்குள் ஒரு கலைப் புலமை பயில்வாகக் கொண்டு வந்தவர்கள் பட்டியலில் க.ஜ.அகமட அப்பாஸ், சஜ்ஜத் ஸகீர், பைஸ் அகமட் பைஸ் போன்றவர்கள் மிகப் பிரபலமானவர்கள். பொதுவுடைமை வாதம் என்ற பெயரைப் பட்டவர்த்தனமாகக் கூறாது (பிரித்தானிய ஏகாதிபத்தியம் அப்பதப்பிரயோகத்தை எதிர்த்தது), அதன் சாரத்தை உள்வாங்கி இயங்கிய தர்க்கத்துக்கு இயைய முற்போக்கு இலக்கியம் (Progressive Literature) என இந்தியாவுக்குள் இவர்கள் புதிய எழுத்து முறையினைப் பரப்பினர். இதனோடு வந்த அரங்க முறைமை வங்காளத்திலும் ஆந்திரத்திலும் முக்கியமான இடம் கொண்டன. இலக்கியத்தைப் பொறுத்தவரையில் ஹிந்தி, உருது மொழிகளில் இவ்வியக்கம் பெரும் சாதனைகளைச் செய்தது. தமிழ் நாட்டிலும் இதன் தாக்கம் காணப்பட்டது.

அக்கால கட்டத்தில் இந்தப் புதிய எழுச்சியினை உள்வாங்கி இலங்கையின் சிங்கள, தமிழ் மக்களுக்கான ஒரு புதிய இலக்கிய நிறுவனமாக ஓர் எழுத்தாளர் சங்கம் நிறுவப்பட்டது. பின்னர் பேராசிரியரான ஈ.ஆர்.சரத் சந்திரவும், கே.கணேஷுமே இச்சங்கத்தின் செயலாளர்களாக இருந்தனர். உண்மையில் இலங்கையில் முற்போக்கு இலக்கியத்தின் தொடக்கமாக இச்சங்க நிறுவுகையைக் கொள்ளல் வேண்டும்.

(15 ஆம் பக்கம் பார்க்க)






நம் நாட்டின் ஆரோக்கியமுள்ள துடுக்கான குழந்தைகள்
பேபி ஷெரமி தரும் சுவ சிங்கிதி அதிர்ஷ்டப் போட்டி 2 மூலம் பெறுமதி வாய்ந்த வீடு ஒன்றையும் வேறு பல பாரிய பரிசுகளையும் வெல்லும் அரிய வாய்ப்பு...

விண்ணப்பங்கள் 15 ஜூலை 2004 அல்லது அதற்கு முன்னர் எம்மை வந்தடைய வேண்டும்

செய்ய வேண்டியவை இவைதான்
உங்கள் குழந்தையின்
- அண்மைக்கால அழகிய படம்
- நோய்த்தடுப்பு மருந்தூட்டல் பதிவேடு / சுகாதாரப் பருவப் பதிவேட்டின் போட்டோப் பிரதி
- பிறப்புச் சான்றிதழின் போட்டோப் பிரதி
- என்பனவற்றுடன் போட்டிக்கான நுழைவுக் கூப்பனை நிரப்பி

"பேபி ஷெரமி சுவ சிங்கிதி அதிர்ஷ்டப் போட்டி 2", த.பெ 1870, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பவும்.

- பேபி ஷெரமி சுவ சிங்கிதி அதிர்ஷ்டம் 2 இல், 15 ஜனவரி 2003 - 15 ஜனவரி 2004 என்ற கால எல்லைக்குள் பிறந்த குழந்தைகள் மட்டுமே பங்குபற்றலாம்.

பரிசுகளின் விபரம்

**முதல் பரிசு - 2.2 மில்லியன் பெறுமதியான ஜா-எலயில் உள்ள புத்தம் புதிய வீடு**

**2-5 வரையான வெற்றியாளர்களுக்குச் செலான் சேமிப்புச் சான்றிதழ்கள்**

2வது பரிசு ரூ.500,000 க்கான செலான் சேமிப்புச் சான்றிதழ்
3வது பரிசு ரூ. 300,000 க்கான செலான் சேமிப்புச் சான்றிதழ்
4வதுபரிசு ரூ. 250,000 க்கான செலான் சேமிப்புச் சான்றிதழ்
5வது பரிசு ரூ. 200,000 க்கான செலான் சேமிப்புச் சான்றிதழ்

(விநியோக நாளிலிருந்து 18 வருடங்களின் பின்பே சான்றிதழ்களைப் பயன்படுத்தலாம்.)

**இறுதிப் போட்டிக்குத் தேர்வாகும் குழந்தைகளுக்குத் தங்கப் பவுண்கள் 60**

போட்டியின் விபரம்
- குழந்தைகளின் ஆரோக்கியம், மருத்துவ மதிப்பீடு, தோற்றம் ஆகியவற்றை அடிப்படையாக வைத்து ஒரு மருத்துவர்கள் குழு தேர்வுகளை மேற்கொள்ளும்
- நாடு முழுவதிலுமிருந்து பெறப்பட்ட நுழைவுகளில் இருந்து, ஒவ்வொரு அரை இறுதிச் சுற்றுக்கும் 50 குழந்தைகள் தேர்ந்தெடுக்கப்படுவர்.
- அரை இறுதிப் போட்டிகள் 2004 ஓகஸ்ட் முதல் ஒக்டோபர் வரை கொழும்பு, காலி, கண்டி, பதுளை, அனுராதபுரம், புத்தளம், வவுனியா, திருகோணமலை, அம்பாரை, குருநாகல், திஸ்ஸமஹாராமை, இரத்தினபுரி ஆகிய இடங்களில் இடம்பெறும்.
- 2004 ஒக்டோபரில் நடைபெற உள்ள இறுதிப் போட்டியில் கலந்து கொள்ள ஒவ்வொரு அரை இறுதிப் போட்டியில் இருந்தும் 5 குழந்தைகள் என மொத்தம் 60 குழந்தைகள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

போட்டி ஒழுங்கு விதிகள்
- போட்டியில் கலந்து கொள்ள பேபி ஷெரமி உற்பத்திகள் எதையும் வாங்க வேண்டிய அவசியம் இல்லை.
- ...சேர்ந்து அசல் தஸ்தாவேஜுகளை அனுப்ப வேண்டாம். அவற்றையோ அல்லது போட்டோவையோ நாம் மீள உங்களுக்கு அனுப்ப மாட்டோம்.
- ...இறுதிப் போட்டிக்குத் தெரிவாகும் குழந்தைகளுக்கு மட்டுமே பதிவுத் தபால் மூலம் அறிவிக்கப்படும்.
- ஹேமாஸ் கூட்டு நிறுவனங்கள், கிராண்ட் மெக்கன் எரிக்ஸன், மாஸ்டர் அட்வடைசிங், ஒப்டிமம் Q ஆகிய நிறுவனங்களின் ஊழியர்களின் குழந்தைகள் தவிர நம் நாட்டின் அனைத்துக் குழந்தைகளும் கலந்து கொள்ளலாம்.
- நுழைவுகள் 2004 ஜூலை 15 அல்லது அதற்கு முன்னர் எம்மை வந்தடைய வேண்டும். அதன் பின்னர் வருபவை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
- நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. பேபி ஷெரமி சுவ சிங்கிதி அதிர்ஷ்டப் போட்டி 2 சம்பந்தமாக எந்தகைய முறைப்பீடுகளோ / சட்ட விண்ணப்பங்களோ ஹேமாஸ் மார்க்கட்டிங் (பிறைவற்) லிமிட், கிராண்ட் மெக்கன் எரிக்ஸன், மாஸ்டர் அட்வடைசிங் மற்றும் ஒப்டிமம் Q என்பனவற்றால் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

Grant McCann

பேபி ஷெரமி சுவ சிங்கிதி அதிர்ஷ்டப் போட்டி 2 - நுழைவுக் கூப்பன்

குழந்தையின் முழுப் பெயர் : ..........
தாய் / தந்தை / பாதுகாவலரின் பெயர் : ..........
அடையாள அட்டை இலக்கம் : ..........
முகவரி : ..........
தொ.பேசி (இல்லம்) .......... (அலுவலகம்) ..........
குழந்தையின் பிறந்த
திகதி: .......... நிறை (கிலோ) ..........
நெற்றியினூடாகத் தலையின் சுற்றளவு (செ.மீ) ..........
தாய்ப்பாலூட்டிய காலம் (மாதங்கள்) ..........
உங்களுக்கு அண்மையிலுள்ள பிராந்தியத்தைக் குறிப்பிடவும்.

☐ கொழும்பு ☐ அனுராதபுரம் ☐ காலி ☐ பதுளை ☐ கண்டி ☐ புத்தளம் ☐ வவுனியா ☐ திருகோணமலை ☐ அம்பாரை ☐ குருநாகல் ☐ திஸ்ஸமஹாராம ☐ இரத்தினபுரி

போட்டியின் விபரங்களையும் ஒழுங்கு விதிகளையும் நான் வாசித்துத் தெளிவாக விளங்கிக் கொண்டேன். அத்துடன் பராயமடையாதவரின் பெற்றோர் / பாதுகாவலராக உள்ளதால் போட்டியின் ஒழுங்கு விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பேன்.
பெற்றோர் / பாதுகாவரின் கையொப்பம் ..........

*இந்தப் போட்டி ஒரு சீட்டிழுப்பல்ல.

Baby Cheramy
பாசத்தின் இதம் தரும்

FUJIFILM

# புதுமைகளின் நாயகன் புனித அந்தோனியார்



உலகெங்கிலும் உள்ள கிறிஸ்தவர்கள் இன்று புனித அந்தோனியார் பெருவிழாவைக் கொண்டாடுகின்றனர். அதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.

புதுமைகள்மிக்க புனித அந்தோனியார், 1195ஆம் ஆண்டு ஆவணி மாதம் 15ஆம் நாள், லிஸ்பன் நகரில் பிரபுக்களின் குடும்பத்தைச் சேர்ந்த சாதாரண புத்திரனாகப் பிறந்தார்.

இவர் கிறிஸ்துநாதரில் மிகுந்த அன்பும் பக்தியும் கொண்டவர், தான் ஒரு வேத சாட்சியாக மரிக்கவேண்டுமென எண்ணியவர். புனித பிரான்சிஸ்கன் துறவற சபையில் துறவியாகச் சேர்ந்தார். திருமுழுக்கினால் பெற்ற பேர்டினன் பெயரை மாற்றி அந்தோனியானார். அவ்வேளையில் நடைபெற்ற ஒரு புதிய குரவரின் முதற் பாடற் பூசையில் மறையுறையாற்ற வேண்டிய குருவானவர். வராததினால் அப்பணியினை மடாதிபதி அவசரமாகப் பணித்தார் அந்தோனியிடம். எந்த விதமான ஆயத்தங்களும் இல்லாத பொழுதிலும் அதனைப் பொறுப்பேற்று அர்த்தமுள்ள அழகான மறையுரையை ஆற்றினார் அற்புதர்.

அவரின் மறையுரையைக் கேட்டோர் தங்கள் பாவ வாழ்க்கையை விட்டு விலகி இறைவன் அண்டை வந்தார்கள். இதனால், புனிதர் தலைசிறந்த போதகரானார்.

மானிடருக்குப் போதனை செய்ய கடல் மீனினங்களும் கரையை நாடின. இவருடைய பிரசங்கங்கள் ஒரு மொழியில் சொல்லப்பட்டபோதும் பல மொழியில் உள்ளவர்களும் கேட்கக் கூடியதாகவிருந்தது. ஓரிடத்தில் தேவ வார்த்தைகளை சொல்லுகின்றபோதும் பல இடங்களில் காணப்பட்டார். காணாமற்போன பொருள்களைக் கண்டடையச் செய்வதில் வல்லமை பெற்றவர். பசாசுகளை விரட்டும் தந்திரம் தெரிந்தவர். தேவ நற்கருணையில் இறைவனை வெளிப்படுத்தி கழுதையை மண்டியிட்டு வணங்கச்செய்தார். தீராதவியாதிகளை, மன நோய்களைக் குணமாக்கினார்.

இறைவனின் தோழராகிய புனிதர், தனது வேத புத்தகத்தின் மீது குழந்தை யேசு அமரும் பாக்கியம் பெற்றார். அற்புதங்கள் பல புரிந்து கோடி அற்புதரானார்.

திருச்சபையின் உயர்ந்த மறை வல்லுனரான புனித பொனவெஞ்சர், "புதுமைகள் பெறவேண்டுமாயின் அந்தோனியாரிடம் செல்லுங்கள். ஏனெனில் உலகிலே புனிதரின் உயர்ந்த சலுகையை அவர் பெற்றிருக்கிறார்" என்றார்.

தனது 36 ஆவது வயதில் 1231 ஆம் ஆண்டு ஆனி 13ஆம் திகதி இப்பூவுலகைவிட்டு விண்ணுலகு சென்றார். இவரின் உடல் அடக்கம் செய்யப்பட்டது செவ்வாய்க்கிழமையாகும்.

வாழ்நாளிலே புதுமைகள் புரிந்த அந்தோனி தனது மரணத்தின் பின் அற்புதங்கள் நிகழ்த்தியமை கண்டு இவரின் கல்லறை 33 ஆண்டுகளின் பின்னர் திறந்து பார்த்தபொழுது புதுமை செய்த நாக்கு அழியாது காணப்பட்டது. "நா" அழியா வரம் பெற்றவரின் ஆலயங்கள் உலகெங்கும் காணப்படுகின்றன.

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயம் விழாக்கோலம் பூண்டுள்ளது. நவநாள் திருப்பலிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. புனிதரின் தினமாகிய ஆனி13 ஆம் நாள் மீனினம் பாட, சங்குகள் ஒலிக்க அந்தோனியார் இரத மேறிப் பவனி வருவார்.

**அ.பிற்றோ டக்ளஸ்**
**பாஷையூர்**

இன, மத, மொழி பேதமின்றி அனைவருக்கும் அருள் புரியும் புதுவை புனிதரே, எமது நாட்டில் நிரந்தர சமாதானம் நிலைக்கவும் யுத்த அனர்த்தத்தினால் தொலைந்துபோன உறவுகளையும் காணாமற்போனவர்களையும் கண்டடையவும், மீளக்குடியேற முடியாது அகதிகளாக அலைந்து அளவற்ற துன்பங்களை அனுபவிக்கும் அநாதரவான மக்களையும், புகைப் பழக்கம் மது போதை பாவனைக்கு அடிமையாகி சமூகத்தைச் சீரழித்து வாழ்விழந்து துயருறுபவர்களையும் மற்றவர்களைத் துன்புறுத்தி அதனூடாக இன்பம் காணும் இளையவர்களின் மனநிலையில் மாற்றங்களைக் கொண்டுவரவும் அன்றாடம் வாழ்க்கைப் பிரச்சினைகளின் தீர்வு தொழில் துறைகள், உடல், உள நலம் பாதிக்கப்பட்டோர், தீராத வியாதியுடையோர், பிணி நீங்கி ஆன்ம நலன் பெற்று வாழவும் நம்பிக்கையுடனே உம்மை வேண்டுகிறோம். ★

# தமிழினம் தனித்தியங்க முடியும்; இதில் உறுதிகொண்ட கடமை வீரர்

**முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் சமூக சேவையாளருமான அமரர் நுணாவில் வல்லிபுரம் நல்லதம்பி நவரத்தினம் 5ஆம் திகதி பவள விழாக் கண்டார். அதனையொட்டி அவரைப் பற்றிய இந்த நினைவுக் குறிப்பு பிரசுரமாகின்றது.**



அகிலத்து மொழியறிஞர்களுள் ஆசைகொள்ளும் வண்ணம் திசையெல்லாம் இசை முழங்கும் கன்னித் தமிழில் மதுரை மன்னனும் உறையூர் விறலோனும் வஞ்சி வேந்தனும் காஞ்சித் தலைவனும் நல்லூர்க் காவலனும் காத்து வளர்த்த அன்னைத் தமிழில் ஒரு லட்சத்திற்கு அதிகமான சொற்கள் உள்ளன. ஆனால், இன்றைய தென்மராட்சியில் அவற்றிறகுள் மிகுந்த செல்வாக்குடனே சுடர்விட்டு வீசித் திகழும் சொல் 'நவரத்தினம்' என்பதாகும்! ஏனைய சொற்களைவிட எழுதும்போதோ சொல்லும்போதோ ஏற்படாத உத்வேகம், உணர்ச்சி, ஒருவகை மகிழ்ச்சி 'நவரத்தினம்' என்னும்போது இருந்தது!

நவரத்தினம்! பலர் இயற் பெயராகப் பெற்றிருக்கும் சாதாரண சொல்! என்றாலும், அது நுணாவில் வல்லிபுரம நல்லதம்பி நவரத்தினம் அவர்களைக் குறிக்கும்போது காந்தம் இரும்பைக் கவருவதுபோலத் தென்மராட்சி மக்களின் இதயத்தைக் கவரும் காந்தக் கல்லாக, சாவகச்சேரி நாடாளுமன்ற உறுப்பினர் என்றதொரு சிறப்பியல்பைப் பெற்றுத் திகழ்ந்தது!

**பகைவரும் நண்பர்**

நவரத்தினத்திற்கு இணையாவார் நவரத்தினம் என்றே பலரும் புகழும் வண்ணம், சாவகச்சேரி நாடாளுமன்ற உறுப்பினராவதற்கு இனியொரு மகன் பிறக்கவேண்டுமென்றுரைத்த சூழ்நிலையை 1956ஆம் ஆண்டு தேர்தலில் நின்று, வென்று நாடாளுமன்ற உறுப்பினரானபின், நன்றியினை உணர்த்தும் பண்பினை எண்ணத்திற் கொண்டதனால் எதிர்த்தவர்களும் உள் மகிழ்ந்து வாழ்த்துரைக்கும் நிலையை அடைந்தாரென்றால் ஒப்பில்லாத் தலைவர் இவர் என்றுரைத்தல் மிகையாகாது!

27ஆண்டுகள் இருந்தவரை தன்கடமையில் சிறிதும் குன்றாமல், பொதுத் தேர்தலில் எவர் பக்கமிருந்தாலும் காய்தல் உவத்தலின்றி, தான் பொது மக்கள் யாவர்க்கும் பிரதிநிதி, பகைவரையும் எதிரியாகக் கொள்ளாத அவரது தன்மையைப் பண்பாளர் பலரும் பாராட்டி அளித்த 'கடமைவீரர்' என்ற சிறப்புப் பெயர் சாலவும் பொருத்தமாகும்!

**நாடு, வீடு!**

கடமைவீரர் நவரத்தினம் அவர்கள் இலங்கைத் தமிழரசுக் கட்சி தயாரித்தளித்த தங்கம்! நாடும் மொழியும் தமதிரு கண்களாகக் கொண்ட இரத்தினம்! இணைப்பாட்சியினால் இலங்கைத் தமிழினம் தலை நிமிர்ந்து உரிமையுடன் வாழ முடியுமென நம்பிய மாணிக்கம்! ஆதியிலே இல்லாத சாதி பாதியிலே வந்தது எப்படி என வைதீகத்தைக் கேட்ட வைடூரியம்! அறியாமையை அகற்றிட விழைந்த ஒளிவிளக்கு! ஓய்வு ஒளிச்சலின்றி மக்களுக்காகப் பாடுபட்ட உதயசூரியன்! நாடு, நீ அதை நாடு, நாடாவிட்டால் உனக்கேது வீடு எனக் கேட்ட கொள்கைச் செம்மல்!

**இலங்கையில் நாலாவதாக**

தன்னியக்கமுள்ள நாடு காணத் தடுப்புக் காவலிலிருந்து, மொழியுரிமைக்காக ஹோமக சிறைக்குச் சென்று, தமிழினத்தின் மானம் காக்க காலிமுகத் திடலில் அடி உதைபட்டு, ஈழத்தின் குறையை உலகறிய நிறைந்த முகத்தை கறைப்படுத்தி, மழித்தலும் நீட்டலும் வேண்டா என வள்ளுவர் சிறைப்படுத்திய தாடிக்கு மறை தந்த கருந்தாடிக் காவலனாகத் திகழ்ந்து, பின்னர் வெண்தாடி வேந்தனாக விளங்கினார் கடமைவீரர் நவரத்தினம்!

அன்பும் பண்பும் நிறைந்தவர், உயர்வு தாழ்வு வயது வேறுபாடில்லாது எல்லோருடனும் சகசமாகப் பழகியவர். ஏழைகள் நண்பனாக இலங்கியவர்!

பொறாமையால் பொருமியவர்களாலும் சலுகை கிடைக்காததால் சண்டித்தனம் கதைத்தவர்களாலும் விதைக்கப்பட்ட பொய் வதந்திகளுக்கிடையேயும் எதிரிகளைப் புறமுதுகிடச் செய்தது மட்டுமல்ல வடகீழ் மாநிலங்களில் முதலாவதாகவும் இலங்கையில் நாலாவதாகவும் விளங்கக் கூடியளவு அதிகப்படி வாக்குகளைப் பெற்று வெற்றி அடைந்த தீரன்!

எதிர்க் கட்சியிலே இருந்து, தமிழுரிமைக்காகச் சிங்கள அமைச்சர்களைப் பொதுவாக எல்லாக் கட்டங்களிலும் எதிர்த்து, கறுப்புக்கொடி காட்டி, இருப்பினும் அரசின் அன்புக்குரியவராக இருந்து முன்னவரை விஞ்சும் அளவிற்குச் சேவையினைச் செய்து பெருமை தரும் சேவையாளனாக விளங்கியவர். கச்சாயில் அமைக்க இருந்த உப்பளத் திட்டம் வாய்ப்பின்றிப் போனது! மகிழங்கேணித் திடலை ஒரு தீவுத் திடலாக மாற்றி, தேசத்தின் கவனத்தை ஈர்க்கும் ஒரு திறந்தவெளி அரங்கினை உருவாக்க இருந்த சிந்தனைக்கு, காலம் வசதியினை அளிக்கவில்லை! எனினும், நாவற்குழி தானியக் களஞ்சியம், கைதடி ஆயுர்வேதக் கல்லூரி அவர் நினைவை என்றும் நிலைநிறுத்தும். மற்றும் வீதிகள், பாடசாலைகள், மருத்துவ மனைகள் கடமைவீரரின் நினைவை நினைவுபடுத்தும்!

**விடுதலை வேட்கை கொண்டார்**

ஈழத் தமிழினம் தனித்தியங்க முடியும் என்ற நம்பிக்கை உடையவர். 25லட்சம் இஸ்ரேலிய மக்கள் தமிழீழமாகிய வடகீழ் மாநிலமளவு வளமற்ற நிலத்தில் ஆதிக்க நாடுகளும் சாதிக்கமுடியாத அருஞ்செயல்களை ஆற்றியது மட்டுமல்ல, 25 ஆண்டுகளிலேயே அவர்கள் தாய் மொழியாம் ஈபுறா மொழியில், மருத்துவம், பொறியியல் போன்ற துறைகளைப் பயில வைக்க முடியுமானால், 50 ஆயிரம் ஆண்டுகால வாழ்வையும் 5ஆயிரம் ஆண்டுகால இலக்கிய வளத்தையுமுடைய தமிழினம் ஏன் தனித்து வாழ முடியாது என்ற தணியாத விடுதலை வேட்கை உடையவராக இருந்தார்! 'ஆண்ட இனம் மீண்டும் ஆள நினைப்பதில் என்ன தவறு இருக்கிறது' என்ற பேரறிஞர் அண்ணாவின் தாரக மந்திரத்தை மீண்டும் மீண்டும் மேடையில் கூறி, மக்களுக்குத் தமிழர் அரசியல் வரலாற்றை ஞாபகப் படுத்தினார்.


எதிர்காலத் தமிழர் மகிழ்வுடன் வாழ வேண்டுமென்றால் இன்றைய தமிழர் கொஞ்சமாவது துன்பத்தை ஏற்கும் தியாகசீலர்களாக மாறவேண்டுமெனக் கேட்டுக் கொண்டவர். நல்லதொரு பண்பாடுடைய சமுதாயத்தைக் காண விரும்பிய இவரது பேச்சுக்கள் சமுதாய நலன்களை விரும்பிய நல்லோர்களை நினைவூட்டுவனவாகும்!

சட்டமேதை ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்களின் சட்ட வழித்தோன்றல், தந்தை செல்வநாயகத்தின் அரசியல் பற்றாளர், சர்வதேச நாடாளுமன்ற உறுப்பினர், குற்றவியல் துறையில் சிறந்த சட்டத்தரணி, சமரச சமூகப் பண்பாளர், சட்டம் - அரசியல் விவாதங்களில் வல்லவர், ஆங்கிலப் பேச்சாளர், ஆரம்பத்தில் ஆங்கிலத்தில் பேசிப் பின் தமிழில் வல்லவனானவர்.

**கனடாவிலிருந்து அ.பொ.செல்லையா**

# வைகோவுக்கு அமெரிக்கா வாழ் தமிழர் ஜூன் 19இல் பொது வரவேற்பு அளிப்பர்

## கனேடியத் தமிழர்களும் கலந்துகொள்வர்



நியூயோர்க்,ஜூன்11

தற்போது அமெரிக்காவுக்குச் சென்றிருக்கும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வை.கோபாலசாமிக்கு அமெரிக்காவில் உள்ள தமிழ் மக்கள் எதிர்வரும் 19ஆம் திகதி பொது வரவேற்பு அளிக்கவிருக்கின்றனர்.

இந்த வரவேற்பு நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு கனடாவில் வசித்து வரும் தமிழர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தற்போது சென்னை உயர் நீதி மன்றத்திடம் விசேட அனுமதி பெற்று தனிப்பட்ட விஜயமாக அமெரிக்காவுக்குச் சென்றிருக்கிறார் வை.கோ.

ஈழத்தமிழர்களின் போராட்டத்துக்கு மிக நீண்ட காலமாக வைகோ வழங்கிவரும் தார்மீக ஆதவினைக் கௌரவிக்கும் முகமாகவே அவருக்கு அமெரிக்காவில் தமிழர்கள் பொது வரவேற்பு அளிப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

வைகோவுக்கு வழங்கப்படும் இந்த வரவேற்பு நிகழ்வில் தமிழ்த் தேசியத்தை நேசிக்கும் உணர்வாளர்களைப் பெரும் எண்ணிக்கையில் கலந்துகொள்ளுமாறு தமிழ்ப் படைப்பாளிகள் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

கடந்த 2002 ஆம் ஆண்டு அமெரிக்காவில் நடைபெற்ற அமெரிக்கத் தமிழ்ச் சங்கத்தின் பேரவை மாநாட்டில் கலந்துகொண்டுவிட்டு நாடுதிரும்பியபோதுதான் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வைத்து வை.கோ கைதுசெய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

(-4)

# நல்லூர் பிரதேச அபிவிருத்திக்கு ஆலோசனைக்குழு அமைப்பு

வலி.கிழக்கு,ஜூன்13

நல்லூர் பிரதேசசபைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள அபிவிருத்தி வேலைகளை முன்னெடுப்பது, குறைபாடுகளை நிவர்த்தி செய்வது என்பன தொடர்பாகப் பிரதேச அபிவிருத்தி ஆலோசனைக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக பிரதேச சபையின் செயலாளர் பொ.வைரமுத்து தெரிவித்தார்.

பிரதேச சபையின் செயலாளரைத் தலைவராகக் கொண்ட 7பேர் அடங்கிய இக்குழுவில் செல்லையா குகதாசன், சின்னத்தம்பி பத்மராஜா, சின்னத்துரை தங்கராசா, இரத்தின சிங்கம் பரமேஸ்வரநாதன், சுப்பையா பரம்சோதி, இரத்தினகோபால் தவகோபால், சின்னத்தம்பி சேகராசிங்கம் ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர். இக்குழுவின் போஷகர்களாக நல்லூர் பிரதேச செயலர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உதவித்திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோரும் உள்ளனர். இப்பகுதியில் அபிவிருத்திப் பணிகள் இக்குழுவின் மூலமாகவே மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(-8-180)

# கொத்மலைத் திட்டத்தை கைவிட்டுள்ளது அரசு!

மலையத்தில் பெரும் அரசியல் சர்ச்சைகளை ஏற்படுத்திய மேல்கொத்மலைத் திட்டம் கைவிடப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை கூடிய அமைச்சரவையிலேயே இத்தீர்மானம் நிறை வேற்றப்பட்டுள்ளது என செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அரசிடம் முன்வைத்த கோரிக்கைகளில் இது முதன்மையானதாகும்.

இக்கோரிக்கை நிறைவேற்றப்பட்டிருப்பது அரசியல் ரீதியில் இ.தொ.காவை வென்றெடுத்துத் தன் பக்கம் சாயவைக்கும் அரசின் உள்ளார்ந்த திட்டமாக இருக்கலாம் என்ற எண்ணத்தை தோற்றுவித்திருக்கின்றது.

இதேவேளை, கத்தோலிக்கர்கள் மத்தியில் நுரைச்சோலை அனல் மின் நிலையத்திட்டம் பெரும் சர்ச்சையைக் கிளப்பியிருந்தது. எனவே, கத்தோலிக்க ஆயர்கள் சபையுடன் இது விடயமாகப் பேசவேண்டும் என அமைச்சரவை தீர்மானித்திருப்பதாகக் கூறப்பட்டது.

(க)

## பொதுக்கூட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஜூன்13

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் பொதுக் கூட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்குக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (-10-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூன்13

ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு மேற்படி சங்கப் பணிமனையில் இடம்பெறவுள்ளது. (10-ரி)

## முதியோர் தொடர்புகொள்ளலாம்

யாழ்ப்பாணம்,ஜூன்13

அண்மையில் கோப்பாய் தெற்கு விளையாட்டரங்க வீதியில் திறந்து வைக்கப்பட்ட சாயி முதியோர் பராமரிப்பு இல்லத்தில் சேர்ந்துகொள்ள விரும்பும் முதியோரை டாக்டர் ஈஸ்வரி ஸ்ரீஸ்கந்தராசா, 372, பருத்தித்துறை வீதி, நல்லூர் என்னும் முகவரியுடன் அல்லது 222-6543 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (-10-ரி)

# பதவி வெற்றிடங்கள்

காப்புறுதி வரலாற்றில் I.S.O 9001/9002 சர்வதேச சான்றிதழைப் பெற்ற ஒரே காப்புறுதி நிறுவனமாகிய

## ஜனசக்தி காப்புறுதி நிறுவனமானது

**※ யாழ்ப்பாணம் ※ வவுனியா**

மாவட்டங்களுக்கான வெளிக்கள உத்தியோகத்தர்களை (2004) நியமனம் செய்யவுள்ளது.

✪ பிரதேச பிரதிநிதிகள் (Area Representatives)

தகைமைகள்:

- ※ க.பொ.த. சாதாரணதரத்தில் கணிதம், தமிழ், ஆங்கிலம் உட்பட ஆறு பாடங்களில் சித்தி - குறைந்தது நான்கு திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
- ※ மேலதிக தகைமைகளுக்கு முன்னுரிமையுண்டு
- ※ வயது 19இற்கு மேல்.

✪ வியாபார அபிவிருத்தி உதவியாளர்கள் (Business Promotion Assistants)

- ※ க.பொ.த சாதாரணதரம் மற்றும் க.பொ.த. உயர்தரம் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.
- ※ காப்புறுதி தொடர்பான முன்னனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை உண்டு.
- ※ வயது 21இற்கு மேல்.

✪ விண்ணப்ப முடிவு திகதி: 20.06.2004

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:

165, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

**"காப்புறுதி என்றால் ஜனசக்தி"**




(C/35555)(42-21-1)

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில் மாடிக்கட்டடங்களைக் கட்டி அன்பளிப்புச் செய்தவரும் இடைக்காட்டுக் கிராமத்தின் கல்விமானுமாகிய கட்டடக்கலைஞர்

## வே.நமசிவாயம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

யா/இடைக்காடு மகாவித்தியாலய
பழைய மாணவர் சங்கம்,
இடைக்காடு.

(21-14)(33018)

# மரண அறிவித்தல்

## திருமதி தையல்நாயகி கதிரவேலு



இல.10, வைமன் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் உயரப்புலம், ஆனைக்கோட்டையைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தையல்நாயகி கதிரவேலு 11.06.2004 வெள்ளிக்கிழமை மாலை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஸ்பென்சர் செல்லத்துரை-அன்னப்பிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற கந்தையா கதிரவேலு (Retied Factory officer Pettigala Balangoda) அவர்களின் அன்பு மனைவியும் குணேந்திரன் (Germany), ரவீந்திரன் (Germany), நளினி ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற ஸ்பென்சர் சபாரத்தினம் மற்றும் திருமதி சின்னம்மா சுப்பிரமணியம் (UK), காலஞ்சென்ற ஸ்பென்சர் சபாநாயகம், சாலஞ்சென்ற ஸ்பென்ஸர் சபாலிங்கம் மற்றும் திருமதி சரஸ்வதி ஜெகபதி (Canada) ஆகியோரின் அன்புச் சகோதரியும் அராலி வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் கௌரி (Germany), நந்தினி (Germany), ஜெயபாலன் (சிவாஸ் ஸ்ரூடியோ, மானிப்பாய்) ஆகியோரின் பிரியமுள்ள மாமியாரும் இந்திரஜித், ஜெனனி, கார்த்திகா, காஞ்சனா, ரிஷிபாலன், சாரங்கன் (யாழ். இந்து) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (13.06.2004) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் ஆனைக்கோட்டை கரையாம்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி நளினி ஜெயபாலன்
(மகள்)

*உயரப்புலம்,*
*ஆனைக்கோட்டை.*

(33015)(37)




# A/L கடினம்!

## பல்கலை அனுமதி மிகக்கடினம்!!
## தொழில்வாய்ப்பு மிகமிகக்கடினம்!!!
## இதனால் எனது எதிர்காலம்????
## என நீங்கள் நினைக்கலாம்
## ஆனால் NIIT
## எனது எதிர்காலத்தை வளமாக்குகின்றது.

**NIIT** ல் இரு வருட கற்கையை பூர்த்தி செய்த மாணவர்கள் **NIIT** உடன் இணைந்துள்ள பின்வரும் பல்கலைக்கழகங்களில் மிகக் குறுகிய காலத்தில் பட்டதாரியாகும் வாய்ப்பு

| | |
|---|---|
| Australia | :- University of Canbera, RMIT, University of Southern Australia |
| U.K | :- University of Sunderland, University of Northumbriya, Bolton Institute |
| Canada | :- University of Winnipeg |
| U.S.A | :- Southern New Hampshire University |
| Newzealand | :-Auckland Institute of Studies |
| Ireland | :- Dundalk Institute of Technology |

**37 நாடுகளில் 3800க்கும் மேற்பட்ட எமது கிளைகளிலுள்ள 2.5 மில்லியன் மாணவர்களுடன் நீங்களும் இணையுங்கள்**

**A Degree from a Leading University**

⬆ 1 Year

**e-Technology Software Engineer**

⬆ 1 Year

**Object Oriented Application Programmer**

⬆ 6 Months

**Web Programmer**

⬆ 6 Months

**After O/Ls or A/Ls**

**The NIIT EDGE**

- MicroSoft, IBM, Oracle, Computer Association, Citrix போன்றவற்றுடனான இணைப்பு.
- ஆசியாவின் No 1 IT பயிற்சி நிறுவனம்.
- ISO 9001 இனால் அங்கீகரிக்கப்பட்ட இலவச பாட நூல்கள்.
- ஆசியாவில் MicroSoft இன் மிகச் சிறந்த பயிற்சி நிறுவனம்.
- உலகின் முதல் 12 IT நிறுவனங்களில் ஒன்று.
- சர்வதேச சான்றிதழ்கள் தொழில் வாய்ப்பிற்கான சேவை.

**NIIT**

GLOBAL LEADERS IN IT EDUCATION AND TRAINING

347, Kasthuriyar Road, Jaffna. T.P 021 222 7250

# சுன்னாகம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் துடுப்பாட்டத்தில் புதியதொரு சாதனை

வலி.வடக்கு,ஜூன்13

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு அவையினால் நடத்தப்பட்ட 30ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டியில் சுன்னாகம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் 7.4ஓவர்களில் நூறு ஓட்டங்களைப் பெற்று புதிய சாதனையை ஏற்படுத்தியுள்ளது.

கடந்தவாரம் சுன்னாகம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகத்திற்கும் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்திற்கும் இடையே அரையிறுதிப் போட்டி இடம்பெற்றது.

இப்போட்டியில் இரு அணிகளுமே ஒன்றுக்கு ஒன்று சளைத்தவை அல்ல என்ற அடிப்படையில் ஓட்டங்களைக் குவித்து ரசிகர்களின் பாராட்டைப் பெற்றுக் கொண்டன.

சராசரியாக ஒரு ஓவருக்கு 8 ஓட்டங்கள் வீதம் இரு அணிகளும் பெற்றுக் கொண்டமை முக்கியமாகும்.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழக அணியினர் தமக்கு வழங்கப்பட்ட 30 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 245 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர்.

இதில் சோபநாத் 64 ஓட்டங்களையும் சங்கர் 48 ஓட்டங்களையும் பிரதீபன் 46 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக வீரர்களான துஷ்யந்தனும், ரஜித்தும் ஆரம்ப வீரர்களாகக் களம் இறங்கி 7.4 ஓவர்களில் 100ஓட்டங்களைப் பெற்று யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் வெற்றிக்கு வழிகாட்டினார்கள்.


விஜயகர்ணன் 81ஓட்டங்களையும் தினேஷ் 41ஓட்டங்களையும் துஷ்யந்தன் 47ஓட்டங்களையும், ரஜித் 40 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இதன்மூலம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் 29.2 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 246 ஓட்டங்களைப் பெற்று இறுதிப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது.

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழக வீரர்களான பிரதீப் 31ஓட்டங்களைக கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் தீபன் 34 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். (10-86)

# பந்துவீச்சாளர்கள் காயமடையாது இருப்பது கடினமான விடயம்

## இந்திய அணியின் முன்னாள் தலைவர் கருத்து




அடுத்த மாதம் இலங்கையில் ஆசியக் கிண்ண கிரிக்கெட் போட்டி நடைபெறவுள்ளது. இதில் பங்கு பெறும் இந்தியப் பந்துவீச்சாளர்களுக்கு பெங்களூரில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதில் இந்திய அணியின் முன்னாள் தலைவர் கபில்தேவ் கலந்து கொண்டு வீரர்களுக்குப் பயிற்சி அளித்து வருகிறார்.

அப்பொழுது நிருபர்களிடம் கபில் தேவ் கூறியதாவது:-

வீரர்கள் அனைவரும் காயம் இல்லாமல் ஆடுவது என்பது கடினமான ஒரு விடயம். எனினும், அவர்கள் தங்கள் உடல் நலனில் அக்கறைகாட்ட வேண்டும். (10)

# தீவக வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளப் போட்டிகளின் முதன்மை வீரர்கள்

யாழ்ப்பாணம்,ஜூன்13

தீவகக் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற தடகளப் போட்டிகளில் ஒவ்வொரு பிரிவிலும் முதன்மை வீரர்களாகத் தெரிவு செய்யப்பட்டோர் விவரம் வருமாறு:-

▶ 11வயதுப் பிரிவு ஆண் - வி.நிஷாந்தன் (புங்குடுதீவு ஸ்ரீசித்தி விநாயகர் வித்தி.)

பெண் - அ.யாழினி (நாரந்தனை றோ.க. பாடசாலை)

▶ 13 வயதுப் பிரிவு - ஆண் ம. கார்த்தீபன் (நயினாதீவு ஸ்ரீகணேச வித்தி.),

▶ 15 வயதுப் பிரிவு ஆண்- பா.ரூபதாஸன் (நயினாதீவு ஸ்ரீகணேசா வித்தி.), இ.சேந்தன் (யாழ்ரன் கல்லூரி).

பெண் - டேரி கொன்செப்ரா (புனித மரியாள் றோ.க.மகளிர் வித்தி.).

▶ 17வயதுப் பிரிவு ஆண் - சு.தனசீலன் (நயினாதீவு ஸ்ரீகணேசா வித்தி.)

பெண் - அ.சுபத்திரா (அல்லைப்பிட்டி பராசக்தி வித்தி.), வ.சயந்தினி (புங்குடுதீவு மகாவித்தியாலயம்).

▶ 19 வயதுப் பிரிவு ஆண் - உ.தனராஜ் (ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி), ஜோசப் திருசேந்திரா (ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி).

பெண் - எஸ்.கலைமகள் காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலயம்.

▶ 21 வயதுப் பிரிவு ஆண் - எஸ். உதயகுமார் (ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி), ஏ.அபிஆனந் (ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி)

பெண் - சு.ஜிந்துஜா (நயினாதீவு மகாவித்தியாலயம்).

இவர்களுக்கான வெற்றிக் கிண்ணங்களை 'உதயன்' பத்திரிகை நிறுவனம் வழங்கியிருந்தது.

இதேவேளை கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகளுக்கான வெற்றிக் கிண்ணங்களை இலங்கை வங்கியின் ஊர்காவற்றுறைக் கிளையும் -

வலைப்பந்தாட்டத்திற்கான வெற்றிக் கிண்ணங்களை யாழ்.பாரதி பதிப்பகம், யாழ்.ஜி.எஸ்.லிங்கநாதன் புடைவையகம் மற்றும் கு.சரவணபவானந்தன் குடும்பம், றொலக்ஸ்+ஜனசக்தி நிறுவனங்களும் -

உடற்பயிற்சிப் போட்டிக்கான வெற்றிக் கிண்ணங்களை யாழ்.சிவா நறுமணப் பூங்கா, விதுசன் நகைமாடம், நியூகமல் செரமிக்ஸ், யாழ். அகம், அருள் விநாயகர் மோட்டோர்ஸ், பாலவிநாயகர் மோட்டோர்ஸ் என்பனவும் -

கிரிக்கெட் சுற்றுப்போட்டிக்கான கிண்ணங்களை அன்னம்ஸ், ஸ்ரீமாதவன் ஆகிய நிறுவனங்களும் அன்பளிப்பு செய்திருந்தன. (10-5)

## கலந்துரையாடல்கள்

தமிழீழ விளையாட்டுத்துறையினரால் 14,16,18 வயதுக்குட்பட்ட இளைஞர்களுக்கு நடத்தப்படவுள்ள தடகள விளையாட்டுப் போட்டிகள் சம்பந்தமான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது.

இவ்விளையாட்டுப் போட்டிக்கு மத்தியஸ்தம் வகித்தல் மற்றும் ஒழுங்குபடுத்தல் சம்பந்தமான விடயங்கள் பற்றி ஆராயப்படவுள்ளதால் யாழ் மாவட்ட மெய்வல்லுநர் சங்க நிர்வாக உறுப்பினர்களைத் தவறாது கலந்து கொள்ளும்படி சங்க செயலாளர் கேட்டுள்ளார். (10-5-86)


❑ ❑ ❑


யாழ்ப்பாணம்,ஜூன்13

யாழ்மாவட்டத்திலுள்ள அனைத்து உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்குமான கலந்துரையாடல் இன்று காலை 10 மணிக்கு நல்லூர் வைமன் வீதியிலமைந்துள்ள யாழ்.நல்லூர் அரசியல்துறைச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்திலுள்ள சகல பதிவுசெய்யப்பட்ட மத்தியஸ்தர்களையும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (10-ரி)

# விளையாட்டு





யாழ்.மாவட்ட கரபந்தாட்ட வீராங்களைகளுக்கு ஜேர்மன் நாட்டுப் பயிற்சியாளர் குழுவினால் கடந்த புதன்கிழமை யாழ் பல்கலைக்கழகத்தில் பயிற்சிகள் வழங்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படங்கள்.

தமிழீழ விளையாட்டுத்துறை மற்றும் யாழ் மாவட்டகரபந்தாட்டச் சங்கம் ஆகியவற்றின் அனுசரணையுடன் இப்பயிற்சிகள் வழங்கப்பட்டன.

# இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்டில் ஸ்கொட் ஸ்ரைரிஸ் அபாரம்

நியூஸிலாந்து கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகளுக்கிடையேயான கடைசி மற்றும் 3 ஆவது டெஸ்ட் போட்டி டென்ட்பிரிஜ்ஜில் நடைபெற்று வருகிறது.

2 ஆவது நாளான நேற்றுமுன்தினம் விளையாடிய நியூஸிலாந்து அணி 384 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்தது. அந்த அணியின் ஸ்கொட் ஸ்டைரிஸ் அபாரமாக ஆடி 108 ஓட்டங்கள் எடுத்தார். இங்கிலாந்து தரப்பில் ஹார்மிசன் 3 விக்கெட்டுக்களையும் ஹோகாட், சாகர்ஸ், ஜைல்ஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் பிளின்டெஸ் ஒரு விக்கெட்டையும் எடுத்தனர்.

இதனைத் தொடர்ந்து முதல் இன்னிங்ஸை ஆடிய இலங்கிலாந்து. ஆட்ட நேர முடிவில் 5 விக்கெட் இழப்பிற்கு 225 ஓட்டங்கள் எடுத்திருந்தது. டிரெஸ்கோதிக் 63 ஓட்டங்களும், மைக்கல் வோகன் 61 ஓட்டங்களும் எடுத்தனர். (10)

# ஐரோப்பியக் கிண்ணத்தைச் சுவீகரிக்கப் போவது எந்த அணி...?

மீண்டும் ஒருமுறை உதைபந்தாட்ட ரசிகர்களை மகிழ்விக்க ஆரம்பமாகியுள்ளது இவ்வருடத்திற்கான ஐரோப்பியக் கிண்ணப்போட்டிகள்.

போர்த்துக்கல் நாட்டில் நேற்று ஆரம்பமான இந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் எதிர்வரும் ஜூலை மாதம் வரை நடைபெறவுள்ளன.

ஐரோப்பிய அணிகளிடையே தெரிவு செய்யப்பட்ட சிறந்த 16 அணிகள் இந்த ஐரோப்பியக் கிண்ணத்தை வெல்வதற்காகக் களத்தில் குதித்துள்ளன.

16 அணிகளும் நான்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு ஒன்றுடன் ஒன்று மோதவுள்ளன. உதைபந்தாட்டத்தின் 'மெக்கா' என அழைக்கப்படுவது ஐரோப்பா. ஐரோப்பாவில் மட்டுமின்றி உலகத்திலுள்ள அனைத்து உதைபந்தாட்ட ரசிகர்களுக்கும் இச் சுற்றுப் போட்டி பெருவிருந்தாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

நான்கு பிரிவுகளிலும் உள்ளடக்கப்பட்டுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

**'ஏ' பிரிவு**

போர்த்துக்கல், கிரேக்கம், ஸ்பெயின், ருஷ்யா

**'பி' பிரிவு**

பிரான்ஸ், சுவிட்ஸர்லாந்து, இங்கிலாந்து, குரோசியா

**'சி' பிரிவு**

சுவீடன், டென்மார்க், இத்தாலி, பல்கேரியா.

**'டி' பிரிவு**

ஜேர்மன், செக்குடியரசு, நெதர்லாந்து, லெத்வியா.

1960 ஆம் ஆண்டு முதல் தடவையாக ஐரோப்பியக் கிண்ணத்துக்கான போட்டிகள் பிரான்ஸில் நடைபெற்றன. இதன் பின்னர் நான்கு வருடங்களுக்கு ஒரு முறை இச்சுற்றுப்போட்டிகள் ஐரோப்பிய நாடு ஒன்றில் நடைபெறுவது வழமை. ஆனால், 2000 ஆம் ஆண்டு மட்டும் பெல்ஜியம், ஹொலண்ட் ஆகிய இரண்டு நாடுகளும் இணைந்து இச்சுற்றுப் போட்டிகளை நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

2000 ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டியில் பிரான்ஸ் 2-1 என்ற கோல் அடிப்படையில் இத்தாலியை வெற்றி கொண்டு கிண்ணத்தைக் கைப்பற்றியது.




12 ஆவது தடவையாக நடக்கும் இந்தச் சுற்றுப்போட்டியில் கிண்ணத்தை எந்த நாடு தட்டிச் செல்லும் எனப் பல எதிர்பார்ப்புக்கள் இருந்தாலும், இம் முறையும் பிரான்ஸ் முதலாவது இடத்திலும் ஸ்பெயின் இரண்டாவது இடத்திலும் கிண்ணத்தை வெல்லுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன என எதிர்பார்க்கப்படுகின்றது.

அநேக ஐரோப்பிய உதைபந்தாட்ட வீரர்கள் கூட பிரான்ஸையே இம் முறையும் கிண்ணத்தை வெல்லுமென கூறுகின்றனர். சிறந்த வீரர்களை உள்ளடக்கிய இந்த அணி கடந்த முறை உலகக்கிண்ணப்போட்டியில் கூட உலகக்கிண்ணத்தை வெல்லுமென எதிர்பார்க்கப்பட்டும் முதல் சுற்றிலேயே வெளியேறியது. எனவே, பெரும்பாலும் எதிர்பார்க்கப்படும் அணி கிண்ணத்தை வெல்லுமென உறுதியாக கூறமுடியாது.

ஜேர்மன, பிரான்ஸ், இத்தாலி, சுவீடன் மற்றும் இங்கிலாந்து அணிகள்! தமது தெரிவுக் குழுக்களுக்கிடையே நடந்த போட்டிகளில் மிகவும் சுலபமாகத் தெரிவுசெய்யப்பட்டதை வைத்து இந்த அணிகள் சிறந்த அணிகள் எனக் கூறுவது கடினம்.

தெரிவுக்குழுப் போட்டிகளில் மிகவும் திறமையாக விளையாடிய டென்மார்க், செக்குடியரசு, குரேசியா, கிரேக்கம் போன்ற நாடுகள் இம்முறை கிணணத்தை வெல்லும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

**- வசந்தன் -**

இம்முறையும் ஜேர்மன அணியை கறுப்புக் குதிரையாக பல உதைபந்தாட்ட வீரர்கள் நம்புகின்றார்கள் ஜேர்மன் நாட்டின் உதைபந்தாட்டச் சம்பிரதாயத்தை அவதானிக்கும்போது உலகக்கிண்ணம் என்றாலும் சரி ஐரோப்பா கிண்ணம் என்றாலும் சரி பல முறை இறுதிப்போட்டிகளுக்கு தெரிவுசெய்யப்பட்டது மட்டுமன்றி, இறுதிப்போட்டிகளிலும் வென்றுள்ளார்கள் எனவே, இம்முறை ஜேர்மன அணி கிண்ணத்தை வெல்லாது என அநேகா கூறினாலும் ஜேர்மன் கறுப்புக்குதிரையாக இருக்கும்.

போர்த்துக்கல் நாட்டில் போட்டிகள் நடைபெறுவதால் போத்துக்கல் அணியும் இம்முறை கிண்ணத்தை வெல்ல வாய்ப்புள்ளது. ✳

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## உயர்திரு. க.பத்மநாதன்

(அதிபர் தரம் - 2:I)



*எமது பாடசாலையில் 18 வருடங்கள் அதிபராக தொடர்ந்து கடமையாற்றி தனது 60 வயதில் அதிபர் சேவையில் இருந்து இன்று (13.06.2004) ஞாயிற்றுக்கிழமை ஓய்வுபெறும்*

**உயர்திரு. க.பத்மநாதன்**
(இ.அதிபர் - சே.2I)

எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு ஆற்றிய சேவையினை மனமுவந்து பாராட்டி வாழ்த்துவதோடு, அவரது கல்விச் சேவை மென்மேலும் தொடரவும் அவர் பல்லாண்டு காலம் நலமுடன் வாழவும் இறையருள்வேண்டி வாழ்த்துகின்றோம்

யா/ஸ்ரீ பஞ்சுசீக வித்தியாலயம்,
புத்தூர். (சீ35559)(37-16-17)

ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

---

**ஆசிரியர் சேவைப்போட்டிப் பரீட்சை பயிற்சி வகுப்புகள்**

புதிய பிரிவுகள் ஆரம்பம்.
இன்று(13.06.2004)ஞாயிறு காலை 9மணி.
நியூட்டன்- யாழ்.நகர்
THIHAAL - இணுவில்
பதிவுகளை செய்து கொள்ளவும்.
(33023)(17)

---

## SHORT COURSES

Dip. in Hardware Technology
Dip. in MS Office

Period- 72 Hours
Time 09.30 - 16.30

16/06/2004 - 26/06/2004

பதிவுகளிற்கு



STP
73, Palaly Road, Kantharmadam
T.P:021-222-2674

---

## யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச்சபை அறிவித்தல்

### கண்டனப்பேரணி தொடர்பான கலந்துரையாடல்

மேற்படி விடயம் தொடர்பான கலந்துரையாடல் 15.06.2004 செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு சபைத்தலைவர் திரு.பெ. கனகசபாபதி அவர்கள் தலைமையில் கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும். சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், இரண்டாம் படிக் கூட்டுறவுச்சங்கங்களின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அறியத்தருகின்றோம்.

செயலாளர்,
யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை.
(C/35558)(42-16-17-37)

---

# நெஞ்சம் கனக்கும் நினைவுகள்

பாடசாலை வீதி, நாவற்குழியைச் சேர்ந்த

3 ஆம் மாதம் பொன்னுத்துரை 13 ஆம் ஆண்டு

| ஸ்ரீதரன் | கிரிதரன் |
|---|---|
|  |  |
| மருந்து பாஸ்மா வகைகள் நிறுவன களஞ்சியக் காப்பாளர் "நாட்டுப்பற்றாளர்" | சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணி வீரவேங்கை றஜின் |

05 – 01 – 1970 உதயம் 23 – 09 –1973
13 – 03 – 2004 அஸ்தமனம் 14 – 06 –1991

அன்போடு உங்களைப் பெற்ற தாயோடு தந்தைநாம் இங்கே
நெஞ்சோடு நாம் போற்றி பரிவோடு பாசமும் ஊட்டி
நாம் வளர்த்த பண்பாளர் நீங்கள் எங்கே?
இடர்படும் வாழ்க்கைக்கு இனியதோர் உணர்வூட்டி
சுடர் மிகும் வாழ்க்கைக்கு சுந்தரமாய் பணிசெய்து
எந்நேரமும் எம்முடன் இணைந்து வாழ்ந்தீர்கள்
இன்று நாம் கண்ணிழந்து குருடராய் அலைகின்றோம்
வந்து தவழ்ந்திடுங்கள் மீண்டும் எம் மடிகளிலே.

மனைவி, மகள். (சி35561)(37-16-17) பெற்றோர், சகோதரர்.

---

# மரண அறிவித்தல்கள்

## அன்ரன் வஸ்தியாம்பிள்ளை



யாழ்ப்பாணம், சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும இல.65,RVE NICOLO, PARIS - 75016, FRANCE ஐ வதிப்பிடமாகவும் கொண்ட அன்ரன் வஸ்தியாம்பிள்ளை 09.06.2004 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் சாந்தியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற வஸ்தியாம்பிள்ளை - எலிசபெத் தம்பதிகளின் மகனும் காலஞ்சென்ற மகேஸ்வரன் - திருமதி மகேஸ்வரனின் மருமகனும் சூசைப்பிள்ளை (ஆஸ்திரேலியா - 0297502076), காலஞ்சென்ற மரியதாஸ், அனிற்றா (கனடா - 416288110) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நேற்று (12.06.2004) சனிக்கிழமை மாலை பிரான்ஸில் நடைபெற்றது என்பதை அறியத்தருகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*97/A, நீதிமன்ற வீதி,*
*திருகோணமலை*
*026 - 2225234.* (33029)(37-16-17)

தகவல்:
திருமதி றொ.மரியதாஸ்

## பொன்னு தேவராசா (தேவன்)



பிறவுண் றோட், கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னு தேவராசா நேற்று (12.06.2004) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னு மற்றும் கண்மணி தம்பதிகளின் தவப்புதல்வனும், சாந்தியின் அன்புக் கணவரும், செல்வராசா மகேஸ்வரி ஆகியோரின் மருமகனும் நிரோசன், நிசாந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் தர்மராணி, ராசராணி, யமுணாராணி (ஜேர்மனி),வசந்தாராணி (ஜேர்மனி), மீனாராணி (சுவிஸ்), மன்மதராசா, சிவராசா (ஜேர்மனி), பொன்ராசா (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 13.06.2004 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00மணிக்கு நடைபெற்று, தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*பிறவுண் றோட்,*
*கொக்குவில்.* (33024)(37-16-17)

தகவல்:
செ.இராசேந்திரன்
(மைத்துனர்)

## ராசநாயகம் ரவிசங்கர்



யாழ்ப்பாணம், அல்லைப்பிட்டி 3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்சில் வசித்துவந்தவருமான ராசநாயகம் ரவிசங்கர் 24.05.2004 அன்று பிரான்சில் அகாலமரணமடைந்தார்.

அன்னார் ராசநாயகம் (பேபி-கொட்டடி) - ராஜேஸ்வரி தம்பதிகளின் பாசமிகு மகனும், ரதீஸ்வரன் (Swiss), ரமேஸ்குமார் (London), ரஜேஸ்கண்ணா (Colombo), லக்ஷிகா (Colombo) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான கந்தையா கனகேஸ்வரி (கொட்டடி), ஜோன்பிள்ளை, நாகம்மா (அல்லைப்பிட்டி) ஆகியோரின் அன்புப் பேரனும் கனகநாயகம் (கொழும்பு), காலஞ்சென்ற சின்னையா மற்றும் கிறிஸ்ரீனம்மா, குணபாலசிங்கம், லில்லிமலர், குணதாசன், செல்லமணி, கிளி (அல்லைப்பிட்டி), சகாயராசன், ஜசிந்தா (CANADA), காலஞ்சென்ற இந்திரா ஆகியோரின் அன்புப் பெறாமகனும், அரியரெத்தினம், காலஞ்சென்ற செல்வமணி, மற்றும் ரெட்ணசிங்கம் மல்லிகா ஆகியோரின் அன்பு மருமகனும் திருமதி ரதீஸ்வரனின் (வனிதா Swiss) அன்பு மைத்துனனும், ராமானுஜன், அபிநயன் (Swiss) ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (14.06.2004) திங்கட்கிழமை METRO LINE 3bis GAMBETTA மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பின்னர் தகனஞ்செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கொழும்பு - 6*
*T.P:2360751, 0776073379* (33026)(37-16-17)

தகவல்:
க.ராசநாயகம் (பேபி)
தந்தை

---

## வடகிழக்கு மாணவர்களுக்கு ஓர் வரப்பிரசாதம் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்

City & Guilds

**London City&Guilds** ஆனது உலகின் 102 நாடுகளில் அங்கீகரிக்கப்பட்டு லண்டனைத் தலைமையகமாகக் கொண்டியங்கும் நிறுவனமாகும். இது தகவல் தொழினுட்பத் துறையில் வழங்கிவரும் சான்றிதழ்கள் உலகின் எப்பகுதியிலும் வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருப்பதுடன் இலங்கை அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டதுமாகும். இப்போது அரச யாழ் தொழிநுட்பக் கல்லூரியின் அனுசரணையுடன் STP கணனி நிறுவனத்தில் இப்பாடநெறிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன் இச்சான்றிதழ் இலங்கை அரசாங்கத்தாலும், சர்வதேசத்தாலும் அங்கீகாரத்துக்குள்ளாகின்றது. தராதரமிக்க இப்பாடநெறியை வடபகுதியில் நடாத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்ட ஒரே ஒரு நிறுவனம் STP கணனி நிறுவனம் ஆகும்.

| பாடநெறி | City& Guilds சான்றிதழ் கட்டணம் |
|---|---|
| e-Quals | |
| 1. Computer User | £ 47 |
| 2. Software Developer | £ 56 |
| 3. System Support | £ 84 |

மேற்படி பாடநெறிக்கான வகுப்புக்கள், செய்முறைகள் STP கணனி நிறுவனத்தில் நடைபெறும். விண்ணப்பப் படிவங்களை யாழ் தொழிநுட்பக் கல்லூரியில் அல்லது STP கணனி நிறுவனத்தில் பெற்று 30-06-2004க்கு முன்பதாக இயக்குநர், STP கணனி நிறுவனம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

குறிப்பு: பயிற்சி, பரீட்சை, சான்றிதழ் தொடர்பான விபரங்களிற்கு
அதிபர், தொழினுட்பக் கல்லூரி யாழ்ப்பாணம். T.P: 2225409அல்லது
இயக்குநர், STP கணனி நிறுவனம், யாழ்ப்பாணம்.T.P: 2222674

---

## சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்

அரச யாழ் தொழில்நுட்பக் கல்லூரியில் பயிற்சியை பூர்த்திசெய்த மாணவர்களுக்கும், கிளிநொச்சி மாவட்ட தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் பயிற்சி நெறியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கும் ஏனைய தொழில்நுட்ப வல்லுநர்களுக்கும் உலக நாடுகள் 102 இனால் அங்கீகரிக்கப்பட்டஇங்கிலாந்து City Guilds சான்றிதழ் பெறும் வாய்ப்பு

City & Guilds

அரச யாழ் தொழினுட்பக் கல்லூரி, மற்றும் கிளிநொச்சி மாவட்ட தொழிநுட்பக் கல்வி நிறுவனம் ஆகியவற்றில் பயிற்சியை முடித்துக்கொண்ட மாணவர்களும் ஏனைய தொழில்நுட்ப வல்லுநர்களும் இலங்கையிலிருந்து நேரடியாக London City&Guilds நிறுவனத்தினால் நடாத்தப்படும் செய் முறைப் பரீட்சையில் தோற்றி சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு தற்போது யாழ் தொழில்நுட்பக் கல்லூரியில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

செய்முறைப் பரீட்சையை மேற்கொள்வதற்கு ஏதுவாக குறுகியகாலப் பயிற்சியை வழங்குவதற்கான ஏற்பாடுகள் தற்போது யாழ் தொழில்நுட்பக் கல்லூரியில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

| பாடநெறி | செயன்முறை பரீட்சைக்காலம் | பயிற்சிக் கட்டணமும் பரீட்சைக் கட்டணமும் | City & Guilds சான்றிதழ் கட்டணம் |
|---|---|---|---|
| மின்னிணைப்பு (Electrical Installation) | 24 hrs | Rs 3864.00 | £ 22 |
| உலோக இயந்திரவியல் (Metal Mechining) | 40 hrs | Rs 3645.50 | £ 16 |
| மரவேலை தொழில்நுட்ப பயிற்சி (Timber Vocation) | 32 hrs | Rs 5934.00 | £ 22 |
| பொறுத்துதல், மற்றும் குழாய் வேலைகள் (Fabrication. Welding and Pipe Work) | 96 hrs | Rs 7670.50 | £ 16 |
| கட்டுமான வேலை (Masonary) | 32 hrs | Rs 5589.00 | £ 22 |
| குழாய் நீர் அமைத்தல் (Plumbing) | 16 hrs | Rs 4209.00 | £ 22 |

விண்ணப்பப் படிவங்களை யாழ் தொழில்நுட்பக் கல்லூரி அலுவலகத்திலும், கிளிநொச்சி தொழில்நுட்ப நிறுவனத்திலும் பெற்று 30/06/2004 க்கு முன்பாக தொழில்நுட்பக் கல்லூரி யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி வேண்டப்படு கின்றீர்.

குறிப்பு: பயிற்சி மற்றும் பரீட்சைக்கான கட்டணங்களை கற்றன் நஷனல் வங்கியின் நகரக்கிளை (HNB City Office) கணக்கு இல. 002-0741376ல் செலுத்தி பற்றுச் சீட்டினை விண்ணப்பத்துடன் இணைக்கவும்.

மேலதிக தகவல்களுக்கு அணுகுங்கள்: திணைக்களம்/ கல்லூரி
இலங்கை தொழில்நுட்ப கல்லூரி
அல்லது
யாழ்ப்பாணம்- 021-2225409/ மட்டக்களப்பு- 065-2246557/ திருகோணமலை- 026-2223034

City& Guilds நிறுவனம்
6மாடி Access கட்டடம், 278, யூனியன் பிளேஸ், கொழும்பு-2
தொலைபேசி: (011)-5361427/8
தொலை நகல்: srilanka@city-and-guilds.co.uk வெப் தளம்: www.cityandguilds.com

யாழ். பல்கலைக்கழக கல்விநிலை தொடர்பாக மாணவர்கள், விரிவுரையாளர்களின் கருத்துக்களை அறிந்துகொள்வதற்கான அரங்கவியல் ஆய்வு ஒன்றை நாடகமும் அரங்கியலும் இறுதி வருட (சிறப்புக்கலை) மாணவர்கள் அண்மையில் நடத்தினர்.

'பல்கலைக்கழக கல்வி நிலையினை ஆராய்தல' என்ற தலைப்பிலான இந்த அரங்க ஆய்வு கலைப்பீட, நுண்கலைத் துறைத் தலைவர் கலாநிதி க. சிதம்பரநாதனின் வழிகாட்டலில் முன்னெடுக்கப்பட்டது. அந்த அரங்காடலின் பெறுபேறுகளை உள்ளடக்கி மாணவி ஒருவர் அச்சு ஊடகத்துக்காக வரைந்த கட்டுரையின் முதற் பகுதி நேற்று முன்தினம் உதயனில் வெளியாகியிருந்தது. இறுதிப் பகுதி இன்று பிரசுரமாகிறது.

# பல்கலைக்கழகக் கல்வி நிலை:

# திருப்தியா? அதிருப்தியா?



எங்களுக்காகக் கிடைச்சிருக்கிற வளங்களை நாங்களே பாவிக்காமல் எங்களுக்கான தேடல்கள் இங்கே இருந்தும் அதைத் தேடாமல் இல்லை, இல்லை என்று கண்மூடிக்கொண்டு முடிவு எடுப்பவாகளாகத் தான் நாங்கள் இருக்கிறம். எங்களுக்காக விட்கள் நடந்தாலும் கூட அந்தப் பிரச்சினை எங்களுக்கு மேல்தான் பழி வாங்கலாகத் திணிக்கப்படுகின்றது." என்றார்கள்.

இந்தவகையில், ஊழியர்களைப் பாாக்கும்போது அவர்களின் மனங்களும் விரக்தி, சோர்வு, வேதனைகளு


1) கதிரைகள்

2) மேசைகள்

3) கட்டடச்சுவர்களில் உணர்வுகளை எழுத்துக்களால் பதிக்கின்றனர் தவிர -

**1) பொன்டிங் -**

இச்செயற்பாடானது மாணவ, மாணவிகள் தமது இறுதி வருடத்தில் மகிழ்வுடன் வெளியேறும் பொருட்டு நடத்தப்பட்டு வரும் சடங்கு ஆகும். வளாக மத்தியில் பெரிய குழி தோண்டி, அதனை நீரினால் நிறைதது சேறுதோய நனைந்து கத்திக்குழறி ஏனைய மாணவர்களையும் தம் விளையாட்டில்/சடங்கில் உட்படுத்துவார்கள். மாணவிகள் மா, நீலம், முட்டை எனப் பலபொருள்களால் (ஏப்ரல் பூல் போல்) ஏனைய மாணவிகளுக்கு தெளித்து விளையாடுவார்கள். இங்கு மாணவ, மாணவிகள் மிகுந்த உற்சாகத்துடனும் விருப்புடனும் போட்டி போல் விளையாடுவார்கள். இங்கு கத்துவதும் குழறுவதும், ஆடுவதும், பாடுவதும், குதூகலிப்பதுவும் அட்டகாசமான வெளிப்பாடாக இருக்கும். இது ஒவ்வொரு வருடமும்



குறிப்பிடும்போது, "வகுப்புக்க விரிவுரையாளரை மட்டும் பார்த்துக்கொண்டிருப்பம் வகுப்பு முடிய அவரவர் தன்ர பாட்டில போயிடுவினம். ஒருதரை ஒருவர் சேர சந்தர்ப்பம் இல்லை. அதால எல்லாரும் ஒண்டுசேர்ந்து இருக்கக் கூடிய இடம் இதுதான். இந்த பெஞ்

கட காரில கூடக் கூட்டிக்கொண்டு போவினம். அப்ப எல்லாரும் எல்லாருக்கும் நல்ல வழிகாட்டியாய் இருந்திச்சினம். அப்ப இருந்தவை கூட இப்ப ஒவ்வொரு Departmentஇலையும் இருக்கினம். ஏன் அவையளும் மாறிட்டினம் எண்டு தெரியேல்ல. நாங்கள் Boys ஓட சேர்ந்து **Party**களில ஆடிப்பாடின காலம் இருக்கு. Campasக்க நாங்கள் இருக்கேக்க "நல்லா" இருந்தனாங்கள். ஒருதருக்கு ஒருதர் படிச்ச பாடம் சொல்லிக் குடுத்து, எழுத்திக்குடுத்துத்தான் படிச்சம். போட்டி இருந்த மாதிரியோ எல்லாரும் Class அடிச்சு லெக்சரராய் வர

டுத்தருகின்ற நியாயமான சந்தர்ப்பங்களை நாங்கள்தான் துஸ்பிரயோகம் செய்யிறம் என்கிறார்கள் சில பல்கலைக்கழக மாணவர்கள்.

எனவே, பல்கலைக்கழகக் கல்வி முறைமையில் ஆசிரிய மாணவர்களுக்கிடையேயான உறவு சாதக பாதக நிலைமைகளில் இருப்பதாகவே தெரிகின்றது.

இங்கு ஊழியர்களின் வெளிப்பாடுடன் இருப்பதாகத் தெரிகிறது. ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள் மூவரினதும் வெளிப்பாடுகள் ஒருவருககொருவர் புரிந்துணர்வற்ற தன்மையில் இருப்பதனைக்காட்டுகின்றது. ஒருவரை ஒருவர் வெறுப்பதும் விரும்புவதும் தெரிகின்றது. இவர்களுள் ஒரு சுயாதீன உரையாடல் தன்மை இன்மையாலேயே குழப்பங்கள் முரண்பாடுகள் உருவாகுவதும் அதிகாரத்

நிகழும். இங்கு மாணவர்களின் உள் மன வெளிப்பாடனது சுதந்திரமாக இயங்குவதைக் காணலாம்.

2) மரநிழல்.

3) ஸ்ரோன் பெஞ் - ஆகிய இடங்களினைத் தனது இடங்களாகப் பயன்படுத்துகிறான். அந்த இடங்களில் இருந்து தன் உணர்வுகளிற்கு நியாயமான களம் கொடுக்கின்றான். இது பற்றி விஞ்ஞான பீட இறுதிவருட

சில எங்களைத்தவிர (Final Year) மற்ற Years இருக்கவிடமாட்டம். வேற வேற Faculty Departmentகாரர் எல்லாரும் சேர்ந்திருந்து உள்ள நாட்டுக் கதையெல்லாம் இதில இருந்து தான் கதைப்பம். இது ஒரு தெருச் சந்தை மாதிரித்தான்" - என்றார்.

வேறு சில இறுதிவருட கலைப் பீட மாணவர்கள் குறிப்பிடும் போது:-

"வெளிய இருந்து வரேக்க இருக்கிற கவலைகள், துன்பங்களை இங்க Friends ஓட பகிர கவலைகள் போகுது."

"சேர்ந்திருந்து கத்திக்குழறி ஆறுதலாய் இருக்கிற இடம் இது. மனசுக்குத் திருப்தியாய் இருக்கும்."

## ஓர் அரங்க ஆய்வு

வேணும் எண்டமாதிரியான நினைப்பே இருக்க இல்லை. நாங்களும் நிறைய Tute work செய்தனாங்கள்தான் விளையாட்டுக்கள், கலைவிழாக்கள், நாடகம் எண்டு எல்லாத்திலையும் எல்லா Facultyயும் சேர்த்து தான் நிற்பம். இப்ப எல்லாரும் ஒதுங்கி இருக்கினம் போலக்கிடக்கு. Campas பிள்ளைகளைப் பார்க்க அப்பிடித்தான் தெரியுது. வெறும் புத்தகமும் வீடும் மாதிரி இருக்கினம்" - என்றார்.

எனவே, அன்றைய கால பல்

களானது:-

"எங்கட சமூகத்தின்ர தேவை உணரப்படுவதாய் தெரியேல"

"மாணவர்களுக்கும் எங்களுக்குமான உறவு நெருக்கமாய் இருக்க வேணும் எண்டு நினைக்கிறம் இது சரியான குறைவு"

"இங்க உள்ள அதிகாரங்கள் சப்பாத்துக்கால்களால மிதிக்கிறதாகவே உணர்றம்..."

"மாணவர்களிலான பிரச்சினை தனமை மேலோங்கி நிற்பதும் காணப்படுகின்றன.

இன்னொருபுறம் மாணவர்களின் எதிர்காலம் பற்றிச் சிந்திக்கும்போது அவன் இறுக்கத்தினால், அழுத்தத்தினால் வாய்விட்டுக் கத்திக் குமுறுகின்றான்; கூத்தடிக்கின்றான். ஆனால், ஆசிரியர்கள் அத்தகைய நிலையின்றியுள்ளனர். மாணவர்கள் தமது வெளிப்பாட்டை வெளிக்காட்ட விரும்புகின்றனர். இதனால் -

மாணவன் குறிப்பிடும்போது, "வகுப்புக்க இருக்கேக்க மண்டையெல்லாம் இறுகி விறைச்சுப் போயிடும். காலமை வகுப்புத் தொடங்கினால் பின்னேரம் தான் முடியும். 1/2 மணித்தியாலம் மட்டுந்தான் சாப்பிட்டு வா என்று தாறது. எனக்கு அதுக்க இருக்க ஏலாது. 'Free' தேவை. அதுதான் அந்த 1/2 மணித்தியாலத்துக்க வந்து நிண்டு கத்திக்குழறிப் போட்டு போறன்" - என்றார்.

கலைப்பீட இறுதிவருட மாணவன்'

"எதையும் வெளிப்படையாகக் கதைப்பம்" - என்றார்கள்.

என்வே, மூவரினதும் மனங்களைப் பார்க்கும்போது மூவரினதும் நல்ல எண்ணங்களும் சேர்வதற்குப் பல்கலைக்கழகத்தில் பொருத்தமான களம் இல்லை என்பது தெரிகிறது. சுயாதீன உரையாடலுடன் கூடிய, ஒருவரை ஒருவர் அறியவும் சேரவும் உணர்வுகளைப்பகிரவும் களம் அமைக்கபபடுவது அவசியமாகத் தெரிகிறது. எனவே,

தொகுத்து நோக்கும்போது பல்கலைக்கழக சூழலானது குழப்பமான, சந்தோசமின்றி, முரண்பட்டுக்கொண்டிருப்பதனை அரங்க செயற்பாட்டின் மூலம் ஆய்வுசெய்ய முயன்றேன். அதன் பொருட்டு வெவ்வேறு வெளிகளில் ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்களுடனான சந்திப்புக்களில் ஈடுபட்டேன். அப்போது மாணவர்கள் தாம் பல்கலைக்கழகம் வரும்போது நிறையக் கனவுகளுடன் - கல்வியில் ஆசையுடன் - வந்ததாகவும் அதற்கான களம் ஆசிரியர்களினால் கிடைக்கப் பெறவில்லை என இருவரிடையேயும் சாதக, பாதக நிலைமைகள் காணப்படுவதாகத் தெரிகின்றது. ஆசிரியர்கள், மாணவர்களின் நன்மைக்காக எனக் கூறியதை வைத்து மாணவர்களை அணுகும்போது ஒரு பகுதி மாணவர்களிடம் ஆசிரியர் பற்றி விருப்பும் மறு பகுதி மாணவர்களிடம் ஆசியர் பற்றி வெறுப்புக்களும் இருப்பதாகத் தெரிகிறது. நன்மைக்கென நினைப்பவை தீமையாகவே மாணவர்களுக்குத் தெரிகின்றன. ஆகையினால், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள் ஆகிய மூன்று பகுதியினரிடையேயும் நியாயமான ஒன்றிணைவுக்காக ஒருவரையொருவரிடம் அவரவர் விருப்பம், விருப்பின்மை என்பனவற்றை அறியவும் கதைக்கவும் இடம் தேவையாகின்றது.

அண்மையில் முன்னாள் பல்கலைக்கழக மாணவியொருவரைச் சந்தித்த போது "நாங்கள் Campasஇல் படிப்பு என்பதை விட மனிசர் எண்டு பழகினதுதான் கூட. எல்லா Faculty Studentsஇக்கும் எல்லாரையும் தெரியும். வட்டுக்கோட்டையில Science Faculty இருக்கேக்க கூட அங்கு இருக்கிறவையையும் இங்க உள்ளவைக்கும் தெரியும். அதேமாதிரித்தான் விரிவுரையாளர்கள், பேராசிரியர்களும் எல்லாருக்கும் எல்லா முகங்களும் தெரியும். அவையளும் மாணவர்களோட சேர்ந்திருந்து ஸ்ரோன் பெஞ்சில இருந்தும் கதைப்பினம். தங்

கலைக்கழக வாழ்க்கைக்கும், இன்றைய கால வாழ்க்கைக்கும் இடையே பாரிய இடைவெளி காணப்படுகின்றது. அன்று கூட்டாக, உறவாக இருந்த நிலைமைகள் இன்று சிதறடிக்கப்பட்டிருக்கின்றன. அன்றைய காலத்தில் அனைவரையும் கலை வெளிப்பாடுகள் ஒன்றிணைக்க உதவியுள்ளன.


செல்வி தர்மினி பத்மநாதன்
நாடகமும் அரங்கியலும்
இறுதி வருடம்
(சிறப்புக்கலை)
யாழ். பல்கலைக்கழகம்.


எனவே, ஒட்டுமொத்தமாக நோக்கும்போது, "இப்ப எல்லாரும் ஒதுங்கியிருக்கினம்" போகப் போக "பிரிவினை கூடுது" என்கின்றனர்.

எனவே, இங்கு ஆய்வு செய்கையில் அவதானிக்கும்போது குறிப்பாக முழுச் சமூகத்தினதும் வாழ்க்கை பல்கலைச் சமூகத்தின் கைளில் உள்ளது. அவர்கள் தம்மை நெறிப்படுத்தும் போது சமூகத்தினையும் நெறிப்படுதத முடியும். ஆனால், ஒருவருக்கொருவர் குறை கொள்வதாகவும் தனக்குரிய உரிமைகளைப் பெறவும், செயற்படவும் சந்தர்ப்பம் இருந்தும அதனைப் பயன்படுத்தாதிருப்பதனையும் காணமுடிகிறது. முன்பு நடந்த அல்லது நடக்காத செயற்பாடுகளைக் கூறிக் கூறி அதனையே வாழ்வாக்கிக் கொண்டிருப்பவர்களாகவே தெரிகின்றது.

ஒரு விரிவுரையாளரிடம் கேள்வி கேட்டால் அல்லது அவருடன் விவாதித்தால் கையில தருவினம் (பரீட்சை பெய்ல் ஆக்குவினம்)என்பது.

இங்கு வழிப்படுத்துபவர்கள் எல்லோரும் ஒரே தன்மையானவர்கள். மாணவர்கள் எல்லோரும் முரணானவர்கள் என்பதல்ல. ஆளுக்காள் நல்ல பக்கமும் இருக்கிறது. முரணான பக்கமும் இருக்கின்றது என்பதனைக் காண முடிகின்றது.

எனவே, இப்படி இருந்துகொண்டு ஒரு காரியம் செய்யமுடியாது என்பது உண்மை. அனைவரிடமும் அதாவது மாணவர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள் அனைவரிடமும் ஒன்றிணைவு அவசியமாகின்றது. இந்த ஒன்றிணைவுக்கான சுதந்திர உரையாடல் களம், சுயாதீன உரையாடலுக்கான களம் என்பன அமைக்கப்படுவது அவசியமானது என நினைக்கின்றேன்.

(முற்றும்)

# முழு இலங்கையினதும்....

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

கணேஷ் அக்காலத்தில் இடதுசாரி இயக்கத்தில் முக்கியமான ஒருவராக இருந்தார். லங்கா சமசமாஜக் கட்சி என்ற பொது நிலையிலிருந்து பொதுவுடைமைக்கட்சி என்கின்ற தனித்துவ வளர்ச்சி ஏற்பட்ட காலத்தில் பொதுவுடைமைக் கட்சியின் ஆரம்ப கால முக்கியஸ்தர்களிலும் பார்க்க செயலூக்கத் தொழிற்பாட்டாளர்களுள் ஒருவராக இருந்தார் என்பதே பொருத்தமாகும். பொ.கந்தையா, வைத்தியலிங்கம் போன்றோர் கணேஷ் பற்றிய அக்காலத்து நினைவுகளை எங்களுடன் மீட்டமை இப்பொழுதும் என் நினைவில் இருக்கின்றது.

**மணிக்கொடிக்காலம்**

கணேஷ் பொருள் வசதிமிக்க ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர். இவரும் இவரது மைத்துனரான பி.தேவராஜும் ஆரம்பகாலத்தில் பொதுவுடைமை இயக்கத் தொழிற்பாடுகளில் ஈடுபட்டவர்கள். தேவராஜ் இங்கிலாந்து சென்று பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் கட்சியின் ஓர் அங்கத்தவராகவும் இருந்தார் என்று நினைக்கிறேன். அவருடைய செயற்பாடுகள் அரசியல் மயப்பட்டனவாகவே இருந்தன. கணேஷோ இலக்கியத்தையே தமது ஆர்வ ஈடுபாட்டுக் களமாகக் கொண்டார். இந்திய எழுத்தாளர்கள் பலருடன் அவர் உறவு இருந்தது. கட்சி நிலையில் பொன்கந்தையா, பீற்றர் கெனமன், கணேஷ் ஆகியோர் கலை இலக்கிய ஈடுபாடுகொண்டவர்களாகத் திகழ்ந்தவர்கள். பீற்றர் கெனமன் திரைப்பட விமர்சகராகவே தனது எழுத்து வாழ்க்கையை ஆரம்பித்தார். அக்காலத்தில் இப்பொதுவுடைமைக் குழு இளைஞர்கள் ஒரே இடத்தில் ஒரு குழும வாழ்க்கையை மேற்கொண்டிருந்தனர். கொம்யூன் முறைமை (Commune) அக்காலத்தில் மிகப் பிரசித்தமாக இருந்தது. நவீன தமிழ் இலக்கியத்தைப் பொறுத்தவரையில் இது ஏறத்தாள மணிக்கொடிக் காலமாகும். மணிக்கொடிக் குழுவினருடன் இவருக்குத் தொடர்பு இருந்தது. தமிழகத்தில் மதுரைத் தமிழ்ச் சங்கத்திலும் பின்னர் ராஜா காலேஜ் என்ற நிறுவனத்திலும் படித்ததாகத் தெரியவருகிறது. சுதந்திரப் போராட்டத்தில் ஏற்பட்ட ஈடுபாடு காரணமாக இவரது தமிழகப் படிப்பு குழம்பியது எனலாம்.

கணேஷினுடைய இலக்கியப் பார்வை அந்த அகண்ட மனித நிலையைத் தழுவியது. பிரதேசங்களின் தனித்துவங்களினூடாகக் கிளம்பும் உலகப்பொதுமை அவரது இலக்கிய மூச்சின் உயிர் நாடியாகிறது. கணேஷினுடைய இலக்கியப் பலம் இதுதான். இத்தகைய பார்வை அகற்சியும் உலகப் படைப்பிலக்கியத் தாடனமும் கொண்டவர்கள் நம்மிடையே மிக மிகச் சிலரே. அந்தச் சிலருள்ளும் கணேஷ் நிமிர்ந்து, உயர்ந்து நிழல் பரப்பி நிற்பதற்குக் காரணம் அவருடைய அடக்கமுடைமையும் அறிவாழமுமாகும்.

நண்பர் கணேஷ் தன்னை என்றுமே முன்னிலைப்படுத்தியதுமில்லை; முனைப்புறுத்தியதும் இல்லை. அவருடன் உரையாடும் பொழுது ஓர் உண்மை தெரியவரும் - நான் என்னும் சொல் அவரிடம் மிக மிக அருகியே காணப்படும். இது பலருக்குப் பாடமாக அமைய வேண்டிய ஒரு பண்பு.

கணேஷ் ஒரு மலை விளக்கு. அதன் ஒளி பல இடங்களுக்குத் தெரியும். பல பாதைகளைச் சுட்டும். அவரது பணிகள் போற்றப்படல் அவசியம்.

பி.கு.:- நண்பர் கணேஷ் அவர்களுடைய ஆக்கங்கள் எல்லாவற்றையும் தொகுத்து ஒரு முழு நூலாக வெளியிடவேண்டியது அவசியம். இது அவரது உறவினர்கள், நண்பர்கள், இலக்கிய ஆர்வலர்கள் தவறாது செய்யவேண்டிய ஒரு பணியாகும்.

*(நன்றி : ஞானம்)*

# மேர்ச்சனட் பினான்ஸ் லிமிட்டெட்

இல.555, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## வாகனங்களின் மூலப்பதிவுப் புத்தகங்கள் - மீளப்பெறல் - ஒரு வசதி

**வாகனங்கள் இலக்கம் :-**

| | | | |
|---|---|---|---|
| 41-3574 | 27-1939 | 26-8936 | 27-4673 |
| 42-3927 | 27-9771 | 28-1754 | 42-1182 |
| 41-9454 | 28-1168 | 41-9556 | 26-8419 |
| 26-5112 | 26-7299 | 27-9052 | 28-1862 |
| 26-4568 | 28-7261 | 26-8746 | 41-7041 |
| 28-6263 | 28-9697 | 41-6126 | 41-4129 |
| 42-0999 | 40-2295 | 43-9944 | 42-0761 |

வாடகைக் கொள்வனவு, தவணைமுறைக் கொள்வனவு, குத்தகை ஒப்பந்த அடிப்படையில் எம்மிடம் கொள்வனவு செய்யப்பட்டுள்ள மேற் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கங்களையுடைய வாகனங்களை வைத்திருப் பவர்கள், உரிமையாளர்கள் தத்தமது வாகன மூலப் பதிவுப் புத்தகத்தை எம்மிடமிருந்து மீளப்பெற்றுக்கொள்ள வசதியாக **ஒப்பந்தத்தின்படி 31.10.1995இல் செலுத்தவேண்டியுள்ள மிகுதியாக இருக்கும் முதல் வட்டித் தொகைகளை மட்டும் செலுத்தி** தங்களது வாகனப் பதிவுப் புத்தகங்களை மீளப்பெற்றுக்கொள்ளுமாறும் பின்னர் ஏற்படக்கூடிய சிரமங்களைத் தவிர்த்துக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கிறோம்.

அலுவலக நேரம்:

**காலை 9.00 மணி - 1.00 மணிவரை**

**(கிழமை நாள்களில்)**

*முகாமைத்துவ இயக்குநர்.*

(32823)(34-19-16)



# கேள்வி அறிவித்தல்

## வலயக் கல்வி அலுவலகம் - வலிகாமம்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரினால் 2004ஆம் ஆண்டு ஜூன் மாதம் 24ஆம் திகதி ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினமே முற்பகல் 10.30 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

| தொ.இல | பாடசாலையின் பெயரும் வேலை விவரமும் | மீளளிக்கப்படாத வைப்புப் பணம் | மீளளிக்கப்படும் வைப்புப் பணம் |
|---|---|---|---|
| 01. | யா/விக்ரோரியாக் கல்லூரி மாடிக் கட்டடத் தொடர்வேலை | 500/= | 14,000/= |
| 02. | யா/இனுவில் மத்தியகல்லூரி மாடிக்கட்டடத் தொடர்வேலை | 500/= | 12,000/= |
| 03. | யா/மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் றோ.க. மாடிக்கட்டடத் தொடர்வேலை 80'X25' | 750/= | 25,000/= |

01. மேற்படி வேலைக்கு இக்ராட் (ICTAD) நிறுவனத்தின் 08ம் அதற்கு மேற்பட்ட தரத்திற்கும் பதிவு செய்து கொண்டவர்கள் விண்ணப்பிக்கத்தகுதி பெற்றவர்களாவர்.
02. கேள்விப் பத்திரங்களில் பெறுமதி சேர்வரி (VAT) 15% சேர்க்கப்பட்ட கேள்வித் தொகை பெறுமதி சேர்வரி (VAT) 15% சேர்க்கப்படாத கேள்வித்தொகை என்பன தனித்தனியாக குறிப்பிடப்படுதல் வேண்டும்.
03. மேற்படி வேலைக்கான கேள்விப் பணத்தை வலிகாமம் கல்வி வலயத்தின் வலயக் கல்விப்பணிப் பாளரின் வங்கிக் கணக்கில் வைப்புச்செய்து அல்லது இக்காரியாலயத்தில் நேரடியாகச் செலுத்தி 14.06.2004ஆம் திகதியிலிருந்து 21.06.2004ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை வலிகாமம் கல்வி அலுவலகப் பாடசாலை வேலைகள் கிளையில் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
04. விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்திசெய்து மூலப்பிரதியும், எம்மால் வழங்கப்படும் ஒப்பந்த நிபந்தனைப்படிவமும் கையொப்பம், இறப்பர் முத்திரை என்பன இடப்பட்டு அவற்றினையும், கேள்விப்பத்திர இணைப் பிரதியினையும் தனித்தனி இரு கடித உறைகளில் இட்டு கடித உறையின் இடப்புற மேற்பக்கத்தில் வேலையின் விவரம் எழுதப்படல் வேண்டும். தனித்தனியே கடித உறைகளில் போடப்பட்ட இரு பிரதிகளையும் பிறிதொரு கடித உறையிலிட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்ததாரரின் முத்திரை இடப்பட்டு மருதனார்மடத்திலுள்ள வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் 2004ஆம் ஆண்டு ஜூன் மாதம் 24ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப.10.00 மணிக்கு முன்னர் இடப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட கால நேரத்திற்குப் பிந்திய கேள்விப் பத்திரங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
05. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் தெரிவு செய்யப்படும் திகதியிலிருந்து 3 மாத காலத்திற்குள் அனைத்து வேலைகளையும் பூர்த்தி செய்து கையளிக்க வேண்டும். எதுவித காலதாமதங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. சரியாக நிரப்பப்படாத பிழைகள் கூடிய தெளிவற்ற கேள்விப்பத் திரங்கள் நிராகரிக்கப்படும்.
06. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன் மேலதிக விவரங்களையும் பாடசாலை வேலைகள் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

*மருதனார்மடம்,*
*சுன்னாகம்.*
*11.06.2004.*

(C/35547)(42-21-16-19)

**திருமதி றெ.இருதயநாதன்,**
**வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**வலிகாமம்.**


பிக்கு எம்.பிமார் மீதான தாக்குதல்:

# நாடாளுமன்றச் சம்பவங்கள் தொடர்பாக பொலீஸார் விசாரணைகளை நடத்தலாம்

கொழும்பு,ஜூன்13

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற வன்முறைகளுக்கு எதிராக குற்றத் தடுப்புச் சட்டத்தின் கீழ் விசாரணை செய்வதற்கு பொலீஸாருக்கு எந்தத் தடையுமில்லை.

- இவ்வாறு சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம்.லொக்குபண்டார தெரிவித் தார்.

கருத்துக்களை சுதந்திரமாகத் தெரிவிக்கும் சிறப்புரிமை மாத்திரமே நாடாளுமன்றத்தில் வழங்கப்பட்டிருக் கிறது. நாடாளுமன்றத்தின் உள்ளே வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபடும் அதிகாரம் உறுப்பினர்களுக்கு வழங் கப்படவில்லை.

நாடாளுமன்றத்தில் கடந்த செவ் வாய்க்கிழமை நடந்த சம்பவங்கள் தொடர்பாக படக்காட்சிகள் உள்ளன. பொலீஸார் அவற்றைப் பயன்படுத்தி விசாரணை மேற்கொள்ள எந்தத் தடை யும் இல்லை என்று அவர் சுட்டிக் காட்டினார்.

இதேவேளை, ஜாதிகஹெல உறுமய உறுப்பினர்கள் நாடாளு மன்றத்தில் தாக்கப்பட்டது தொடர் பில் பொலீஸாரிடம் முறையீடு செய் வது பற்றி அக்கட்சி முடிவுகள் எதை யும் எடுக்கவில்லை. (8)

# இராணுவ அதிகாரி, சிப்பாய் இருவரையும் காணோம்!

நாகர்கோயில் பிரதேசத்தின் முன் னரங்கக் காவல் நிலையப் பகுதியில இருந்து கடந்த திங்கட்கிழமை முதல் லெப்டினன்ட் தர இராணுவ அதிகாரி ஒருவரும், சிப்பாய் ஒருவரும் காணா மற் போயிருக்கின்றார்கள் என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித் துள்ளன.

லெப்டினன்ட் விக்கிரமாரச்சி என் பவரும், அவரின் உதவியாளர் ஒரு வருமே காணாமற் போயிருக்கின் றார்கள்.

இவ்விடயம் குறித்து யுத்தநிறுத் தக் கண்காணிப்புக் குழுவிடமும் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

இவர்கள் இருவரும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத் துக்குள் சென்றிருக்கலாம் எனத் தாங்கள் கருதுகின்றார்கள் என இராணுவத் தரப்பில் தெரிவிக்கப் பட்டது.

எனினும், புலிகள் தரப்பிலிருந்து இவ்விடயம் குறித்துத் தகவல் எதுவும் வெளியாகவில்லை. (க)


# நிபுணத்துவ வைத்திய சேவை

லண்டன் பிரபல சர்வதேச மாற்று மருத்துவ நிபுணர்
பேராசிரியர் டாக்டர் மருது கந்தப்பு Phd அவர்கள்

நரம்பு நுண்செயல் சிகிச்சை Cercbro - Neural Therapy (CNT) எலும்பு, தசைநார், அதிர்வுச் சிகிச்சை Skeleto Muscular Articulation Tech. (SMAT) ஆகிய தனது புதிய முறைகளாலும் மேலைநாடுகளில் பிரபலமான Osteopathy முறையாலும் சகல நோய்களுக்கும் விசேடமாக Arthritis எனப்படும் மூட்டு வியாதிகளுக்கும் நிவாரணம் அளிக்கிறார்.

Sharon Lodge 62, Viddiani Road, Chundikuli Jaffna 16-06-2004 - 21-06-2004
Vavuniya New Medical & Clinic, Station Road 21-06-2004 - 26-06-2004
Colombo 6, Alternative Medispot, Station Road 10-06-2004 - 17-06-2004

(26)(32877)

முன்பதிவுகளுக்கு முந்துங்கள் - தொடர்புத் தொலைபேசி
Jaffna: 222 5051/ Vavuniya: 0777610119/2224163/Colombo 077 600 5425

Medical Academy of Latvia - Riga Stradins University - MD Six yrs Course
Admission Sept. 2004 - தொடர்பு -Dr. M.Canthaboo Tel: 0776005425.


# 6ஆம் மாத நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 20 - 01 - 1964 | 13 - 12 - 2003 |



## திருமதி சாந்தினி ஆனந்தராஜா

(B.A.Dip.in.Edu.)

**எமது அன்பின் குல விளக்கே!**
**குடும்பத்தின் ஒளி விளக்கே!! நீங்கள் பிரிந்து**
**ஆறு மாதங்கள் ஆனாலும் ஆறாதம்மா எம் கண்ணீர்!**
**அன்புக் குழந்தைகள் அம்மா எங்கே? என்று கேட்கிறார்கள்!**
**காற்றாய் வந்து தானும் ஆறுதல் கூறுமம்மா**
**எம் பாசத்தின் சாந்தியே**
**உம் ஆத்மா சாந்தி அடைய இந்நாளில் பிரார்த்திக்கின்றோம்!**

*மயிலங்கூடல்,*
*இளவாலை.*

(32981)(42-16-19)

**அன்புக் கணவர், பிள்ளைகள்,**
**சகோதரர்கள்.**

# மரண அறிவித்தல்

## மாணிக்கம் குகராஜா

அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் நீராவியடி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகக் கொண்டவரும் புறூணை நாட்டில் சட்டத்தரணியாகத் தொழில்புரிந்தவருமான மாணிக்கம் குகராஜா பிரான்ஸில் 10.06.2004இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - பெரியபிள்ளை தம்பதி களின் புதல்வனும் காலஞ்சென்ற தனலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கனகசபை-செல்லமுத்து தம்பதிகளின் மருமக னும் காலஞ்சென்ற சின்னத்துரை - தங்கரத்தினத்தின் அன்புச் சகோதரனும குகலட்சுமி, தனராஜா (பிரான்ஸ்), கனகராஜா (பிரான்ஸ்), யோகலட்சுமி, கிருஸ்ணராஜா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயானந் தன், திரவியம், விஜயகுமாரி, இளங்கோ ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*25, மணிக்கூட்டு ஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.T.P.:021-2223861.*

தகவல்:
**ஜெயானந்தன் (மருமகன்).**

(33002)(24)

# இங்கு காணி கொள்வனவுசெய்யும் வெளிநாட்டவருக்கு 100 வீத வரி

கொழும்பு,ஜூன்13

வெளிநாட்டவர்கள் இலங்கையில் காணியைக் கொள்வனவு செய்யும் பட்சத்தில் அதற்காக 100 வீத வரியைச் செலுத்த வேண்டும் என்று காணி, விவசாய, கால்நடை அபிவிருத்தி அமைச்சர் அநுரா திசநாயக்க தெரிவித்தார்.

வெளிநாட்டவர்கள் இலங்கையில காணியைக் கொள்வனவுசெய்யும் போது அதற்காக 100 வீத வரியைச் செலுத்த வேண்டும் என்ற சட்டம் கடந்த பொ.ஐ.மு அரசாங்கத்தால் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது.

ஆனால், கடந்த ஐ.தே.கட்சி அரசு இந்த வரிமுறையை நீக்கியிருந்தது.

இதனைச் சாதகமாக்கிப் பேருவளை, அளுத்கம, அம்பலாங்கொட, காலி போன்ற தென்கரையோர மாகாணத்தைச் சேர்ந்த பகுதிகளில் உள்ள பெருமளவு காணிகளை வெளிநாட்டவர்கள் கொள்வனவு செய்தனர். இதனால் காணி விலை அதிகரித்தது.

இதனை நீக்கும் பொருட்டே அரசாங்கம் மேற்படிதீர்மானத்தை எடுத்துள்ளது.

இதற்காகக் காணி தொடர்பான தேசிய காணிக் கொள்கையொன்றைப் பிரகடனப்படுத்துவதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபட்டு வருகின்றது.என்று தெரிவித்தார்.

(ஐ-4)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூன்13

யாழ்.மாவட்ட சூழல் - அபிவிருத்தி குறித்த முக்கிய கலந்துரையாடல் ஒன்று நாளை திங்கட்கிழமை யாழ்.செயலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் செபத்மநாதன் தலைமையில் காலை 10 மணிக்கு இக்கலந்துரையாடல் இடம்பெறும்.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள், திட்டமிடல் உதவியாளர்கள் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி கலந்துரையாடலில் மாவட்ட மட்டத்தில் இயங்கும் 52 வகையான கைத்தொழில் நிறுவனங்களுக்கு அனுமதிப் பததிரம் வழங்கல மற்றும் சூழல் மாசு அடைவதைத் தடுத்தல் போன்ற விடயங்கள் குறித்து ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(4-185)

## சொற்பொழிவு

வடமராட்சி,ஜூன்13

வடமராட்சி ஸ்ரீவல்புர ஆழ்வார் சுவாமி கோயில் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் இடம்பெற்றுவரும் வாராந்த ஆன்மீகச் சொற்பொழிவு வரிசையில் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கண்ணனின் கருணை எனும் தலைப்பில் சிவஞானம் பாலமுரளி சொற்பொழிவாற்றுவார்.

(4-173)

வர்த்தக பெருமக்களே!
இனி கவலை வேண்டாம்

தங்கள் பொருட்க்ளை சிறந்த பாதுகாப்பான உறுதியான முறையில் பொதி செய்து வாடிக்கையாளர்களுக்கு விநியோகிப்பதற்கான தரமான உறைகள் இல்லையே என்ற கவலை இனி வேண்டாம். தங்கள் விருப்புக்குரிய தேவையை தங்கள் சிந்தனைப்படி உறைகளைத் தயாரித்து வழங்க இன்று முன்னிலையில் நிற்கின்றோம்.

கடந்த 3 வருடங்களக்கு மேலாக தரமான பொலிதீன் பைகளையும். அரிசி மற்றும் தானியவகை உறைகளையும் பிரின்ட் செய்து குறகிய காலத்தில் தங்களுக்கு வழங்கி முன்னிலையில் நின்று பெருமையடைகின்றோம்.

தங்கள் தேவை எது? POLYTHENE BAG ITEMS

• Textile Bags • Shopping Bags • Rice Bags
• Sugar Bags • Rice Flour Bags(Red & White)
• Dhall Bags • Salt Bags • Tea Bags • Chille Power Bags
• Curry Bags • Turmeric Powder Bags • Papadam Bags

எங்கள் நிறுவனத்தின் கீழ் வாடிக்கையாளர்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய ஏனைய பொருட்கள்

• Poly Sack Bag
• Leno Sack Bag
• Lunch Box Plain & Printed
• PVC Food Tray
• Yoghurt Cup Plain & Printed
• Drinking Cups
• Curry Bowl'
• Paper Plates
• Paper Serviettes
• Thread Corn No. 20
• Egg Tray

Piccaso Ads

RAMS TRADING
No. 35, Lower Ground, Peoples Park Complex,
Pettah, Colombo 11.
Tel : 011-2335532 Hotline : 0777-724334

நாகம்ஸ் சுன்னாகம்

டொல்பி ஒலி அமைப்புடன்
விஜய், த்ரிஷா, பிரகாஷ்ராஜ்
(ரீலீஸ்) நடித்த
தினசரி: 11.00, 3.00, 7.00
வெள்ளி, சனி, ஞாயிறு: 11.00, 3.00, 7.00,10.00
(35399)(12)

ராஜா யாழ்ப்பாணம்
3 ஆவது வாரம் (சில நாள்கள் மட்டும்)
சூர்யா, ஈஷா, மாதவன், மீரா, சித்தார்த், த்ரிஷா நடித்த

காட்சி நேரம்:
10.30, 2.30, 6.30 (பு.நே)
(C/34517)(22)

நிறைதிசனாஸ் சங்கானை

அர்ஜுன், ரம்பா, ஆனந்தராஜ்
அடிமைச் சங்கிலி நடித்த
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி . சனி. ஞாயிறு இரவு 8.45 இற்கு
INTREPID
(C-34430)(12)

Jayoda ஜயோதா ජයෝද

உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7212632 முதல் 7223477 வரை
சீட்டிழுப்பு இல. 40 திகதி 10-06-2004

வெற்றி எண்கள் 9 0 9 1 4 5 சுப்பர் எண் 24

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,02,70,700/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | 01 | 1,02,70,700/- | 1,02,70,700/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | - | 10,00,000/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 10 | 50,000/- | 5,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 96 | 5,000/- | 4,80,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 965 | 500/- | 4,82,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 9,650 | 50/- | 4,82,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 95,622 | 10/- | 9,56,220/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 9 | 5,000/- | 45,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 96 | 1,000/- | 96,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 966 | 100/- | 96,600/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 9,562 | 20/- | 1,91,240/- |
| மொத்தம் | 1,16,977 | | 1,36,00,760/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 1,36,00,760/-

இந்த திங்கட்கிழமைக்கான சுப்பர் ஜக்பொட்
ரூ. 1,00,00,000/-

தொடர் இல. 6248255 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2004 ஜுன 14 ஆம் திகதி திங்கட்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ஜயோதா சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் வீட்டுப் பாவனைப் பொருட்களை வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

7213403-1-25
7214152-8-42
7220017-4-74
7218012-7-70
7215270-6-80

## கண்ணீர் அஞ்சலி

யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி இசை ஆசிரியை

**செல்வி குணநாயகி மார்க்கண்டு**

அவர்களின் தந்தை காலமானதையிட்டு அவரது குடும்பத்தினருக்கு இசை ஆசிரியர் கழகம் தமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றது.

- செயலாளர்
இசை ஆசிரியர் கழகம் யாழ். வலயம்.

(33033)(40-12-18-36)

# மரண அறிவித்தல்கள்

## தில்லையர் குலவீரசிங்கம்

(ஓய்வுபெற்ற பிரதம லிகிதர், கணக்கு இலாகா, Cricket Uncle)



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், சுன்னாகம் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற தில்லையர் நாகம்மா (சட்டத்தரணி) தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரன் குலவீரசிங்கம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கமலாதேவியின் அன்புக் கணவரும் ஆனந்தியின் (Londan) பாசமிகு தந்தையும் சிறிஞானயோகனின்(Londan) அன்பு மாமனாரும் விதுசனின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*பெரிய மதவடி லேன்,*
*சுன்னாகம் தெற்கு,சுன்னாகம்.*
(33034(36-12-18-36)
தகவல்: கமலாதேவி (மனைவி).

## திருமதி செல்வமணி சதாசிவம் (பாப்பா)



மாவிட்டபுரத்தைச் சேர்ந்தவரும் தற்போது இந்தியாவில் வசிதுதுவந்தவருமான திருமதி செல்வமணி சதாசிவம (பாப்பா) அவர்கள் நேற்று (12.05.2004) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர் பொன்னம்பலம் சதாசிவத்தின் அன்பு மனைவியும் அமரர்களான அப்பாக்குட்டி மூத்தப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இலச்சுமிப்பிள்ளை, மாணிக்கம் கனகம்மா, செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவகுமார்(G.S - பன்னாலை), விஜயகுமார், திருமதி பவானி, சேனாதிராசா ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்வமணி, சுசீலா, மாவை சேனாதிராசா (நா.உ.) ஆகியோரின் மாமியாரும் திருமாவளவன், கமலமோகன், அமுதினி, மயூரன், கலைஅமுதன், ஆராஅமுதன், தாரகா, தினேஷ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இந்தியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

திருமதி பவானி சேனாதிராசா, *22, இராமகிருஷ்ண நகர், திருச்சி - 20, T.P: 00914312464684*
ச.சிவகுமார்(G.S) .பேக்கரி லேன், சண்டிலிப்பாய் தெற்கு, சண்டிலிப்பாய்.
தகவல்: குடும்பத்தினர்.
(33031)(40-12-18-36)

## திருமதி ஜீவா இரத்தினேஸ்வரன் (அரியாலை மத்தி)



அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி ஜீவா இரத்தினேஸ்வரன் 09.06.2004 புதன்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் இரத்தினேஸ்வரனின் (புனர்வாழ்வுப் பகுதி) அன்பு மனைவியும் காலஞ்சென்ற சோமசேகரம் மற்றும் சரஸ்வதி ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், றோகினியம்மா ஆகியோரின் பாசமிகு மருமகளும் ஷஜிந்தன், கஜானன் (பரியோவான் கல்லூரி), கம்சாயினி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), ஜனகன் (பார்வதி வித்தியாசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவலோகநாதன், சேகரன், சிவநாதன், மகேஸ்வரன், குகதாசன், காலஞ்சென்ற யோகேந்திரன் வாமதேவா, கஜேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்செனறவர்களான தேவராசா, வாமதேவா மற்றும் கமலாதேவி, கணேசராசா, மேகலாதேவி, சிறீதேவா, கலாதேவி, மகேஸ்வரன், சித்திரா, றூபி, சுபாசினி, கருணாவதி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (14.06.2004) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*31, நடுத்தெரு ஒழுங்கை,*
*அரியாலை.*
(33028)(40-12-18-36)
தகவல்: குடும்பத்தினர்.

## கந்தையா கனகலிங்கம்

(ஓய்வுபெற்ற தபாலதிபர் - கோப்பாய்)



உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா - கனகலிங்கம் நேற்று (12.06.2004) சனிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா சிவபுரம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும் சிவகுமார் (சிவம் - லண்டன்), சிவரூபி (றூபா - கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பத்மகாந்தன் (கனடா), சாந்தி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான பஞ்சலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர், ஊரெழு கணேசா வித்தியாசாலை), சோதிலிங்கம் (ஓய்வுபெற்ற அதிபர் உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை) மற்றும் ஈஸ்வரியின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும். இநத அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*1 ஆம் ஒழுங்கை,*
*உரும்பிராய் தெற்கு,*
*உரும்பிராய்.* (33035) (38-12-18-36)
தகவல்: செல்லையா ஈஸ்வரி (சகோதரி).

## வேலுப்பிள்ளை கனகலிங்கம்



கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் 3 ஆம் யுனிற் யோகபுரம், மல்லாவியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கனகலிங்கம் 11.06.2004 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் கமலாம்பிகையின் அன்புக் கணவரும் குலேந்திரன் (சுவிஸ்), பாலசுப்பிரமணியம் (சுவிஸ்), வனிதா (சுவிஸ்), அமரர் புவனேஸ்வரன், ரசேஸ்வரன் (லண்டன்), ரவீந்திரன் (இந்தியா), சிவகௌரி (இந்தியா) ஆகியோரின அன்புத் தந்தையும் சுபாஜினி, வக்சலா, சிவநாதன் ஆகியோரின் மாமனாரும் ஜெசிக்கா, ஜெனந், குருஷன், றெஸ்மி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இந்தியாவில் நடைபெறும். அத்துடன் அனிஞ்சியன்குளம், மல்லாவியில் உள்ள V.யோகலிங்கம் என்பவரது இல்லத்தில் அனுதாப நிகழ்வு இன்று 13.06.2004 நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அனிஞ்சியன்குளம்,*
*மல்லாவி.*
(33036)(40-12-18-36)
தகவல்: உறவினர்கள்.

## கால அட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தன்னாட்சி அதிகாரசபை குறித்தே முதலில் பேசவேண்டும் என்ற விடயத்தை - ஏற்க மறுத்து வருகிறது.

இதன்காரணமாக சமாதான முயற்சிகளை மீண்டும் ஆரம்பிப்பதில் இரு தரப்புக்களுக்கு இடையேயும் நெருங்க முடியாத இடைவெளி நிலவுகின்றது.

புலிகள் கேட்பது போன்று முதலில இடைக்கால நிர்வாகம் பற்றிப் பேசும் அதேவேளை இறுதித் தீர்வு பற்றியும் சமகாலத்தில் பேசலாம் என்பது இலங்கை அரசுத் தரப்பின் பிந்திய நிலைப்பாடாக உள்ளது.

எது எவ்வாறாயினும் அமைதி நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிப்பதாயின் அதற்கு முன்பாகத் தெளிவான ஒரு கால அட்டவணையையும் நிகழ்ச்சி நிரலையும் வடிவமைத்துக்கொள்ள வேண்டும் என்பதில் அனுசரணையாளரான நோர்வேத் தரப்பு மிகவும் உறுதியாக இருப்பதாக ஒஸ்லோ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

★ பேச்சுக்களை எங்கே, எப்போது நடத்துவது -

★ என்னென்ன விடயங்களை எந்த ஒழுங்கில் பேசி முடிப்பது -

★ அந்த விடயங்களில் எட்டப்படும் இணக்கப்பாடுகளை எப்போது நடைமுறைப்படுத்துவது -

ஆகிய மூன்று விடயங்களையும் தெளிவாக வரையறை செய்துகொள்ளக் கூடியதான கால அட்டவணையுடன் இணைந்த நிகழ்ச்சி நிரலின் அடிப்படையிலேயே பேச்சுக்களைத் தொடங்குவது என்பதில் நோர்வே உறுதியாக உள்ளது.

இத்தகைய நிகழ்ச்சி நிரல் ஒன்றைத் தயாரிப்பதற்கு முன் இரு தரப்புக்களிடையேயும் அதற்கான இணக்கப்பாட்டைக் காணவேண்டி இருக்கும் என்றும் -

அதற்கான முயற்சிகளில் நோர்வே அனுசரணையாளர்கள் தொடர்ந்து ஈடுபடுவார்கள் எனவும் விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

கால அட்டவணையுடன் கூடிய நிகழ்ச்சி நிரலுடனேயே பேச்சுக்கள் தொடங்கப்படவேண்டும் என்பதை விடுதலைப் புலிகள் தரப்பு ஏற்கனவே ஏற்றுக்கொண்டுள்ளது. எனவே அவர்களது தரப்பிலிருந்து இணக்கத்தைப் பெறுவதில் சிரமம் இருக்காது என்று நோர்வேத் தரப்பு கருதுகிறது. - இவ்வாறு அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-3)

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திக செயலாளராக இவர் பணியாற்றி வருகிறார். அதற்கு முன்னர் வெளிவிவகார அமைச்சில் பேச்சாளராகப் பணியாற்றிய இவர் இலங்கையிலும் சிறிது காலம் தூதரகத்தில் கடமையாற்றினார்.

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதியின் லண்டன் விஜயம் தொடர்பாக உத்தியோக பூர்வ அறிக்கை ஒன்றை ஜனாதிபதி செயலகம் நேற்று விடுத்தது. (ஐ-13)

## புனர்வாழ்வு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த மாவட்டச்-செயலகங்கள் நடவடிக்கை எடுத்திருந்தன. திட்டங்களும தயாரித்து முடிக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் -

புனர்வாழ்வுப் பணிகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதிமூலம் மேற்கொள்ளவிருந்த திட்டங்களை நிறுத்துமாறு திடீரென அறிவிக்கப்பட்டுள்ளது.

எழுத்துமூல அறிவிப்பாக இல்லாமல், தொலைபேசி மூலமே இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டிருப்பதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

அரசுக்கு ஏற்பட்டிருக்கும் நிதி நெருக்கடியே இத்திட்டங்கள் நிறுத்தப்பட்டமைக்கான காரணமாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.(ஐ-3)

## ஏ-9 விபத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போர், விபத்து நடந்த விதம் எனபன சம்பந்தமான படங்கள் இக்கண்காட்சியில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

ஏ-9 பாதையில் பயணிக்கும் சகல வாகனங்களினதும் சாரதிகள் இக்கண்காட்சியைப் பார்வையிட்டுச் செல்வதற்கு ஏற்பாடு செய்யப்படவுள்ளது.

விபத்துக்களால் ஏற்படும் பாதிப்பைச் சாரதிகளுக்கு உணர்த்தி அதன்மூலம் விபத்துக்களைத் தடுக்கலாம் என நம்புகிறோம் என்று வைத்தியர் சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (ஐ-3)

காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், 12/3, கந்தபுராண வீதி, கந்தர்மடத்தில் 2 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு யாழ். - 222 6574, கொழும்பு - 0112447010.

# புலிகளோடு பேசும் அதேசமய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களிப்பை இந்த நாட்டு மக்கள் வழங்க முடியும்.

நாட்டில் உள்ள அரசியல், மத, சமூகத் தலைவர்களை உள்ளடக்கிய இந்தக் கவுன்ஸில் நாட்டில் எவ்வாறு சமாதானம், ஜனநாயகம், அபிவிருத்தி ஆகியவற்றைக் கொண்டுவர முடியும் என்று மக்களின் கருத்துக்களைக் கேட்டறியும்.

இந்தக் கவுன்ஸிலில் -

(அ) சமாதானத்தைக் கொண்டு வருவதற்கான அரசின் முயற்சிகளை விளக்கும் -

(ஆ) சமாதானப் பேச்சுக்களின் முன்னேற்றத்தை நாட்டுக்கு தெளிவுபடுத்தும் -

(இ) சம்பந்தப்பட்ட தரப்புகளின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளும்-

(ஈ) பல்வேறு இனங்களிடையில் நல்லிணக்கத்தையும், புரிந்துணர்வையும் ஏற்படுத்திக்கொள்ளும் -

பிணக்குக்கு முடிவு காணும் ஒரு நடவடிக்கையாக ஐ.ம.சு. கூட்டமைப்பு, யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவரும விரிவான பேச்சுக்களில் தமிழீழ விடுதலைப் புலிகளை ஈடுபடுத்துவதற்கும் -

வடக்கு - கிழக்கை அபிவிருத்தி செய்யவும் -

சிறுபான்மையினரின் மனத்தாங்கல் குறித்து கவனிக்கவும் -

தமிழ், சிங்கள, முஸ்லிம் இனங்களின் நியாயமான அபிலாஷைகளை நிறைவுசெய்யும் வகையில் பலமான - தீவிரமான - முயற்சிகளை எடுத்துள்ளது. கடந்த ஏப்பிரலில் புதிய அரசு அமைக்கப்பட்டகையோடே சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை எடுக்குமாறு நோர்வே அனுசரணையாளர்கள் என்னால் கோரப்பட்டனர். அவர்கள் இந்த நோக்கத்துககாக அரசுடனும் விடுதலைப் புலிகளுடனும் தொடர்புகளை ஏற்படுத்தினர்.

இந்தத் தொடர்புகள் மூலம் இரு தரப்புகளுமே யுத்த நிறுத்தத்தை பேணுவதிலும் அரசியல் போக்கில் பேச்சுகளை மீள ஆரம்பிப்பதிலும் பற்றுதியாக இருப்பது தெளிவாகியது. வடக்கு - கிழக்குப் பிணக்குத் தொடர்பாக இரு தரப்புக்குமே பல விடயங்களில பொருத்தப்பாடான ஈடுபாடு இருப்பதையும் எங்களால் அவதானிக்க முடிநதது.

அடுத்த சுற்றுச் சமாதானப் பேச்சு எது பற்றியதாக அமையவேண்டும் என்பது குறித்து இரு தரப்புகளுமே ஆராய்ந்து வருகின்றன.

இடைக்கால அதிகாரசபை பற்றியதாக மட்டுமே பேச்சுக்கள் அமைய வேண்டும் எனப் புலிகள் எதிர்பார்க்கிறார்கள். ஆனால், அரசோ, இடைக்கால அதிகாரக் கட்டமைப்புக்கு இணங்கி அதை அவசரமாக அமைப்பதற்கு முன்னுரிமை தரும் அதேசமயம் பிணக்குக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கான பேச்சுக்களிலும் ஈடுபடவேண்டிய தேவை இருப்பதை வெளிப்படுத்தியுள்ளது.

சமாதானப் பேச்சுக்கான நிகழ்ச்சி நிரலில் இடம்பெற்றிருக்கும் விடயங்களைத் தீர்மானிக்கும் செயற்பாட்டில கடந்த பல வாரங்களாக நாம் ஈடுபட்டுள்ளோம்.

நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பதில் ஏற்பட்டுள்ள இந்தத் தாமதமே, வெவ்வேறான அரசியல் நோக்குகளிடையே ஓர் இணக்கத்தை ஏற்படுத்தும் ஜனநாயகத தேவைப்பாட்டைக் கொண்டிருக்கும் இந்தச் சமாதான முயற்சிகளின் சிக்கல் தன்மையைப் பிரதிபலிக்கின்றது. அத்தோடு, அது நாங்கள் பேச்சுக்களைத் தீவிரமாகக் கவனத்தில் கொண்டுள்ளோம் என்பதையும் அதற்காக ஆழ்ந்து யோசித்து தயாரிப்புக்களை செய்கின்றோம் என்பதையும் சுட்டுகின்றது.

மேலும், ஒரு வருடத்துக்கும் அதிகமான இடைவெளிக்குப் பின்னர் நாம் அரசியல் பேச்சுக்களை ஆரம்பிக்கின்றோம் என்பதையும் நினைவு கொள்ள வேண்டும்.

எப்படி இதைத் தொடர்வது என்பதில் இரு தரப்புகளுமே இதுவரை உடன்பாட்டுக்கு வராத அதேசமயம், அரசு அடுத்த சுற்றுப் பேச்சுக்கான உள்ளடக்க விடயத்தை நியமப் படியும முன்னெச்சரிக்கையுடனும் அணுகும்.

பிணக்குக்கு நிரந்தர அரசியல் தீர்வுகாணும் நீண்டகால முக்கியத்துவத்தின் அடிப்படையிலும் வடக்கு - கிழக்கின் அவசர அபிவிருத்தி தொடர்பான குறுகியகால தேவையின் அடிப்படையிலும் பிரச்சினைக்கு செயற்றிறன் உள்ள ஓர் இணக்கத்தை நாம தேடுகிறோம்.

பல்வேறு அரசியல் கட்சிகளுடன் நாட்டின் பிணக்குக்கு மிகவும் பொருத்தமான அரசியல் தீர்வு எது என்பது குறித்து கலந்துரையாடுவதில் நாம் பல வருடங்களை செலவிட்டுள்ளோம. கடந்தகாலங்களில் இந்தக் கலந்துரையாடல்களில் புலிகள் பங்குபற்றவில்லை. நிரந்தத் தீர்வுக்கு உருக்கொடுப்பதற்காக விடுதலைப் புலிகளுடன் அரசியல் பேச்சுக்களை நடத்துவதில் நாம் உறுதியாக உள்ளோம்.

அத்தகைய ஓர் அரசியல் தீர்வு மூலம் மட்டுமே இந்த நாட்டில் நீதியான, நிரந்தரமான அமைதியை உறுதிப்படுத்த முடியும் என்பதை நாங்கள் அறிவோம்.

அதேசமயம் பொறுப்புள்ள அரசு என்ற வகையில் நாம் -

வடக்கு - கிழக்கில் செயற்றிறன் மிக்க அபிவிருத்தி வேலைகளை முன்னெடுக்க வேண்டிய அவசர தேவையை நாம் தீவிரமாக கவனத்தில் கொள்கிறோம். அத்தோடு இந்தத் தேவைகளைக் கவனிப்பதற்கான இடைக்கால அரசியல் ஏற்பாடுகளுக்கு நாட்டின் இறைமை, ஆள்புல ஒருமைப்பாடு ஆகியவற்றுக்கு உட்பட்டு உருக்கொடுப்பது குறித்து புலிகளுடன் சேர்ந்து ஆராய்வதற்கும் விரும்புகிறோம்.

கடந்த இரு மாதங்களாக சமாதான முயற்சிகளில் ஈடுபடும் சமாதானச் செயலகம் போன்றவற்றை திறனுள்ளதாக நாம் மீளமைத்துள்ளோம் - என்று ஜனாதிபதி தெரிவித்தார். (ஐ-உ)

## தற்போதைய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுள்ளார். சிறிலங்கா அரசாங்கத்தின் இவ்வாறானதொரு நிலைப்பாட்டையடுத்தே, ஐரோப்பாவுக்கான தனது உத்தியோகபூர்வ விஜயத்தை இரத்துச் செய்ததாகக் கூறியுள்ள அரசியற்றுறைப் பொறுப்பாளர், ஜனாதிபதி சந்திரிகாவே, தற்போதைய நிலைமைகளுக்கான முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்

திடமான ஓர் அரசுடனேயே சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்வதில் தமிழீழ விடுதலைப் புலிகள் மிக ஆவலுடன் இருக்கின்றனர் எனவும் தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார். (ஐ-3-13)

## ஈராக் அமைச்சர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்துகொண்டிருந்த கார் மீது இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தியிருக்கின்றனர்.

வயிற்றில் குண்டு பாய்ந்த நிலையில் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட அமைச்சர் சிறிது நேரத்தில் அங்கு மரணமானார்.

ஈராக்கில் புதிய நிர்வாகத்தை உருவாக்க எடுக்கப்படும் ஏற்பாடுகளுக்கு இந்தச் சம்பவம் பலமான அடி என்று கருதப்படுகிறது. (ஐ)

IIS

கணனிக் கற்கை நெறிகள்
பிரிவு 3 ஆரம்பம்
19-06-2004

மேற்படி திகதியில் புதிய டிப்ளோமா கணனிக்கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்பட உள்ளதால் ஆர்வமுள்ள மாணவர்களிடமிருந்து IIS நிறுவனம் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. மாணவர்கள்அலுவகத்துடன் தொடர்பு கொண்டு உங்கள் பதிவினை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். A/L 2004 பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களிற்கான பிரத்தியேக பிரிவு இது என்பது குறிப்பிடத்தக்கது.

கணனிக்கல்விக்குத் தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதனூடாக கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகிறீர்கள்

இயக்குநர்
IIS, இல 100 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

தேவை

ரைப்செற்றிங்
(Type Setting)
தெரிந்தவர்கள்
நேரில் வரவும்.
SKY COMPUTERS (PVT) LTD.
89, KANDY ROAD,
CHUNDIKULI,
JAFFNA,
(NEAR KACHCHERI)
(சீ-35549) (38)

DAY CLASS
PHYSICS
திரு.ம.ஸ்பெல்மன் (யாழ். முன்னணி ஆசிரியர்) A/L 05 (2004 இல் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு)
ஆரம்பம்: திங்கள் 14.06.2004 7-8.30 a.m.
(திங்கள், புதன், வெள்ளி)
இடம்: நாவலர் ரியூசன் சென்ரர்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (32968)

CATWAS. COM
Computer Academy
A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான
IIஆம் பிரிவு 25.06.2004 அன்று ஆரம்பம்.

உலக நாடுகளில் பிரபல்யம்பெற்று முன்னிலையில் இருக்கும் UK Microsoft நிறுவனத்தின் ஆதரவைப் பெற்றதும் அமலமரித் தியாகிகள் அருட்தந்தையர்களின் நெறிப்படுத்தலில் யாழ். மாவட்டத்தில் கணனிப் பயிற்சிகளை பிரபல்யமாக நடத்திவருகின்றமை யாவரும் அறிந்ததே.

Diploma Course:
1. Ms Office 1,750/=
2. DTP 2,000/=
3. Hardware 1,500/=
4. Web Page 3,000/=
5. Video Mixing 2,500/=

★ Ms Office பாடநெறியில் இணைவோருக்கு மட்டும் அனுமதிக் கட்டணம் இலவசம்.
★ Ms Office பாடநெறியில் இணைவோருக்கு மட்டும் Internet and E-mail இலவசமாகக் கற்பிக்கப்படும்.
★ அரச ஊழியருக்கான மாலைநேர வகுப்புகள் ஆரம்பம்.

Certificate Course:
Word XP, Excel XP, Access XP, Power point XP, PageMaker 7, CorelDRAW 11, PhotoShop 7, Cool 3D, Visual Basic, Premier, Studio 8,

விண்ணப்பங்கள் யாவும் 23.06.2004 இற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது தபால்மூலமோ ஏற்றுக்கொள்ளப்படும்.

26, Somasundram Avenue,
Chundikuli, Jaffna.
T.P.:021-222 3805.
(சீ-35521)(12-18-33)

IIS இன் அதிரடி கட்டணச் சலுகை.
Diploma in Information Technology
காலம் : 3 மாதம்
2,500/= மட்டுமே
பதிவுக்கட்டணம் அறவிடப்பட மாட்டாது
இப்பிரிவுக்கு மட்டுமே இக் கட்டணச்சலுகை வழங்கப்படும்.
ஆரம்பம் :
19 / 06 / 2004 பகல் 10.00 மணி



அதிக மாணவர்களின் ஆசை கணனிக் கல்வியைக் கற்க IIS இல் இணைய வேண்டும் என்பதே.

பெற்றோர்கள், கல்வியாளர்களின் வேண்டுகோளிற்கிணங்க, எமது நிர்வாகம் பெற்றோர்களின் பொருளாதார வசதிகளைக்கருத்தில் கொண்டு மிகக்குறைந்த கட்டணத்தில் மேற்படி கற்கை நெறிகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

மிகச்சிறந்த ஓர் அடிப்படைக் கணனிக் கல்வியைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் ஆராய்ந்து சிறந்த முறையில் வடிவமைக்கப்பட்ட பயிற்சி நெறியாகும்.

A/L பரீட்சைக்குத்தோற்றிய மாணவர்களே !

பரீட்சை முடிவுகள் வெளியாகவுள்ள உங்கள் பொன்னான காலத்தைப் பயனுள்ளதாக்குவதற்கு IIS உடன் இணைந்து கொள்ளுங்கள்
19.06.2004 இல் ஆரம்பிக்கப்பட இருக்கும் எமது 3 ஆம் பிரிவுடன் மாணவர்கள் இணைந்து கொள்ளமுடியும்.

இம்மாதம் ஆரம்பிக்கப்பட்ட, ஆரம்பிக்கப்பட இருக்கின்ற டிப்ளோமா கற்கை நெறிகளிற்கு பதிவு செய்துள்ள, பதிவு செய்யவுள்ள மாணவர்களுக்கு மேற்படி கற்கை நெறியினை எவ்வித கட்டணமுமின்றி முற்றிலும் இலவசமாக கற்க முடியும்.

கணனிக் கல்விக்குத் தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதனூடாகக் கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்.

INSTITUTE OF INFORMATICS STUDIES ( IIS )
" An Edexcel Approved Training Centre "
Head Office:
IIS, 100, Clock Tower Road, Jaffna
T.P No: 021-222 2831 Email: iis@sltnet.lk
Branch:
IIS, Nelliyady, Karaveddy
T.P No: 021-226 3335

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.06.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# சூரியகாந்தி

உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

13-06-2004




# செங்கோல் கடத்தப்பட்டது; சம்பிரதாயங்கள் சாம்பராகின

நாடாளுமன்றம் 08.06.2004 அன்று கூட்டியபொழுது என்ன நடைபெற்றது என்பதை சுடரொளி, உதயன் ஆகிய தினசரிகள் அப்பட்டமாக விவரித்திருந்தன. மறுநாள் 09.06.2004 அன்று வெளியான அவ்விரு சகோதர தினசரிகளின் பிரதான தலைப்புச் செய்தி பின்வருமாறு அமைந்திருந்தன.

*"நாடாளுமன்றில் நேற்று காடைத்தனம்! ஆளுங்கட்சி எம்.பிக்கள் அட்டகாசம்!! பிக்குவைத் தூக்கிப் பிடித்து பந்தாடிய கேவலம்: செங்கோலைத் தூக்கிக்கொண்டு ஓடினார் பிரதி அமைச்சர்"*

அநாகரிகங்கள். சட்டத்துக்குப் புறம்பான அட்டகாசங்கள் என்பனவற்றுக்கு எதிராக சட்டமியற்றும் சட்டவாக்கச் சபையான நாடாளுமன்றத்துக்குள் இடம்பெற்ற மிகத் துர்க்குறிகளும் அபசகுணங்களும் நிறைந்த எட்டாம் திகதிய நிகழ்வுகள். தேர்தலில் வாக்களித்து சம்பந்தப்பட்ட பிரதிநிதிகளை தெரிவு செய்து அனுப்பியவர்களை 'பாவம் மக்கள்' என்ற பாணியில் பார்த்து ஆராய முடியாது என்பதை உணர்த்தின!


ஓர் அரசின் தலைவர்கள் யார், யார் என்பதைப் பார்த்தால் அந்த அரசின் மக்களை இலகுவில் புரிந்துகொள்ளலாம். அதுவும் ஜனநாயக ரீதியிலான தேர்தல் முறைகளைக் கொண்ட நாட்டில், மக்களே தமது பிரதிநிதிகளை, தலைவர்களை வாக்குகள் மூலம் தீர்மானிக்கிறார்கள் என்ற வகையில் இந்தப் புரிதல் சாத்தியப்பாடுகள் நிறைந்ததே! தலைமைகளும் சமூகமும் ஒன்றையொன்று வழிகாட்டி. உருவானவை; உருவாகுபவை.

நல்லியல்புகளோ அன்றேல் பிறழ்ந்த இயல்புகளோ இயற்கை விஞ்ஞானங்களின் அடிப்படையிலும் சமூகவிஞ்ஞானங்களின் அடிப்படையிலும் நீண்ட தொடர் இயங்கு முறைகளுக்கூடாக தோன்றி வீரியம் பெற்றுவிடுபவையே. இலங்கைச் சமூகங்களின் குறுக்காகவும், நெடுக்காகவும் அகலமாகவும் ஆழமாகவும் 'கால், கை எறிந்து நீட்டி நிமிர்ந்து கோரப்பற்களுடன் போர்வெறியின் நரபலிக்கனவுகளுடன் அயர்ந்து தூங்குவதாக நடிக்கும் வன்முறைபூதம்.' எங்கெல்லாம் இயமக் கூத்தாடும், எங்கெல்லாம் எவரைப் பந்தாடும் என்றெல்லாம் சொல்லிக் களைத்தல் வீணானது.

நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை என்ற எண்கணிதச் சரிப்படுத்தலை பேணுவதற்கும் அதன் மூலம் அரசியல் அதிகாரம் வீழ்ச்சியுறுவதைத் தடுப்பதற்கும் வன்கோலம் கொண்ட ஆளும்கட்சி உறுப்பினர்கள். ஹெல உறுமயவின் புதிய எம்.பியாகச் சத்தியப்பிரமாணம் செய்யவந்த வணக்கத்துக்குரிய பிக்கு ஒருவரை பலவந்தமாகத் தூக்கி அங்குமிங்குமாக இழுத்தடித்துப் பந்தாடினர். பிக்குவுக்கு கடுமையான உடல் உபாதை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உடலின் உள் அங்கங்கள் மோசமாக நோகடிக்கப்பட்டது போல வலியுடன் வேதனையுற்றவராகத் தோற்றியதாகவும் தொலைக்காட்சிகள் ஒளிபரப்பின. அப்பிக்குவைத் தவிர மற்றொரு பிக்குவும் நொந்து வேதனைப் பட்டவராக அதே மருத்துவமனையில் உள்ளார். அவர்களுக்கு எவ்வாறான உட்காயங்கள் ஏற்பட்டுள்ளன என்பதை மருத்துவ அறிக்கைகளே உறுதிப்படுத்தமுடியும்.

அரசியல், அதிகாரம் என்பனவற்றை துறந்து, அவற்றுக்கு அப்பால் நின்று மக்கள் சமூகங்களுக்கு சீரிய செல்நெறியொன்றை போதிக்கப் புறப்பட்ட கௌதம புத்தரின் நெறியான பௌத்த மதத்தின் காவலர்களான பிக்குகள் இலங்கை நாடாளுமன்றத்தின் அரசியல் சகதிக்குள் புதைந்து போனமையும் அதிகாரப் பின்னத்துக்குள் அரைநிர்வாணிகளாக, கால்நிர்வாணிகளாக காவி உரியப்படுவதும் சொல்லுகின்ற அரசியல் செய்தியில் பல பரிமாணங்கள் விரியலாம்.

தற்பொழுது அமுலில் இருக்கும் 1978 இல் அறிமுகப்படுத்தப்பட்ட அரசமைப்பின் அத்தியாயம் II உறுப்புரை 9 ஐ மட்டுமே கொண்டுள்ளது. பௌத்த மதம் என்ற தலைப்பின் கீழ் உள்ள அந்த அத்தியாயம் என்ன சொல்கிறது என்பதை அப்படியே வாசகர்கள் அறிந்து கொள்ளவேண்டும் என்பதற்காக இங்கே தரப்படுகிறது.



*அத்தியாயம் II*

*பௌத்த மதம்*

*9 " இலங்கைக் குடியரசில் பௌத்த மதத்துக்கு முதன்மைத்தானம் வழங்கப்படுதல் வேண்டும் என்பதோடு, அதற்கிணங்க, 10 ஆம், 14 ஆம் (1) (உ) ஆம் உறுப்புரைகளால் வழங்கப்பட்டுள்ள உரிமைகளை எல்லா மதங்களுக்கும் காப்புறுதி செய்யும் அதேவேளையில், பௌத்த சாசனத்தைப் பாதுகாத்தலும் பேணிவளர்த்தலும் அரசின் கடமையாக இருத்தலும் வேண்டும்."*



இந்த அத்தியாயம் சுருக்கமாக அமைந்தாலும் பாரதூரமானது. பௌத்தமதத்துக்கு முதன்மைத்தானம் கொடுத்தல் பௌத்த சாசனத்தைப் பாதுகாத்தலும் பேணிவளர்த்தலும் அரசின் கடமைகளாக இந்த அத்தியாயம் கூறுகிறது.

இந்த யாப்பைப் பிறப்பித்த அதே நாட்டின் அதே நாடாளுமன்றம் கடந்த எட்டாம் திகதி பௌத்த பிக்குகளுக்கு என்ன செய்துள்ளது?

சிறுபான்மையின மக்களின் உரிமைப்பிரச்சினைகளுக்கு இலங்கை பௌத்த சிங்கள நாடுதான் என்று சட்டரீதியாகவும் நடைமுறையிலுள்ள பிரயோக அரசியல் ஊடாகவும் வரலாற்றுக் காலம் முழுவதும் விடையளித்து வந்த சிங்கள பௌத்த காவலர்களும், சிங்கள தீவிரவாத அரசியல் சாரதிகளும் நாடாளுமன்றம் என்ற அதிகார மையமான சபாமண்டபத்துள் மோதுண்டார்கள் என்ற செய்தியை பல்வேறு தரப்பாரும் பல்வேறு பரிமாணங்களில் பார்ப்பார்கள்.

சமூகவியல் நோக்கில், அரசியல் வரலாற்றுப் போக்கில் வரலாற்றுத் தாயின் தண்டிப்பு எப்படி அரங்கேறியிருக்கிறது என்பதை வாசகர்கள் இலகுவில் விளங்கிக்கொள்வார்கள்.

பௌத்த பிக்குகள் தாக்கப்பட்டதும், சபாமண்டபத்திலிருந்து செங்கோல் காணாமற்போனமையும் வெட்கக்கேடான இருவிடயங்களாகும்.

"நாடாளுமன்ற சம்பிரதாயங்களும் மரபுகளும்" என்னும் தலைப்பிலும், 'செங்கோல்' என்னும் தலைப்பிலும் ஏறத்தாழ 34 வருடங்களுக்கு முன்பு தினகரனில் வெளியான இரு கட்டுரைகளை இங்கு மறுபிரசுரம் செய்கிறோம்.

இக்கட்டுரைகளை இலங்கை நாடாளுமன்றத்தில் ஹன்சார்ட் அறிக்கையாளராகக் கடமையாற்றிய கோண்டாவிலைச் சேர்ந்த மூத்த பத்திரிகையாளரும் எழுத்தாளருமான செல்லப்பா நடராசா தொடராக எழுதியிருந்தார். அந்தக் கட்டுரைகளிலிருந்து...

## சம்பிரதாயங்களும் மரபுகளும்

நாடாளுமன்றத்தைப் பொறுத்த வரையில் அநேக சம்பிரதாயங்கள் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டன. அத்துடன், மரபு வழியாகப் பின்பற்றப்படுகின்ற சம்பிரதாயங்களும் உள. சபையில் பின்பற்றப்படுகின்ற சாதாரண சம்பிரதாயங்களைப் பொறுத்த அளவில் எந்த உறுப்பினரும் தன் எண்ணப்போக்கில் தான் விரும்பிய படி உடையணிந்து கொண்டு சபைக் கூட்டங்களில் பங்குபற்ற முடியாது. அதற்கு சில விதிமுறைகள் உண்டு. தேசிய உடையில் அல்லது மேலைத்தேச உடையில் உறுப்பினர் சபையில் பிரசன்னமாகலாம். ஆனால், அவ்வுடைகள் பூரணமானவையாக இருத்தல் வேண்டும். மேலைத்தேச உடையிலே சபைக்கு வருபவர்கள் கழுத்துப்பட்டி கட்டி, 'கோட்' போட்டு பூரணமான மேலைத்தேச உடையிலேயே பிரசன்னமாகவேண்டும். உடை சம்பந்தமாக ஆறாவது நாடாளுமன்றத்திலே எழுப்பப்பட்ட ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை இங்கு குறிப்பிடவேண்டும்.

1969 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட விவாதத்தின்போது அன்றைய உடுவில் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் வி.தர்மலிங்கம் அவர்கள் உரையாற்றிக்கொண்டிருக்கிறார். தேசிய உடையிலேயே சபைக்கு வருபவரான வி.தர்மலிங்கம் அவர்கள் தமது மேலங்கியின் கைப்பாகங்களை இரு கைகளாலும் மாறிமாறி மேலே உருவிவிட்டவாறு தமது உரையிலே ஆழ்ந்தபடி காணப்படுகிறார். அவரை அறியாமலேயே அவரது மேலங்கியின் கைப்பாகங்கள் இரண்டும் முழங்கைகளுக்கு மேலே சென்றுவிட்டன. இந்தச் சந்தர்ப்பத்தில் உள்நாட்டு அமைச்சரின் நாடாளுமன்றச் செயலாளராக விளங்கிய சீ.ஆர்.பெலிகம்மன 'கௌரவ உடுவில் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் சபையின் மரபுப்படி உடையணிந்து இருக்கிறாரில்லை' என்று ஓர் ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்பினார். அன்றைய இராஜாங்க அமைச்சரான மாண்புமிகு ஜே.ஆர்.ஜயவர்த்தனா அவர்கள் அந்த ஒழுங்குப் பிரச்சினையை ஆதரித்ததுடன் குறிப்பிட்ட உறுப்பினர் மேலங்கியின் கைப்பாகங்களை முழங்கைக்கு மேல் சுருட்டி விட்டுள்ளார் என்றும் அது சபையை அவமரியாதை செய்வதாகும் என்றும் எடுத்துரைத்தார். இதற்கிடையில், யாரோ உறுப்பினர் ஒருவர் 'அவர் சண்டைக்குத் தயாராகிக் கொண்டிருக்கிறார்' என்று நகைச்சுவையாகக் குறிப்பிடவே தமது தவறைத் தர்மலிங்கம் திருத்திக்கொண்டார். சபையின் சம்பிரதாயங்களில் சில உறுப்பினர்கள் எவ்வளவு கண்ணுங்கருத்துமாக இருக்கிறார்கள் என்பதற்கு இந்த நிகழ்ச்சி சிறியதோர் உதாரணமாகும். அன்றைய பிரதமர் மாண்புமிகு டட்லி சேனநாயக்கா, இராஜாங்க அமைச்சர் மாண்புமிகு ஜே.ஆர்.ஜயவர்த்தனா, கலாநிதி எம்.எம்.பெரேரா, ஜீ.ஜீ.பொன்னம்பலம் கியு.ஸி., உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு டபிள்யு. தகநாயக்கா, நிதி அமைச்சர் மாண்புமிகு யு.பி.வன்னிநாயக்க போன்ற சிரேஷ்ட


- தனஞ்சயன் -



(IV ஆம் பக்கம் பார்க்க)

இலங்கைக்கான நோர்வேத்தூதுவர் ஹன்ஸ் பிறட்ஸ்கர் அவர்களுடைய கொழும்பு வசிப்பிடத்தில், இலங்கை சமாதான நடவடிக்கைகளுக்கான நோர்வே விசேட பிரதிநிதி எரிக்சொல்கெய்ம் அவர்கள், இலங்கைக்கு நிதி உதவி வழங்கும் பதின்மூன்று நாடுகளினதும் சர்வதேச ரீதியிலான ஆறு நிதி நிறுவனங்களினதும் பிரதிநிதிகளைச் சந்தித்து இலங்கை சமாதானப் பேச்சுக்களின் பிந்தியபோக்கு எப்படி உள்ளது என்பதை தெளிவாக விவரித்திருந்தார். இலங்கைக்கு உதவும் நாடுகள் மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்களின் நான்குமுனை - கூட்டுத்தலைமையை (Co-chairs) கொண்டிருக்கும் அமெரிக்கா, நோர்வே, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளும் அங்கு முக்கியபாத்திரம் வகித்தனர்.

# அமெரிக்க டொலர்களுக்காக




# ஏங்கும் பிச்சாபாத்திரம்!

இலங்கைக்கான நிதி வழங்கல் தொடர்பான மீளாய்வு மதிப்பீட்டு மாநாடு இம்மாதம் முதலாம் திகதி பெல்ஜியத்தின் பிரஸல்ஸ் நகரில் நடைபெறுவதற்கு சில நாள்கள் முன்னதாக, மே மாதம் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அப்பிரதிநிதிகளுக்கும் எரிக்சொல்ஹெய்ம் அவர்களுக்குமிடையில் அந்த விளக்கப் பரிமாற்றம் நிகழ்ந்தது.

**விரக்தி - கவலை - கவனம்!**

நோர்வேயின் வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்த அமைச்சர், பிரதி அமைச்சர், நோர்வேயின் இலங்கைக்கான தூதுவர் மற்றும் சில உதவியாளர்கள் ஆகியோருடன் கூட்டிணைந்து எரிக்சொல்ஹெய்ம் அவர்கள் கடைசியாக மேற்கொண்டிருந்த சமாதான தரகு முயற்சிகள் கடும் தோல்வியைத் தழுவிவிட்டன என்றும் அத்தோல்விக்குள் சிக்கியிருக்கும் சமாதான பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதில் இன்றுவரை சாதகமான சூழல் தோன்றவில்லை என்பதும் வாசகர்கள் அறிந்ததே. இதனால் விரக்தி அடைந்துள்ள சொல்ஹெய்ம் மேற்படி இராஜதந்திரிகளுக்கு மிகவும் கவலையுடனும் கவனத்துடனும் விடயங்களை விவரித்திருத்தார் என்று தெரியவருகிறது.

**விரிசல்களால் எச்சரிக்கைத் தொனி!**

இடைக்கால நிர்வாகசபை யோசனைகள் தொடர்பாக ஜனாதிபதி குமாரதுங்கவும் தமிழீழ விடுதலைப் புலிகளும் கொண்டுள்ள நிலைப்பாடுகளுக்கிடையேயான விரிசல் பற்றிய எச்சரிக்கை கலந்த [illegible] சொல்ஹெய்ம் அந்தப் பிரதிநிதிகளுக்கு வெளிப்படுத்தினார்.

விடுதலைப் புலிகள் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனைகளைப் பற்றிப் பேசி அதை நிறுவிக்கொண்ட பின்பே இனப்பிரச்சினைக்கான அடிப்படை விடயங்களைப்பற்றி பேச்சுக்கள் நடத்த விரும்புகின்றனர் என்பதும் ஆனால், ஜனாதிபதி இடைக்கால ஏற்பாடுகள் பற்றியும் அதே காலத்தில் சமாந்தரமான முறையில் நிரந்தரத்தீர்வு காண்பதற்கு அடிப்படை விடயங்களைப் பற்றியும் பேசுவதற்கு விரும்புகிறார் என்பதையும் எரிக்சொல்ஹெய்ம் விளக்கினார்.

**சமாதான ஈடுபாட்டில் பலமான சந்தேகங்கள்!**

உண்மையாகவே புதிய அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் 'இயைபாக்க - இசைவாக்கங்களோ' நல்லெண்ணமோ தட்டுப்பாடாகவே உள்ளது என்றும் அவர் இராஜதந்திரிகளுக்கு விளக்கியிருந்தார். அரசில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி., வெளிவிவகார அமைச்சரான லக்ஷ்மன் கதிர்காமர் போன்ற வெவ்வேறு தரப்பாரின் வெவ்வேறு அணுகுமுறைகள், வெவ்வேறு கருத்துவெளிப்பாடுகள் என்பன காரணமாக, சமாதான நடைமுறைகளில் புதிய அரசு கொண்டிருக்கும் ஈடுபாட்டின் விசுவாசத்தன்மை தொடர்பாகவும் விடுதலைப் புலிகள் பலமான சந்தேகங்களைக் கொண்டுள்ளனர் எனவும் அவர் சர்வதேசப் பிரதிநிதிகளுக்கு சுட்டிக்காட்டியிருந்தார். பேச்சைப் பற்றிய பேச்சுக்களையும் ஆராய்தலையும் மேற்கொள்வதற்காக இரண்டு தரப்பினரையும் பேச்சுமேசைக்குப் கொண்டு வந்து சேர்த்தாலாவது ஏதாவது முன்னேற்றகரமான அறிகுறிகள் தோன்றலாம் என்பதையும் அவர் விளங்கியிருந்தார் என்று இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

**சந்தேகங்களுடன் கேள்விகள்!**

அவர் விவரமாக விளக்கிய விடயங்களையெல்லாம் இலங்கைக்கு உதவும் நாடுகளின் இராஜதந்திரிகளும் சர்வதேச நிதி நிறுவனங்களின் பிரதிநிதிகளும் பொறுமையாகவிருந்து கேட்டனர். இலங்கையில் பிரச்சனைக்குரிய இருதரப்பினருடனும் தொடர்ந்து தொடர்பாடுவதன் மூலம் படிப்பினைகளையும் அனுபவங்களையும் பெற்றுள்ள எரிக்சொல்ஹெய்ம் அவர்கள் இராஜதந்திரிகள் எழுப்பிய சந்தேகங்கள் அனைத்துக்கும் திருப்திகரமாக விளக்கமளித்தார்.

இல்ங்கையில் நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தலையிட்டு இராஜதந்திரிகளின் கவனத்தை ஈர்ந்த எரிக் சொல்ஹெய்ம் அவர்கள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இக்காலகட்டத்தில் தனது பொருளாதார கொள்கைகளைக்கூட வரையறையாக - முழுமையாக வெளியிடுவதில் கடும் சிரமங்களை அனுபவிக்கிறார் எனவும் ஜூன் மத்தியில் அவர் இக்கொள்கைகளை வெளியிடுவதில் நம்பிக்கையீனங்கள் நிலவுகிறது எனவும் சுட்டிக்காட்டினார்.

**சிக்கலைப்பற்றிய 'தெளிவான படம்'!**

எரிக்சொல்ஹெய்ம் அவர்களுடனான சந்திப்பின் மூலம் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான விரிசல் பற்றிய தெளிவான படம் ஒன்றை நிதிவழங்கல் தொடர்பான மீளாய்வு - மதிப்பீட்டு மாநாட்டுக்கு முன்பாக நான்கு முனை - கூட்டுத் தலைமை வகிக்கும் அமெரிக்கா, நோர்வே, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான் ஆகிய நாடுகள் பெற்றுக்கொண்டன. முன்னைய ரணில் விக்கிரமசிங்க அரசு ஆட்சியில் இருந்தவேளையில் இலங்கையில் சமாதானப்பேச்சுக்கள் முன்னேற்றமடைந்ததால் 4.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதியுதவியை பல்வேறுவகையான அடிப்படையில் வழங்குவதற்கு சர்வதேசம் உறுதியளித்திருந்தது. பேச்சுக்கள் தேங்கி விட்டதாலும் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஏற்பட்டுள்ள விரிசலின் தன்மையினாலும் இந்த நிதியுதவி பற்றிய ஐயப்பாடுகள் எழத்தொடங்கியுள்ளன.

**அடியும் முடியும் தெரிந்த இராஜதந்திரிகள்**

ஜூன் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை பெல்ஜியத்தின் பிரஸ்ஸல்ஸில் நடைபெற்ற இலங்கைக்கு 'உதவி வழங்கும் நாடுகளின் மீளாய்வு மதிப்பீட்டு மாநாட்டில் நான்கு முறை கூட்டுத்தலைமை வகிக்கும் அமெரிக்கா, நோர்வே, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான் [illegible] சார்பில் இலங்கை விவகாரத்தில் கடந்த சில ஆண்டுகளாக தீவிர ஈடுபாடு காட்டும் இராஜதந்திரிகளே தலைமைப் பிரதிநிதிகளாகப் பங்குபற்றினர். அமெரிக்காவின் சார்பில் அமெரிக்கப் பிரதிவெளி விவகார அமைச்சர் ரிச்சட் ஆர்மிரேஜ் அவர்களும் நோர்வேயின் சார்பில் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர்ஹெல்கிசன் அவர்களும் ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பில் அதன் ஆணையாளர் கிறிஸ் பற்றன் அவர்களும் ஜப்பானின் சார்பில் விஷேடதூதர் யசூஷி ஆகாஷி அவர்களும் அம்மாநாட்டுக்கான நான்கு முனை கூட்டுத்தலைமையை வகித்திருந்தனர். றிச்சட் ஆர்மிரேஜ் இலங்கைக்கு சில விஜயங்களை மேற்கொண்டு கல்விமான்கள், பொருளாதார நிபுணர்கள், அரசியல் தலைவர்கள் ஆகியோருடன் கலந்துரையாடல்களை நடத்தியவர். அவர் யாழ்ப்பாணத்திற்கும் வந்து போயிருந்தார் என்பது வாசகர்களுக்கு ஞாபகம் இருந்திருக்கும். அவரைக்காட்டிலும் பிரச்சினையுடன் நேரடியாகச் சம்பந்தப்பட்ட அரசுத் தரப்பினரையும் விடுதலைப் புலிகளையும் போதிய தடவைகள் சந்தித்து ஆழமாகவும் விரிவாகவும் பேச்சுக்களில் ஈடுபட்டு அனுபவம் வாய்ந்தவர்களாக விடர் ஹெல்கிசன், கிறிஸ்பற்றன், யசூஷி ஆகாஷி ஆகியோர் காணப்படுகின்றனர். இவர்கள் இலங்கை இனப்பிரச்சினையின் அடி முடியை இதுவரை கற்றுத் தேறியிருப்பர்.

**ஆவண வாசகம் பிறந்த கதை!**

அந்த மாநாட்டில் ஐரோப்பிய ஒன்றியத்தால் தயாரிக்கப்பட்ட

**- டன்ஸ்ரன் லூயிஸ் -**

ஆவண வாசகம் ஏற்கனவே சமுகமளித்த அனைத்துப்பிரதிநிதிகளுக்கும் வழங்கப்பட்டிருந்தன. அந்த ஆவண வாசகத்தின் அடிப்படையில் இலங்கை அரசு, விடுதலைப் புலிகள் ஆகிய இரு தரப்பாரினதும் சமாதானப்பங்களிப்பு இலங்கைக்கான நிதியுதவிகள் வழங்கும் விடயத்தில் எவ்வாறு சம்பந்தப்பட்டுள்ளது என்பதை வலியுறுத்தும் இறுதி ஆவணமாக வெளியீடு ஒன்றை உயர் நிபுணத்துவமும் ஆளுமையும் கொண்ட தூதுக்குழு நிறைவு செய்திருந்தது. அந்த் இறுதி ஆவண வாசகம் ஐரோப்பிய ஒன்றியத்தின் முதல் [illegible] அதிகளவில் வேறுபட்டிருக்கவில்லை.

(IV ஆம் பக்கம் பார்க்க)

# 'இருப்பதல்ல முக்கியம்; இயங்குவது'



## கவிஞர் குறிஞ்சி இளந்தென்றல்

நல்லை ஆதீனத்தில் நடைபெற்ற இலக்கியப் பேரவைப் பரிசளிப்பு விழாவில் பார்வையாளராகக் கலந்துகொண்டிருந்தார் கவிஞர் குறிஞ்சி இளந் தென்றல். அவரை 'உதயன' சார்பில் நேர்கண்டோம்.

**கேள்வி:** உங்களைப் பற்றிச் சுருக்கமாகக் கூறுங்கள்?

**பதில்:** நான் சந்திரசேகரம் புஷ்பராஜ். வயது 27. கண்டி தவளந்தன்னையைச் சேர்ந்தவன். வர்த்தக ஓவியராகப் பணிபுரிகிறேன். ஆரம்பத்தில் தனியார் விளம்பர நிலையங்களிலும், தற்போது சொந்த நிறுவனம் ஒன்றை அமைத்தும் பணிபுரிகின்றேன்.

**கேள்வி:** எவ்வகையான ஓவியங்களை ஆக்குகிறீர்கள்?

**பதில்:** Digital Painting மூலம் வர்த்தக ஓவியங்களை வரைகின்றேன். அதைவிட மல்லிகை, ஞானம் போன்ற சஞ்சிகைகளுக்கும் 'புஷ்பா' என்ற பெயரில் ஓவியங்களை வரைகின்றேன்.

**கேள்வி:** எவ்வாறு கவிஞரானீர்கள்?

**பதில்:** கொழும்பில் நான் படித்துக்கொண்டிருந்தபோது மலையகத்தின் மூத்த எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் எனது வீட்டிற்கு அருகில் குடியிருந்தார். அவருடனான தொடர்பு அவர் பக்கபலமாக இருந்து வழிகாட்டியமை காரணமாக கவிதையுலகிற்குள் நுழைந்தேன். சூடாமணி பத்திரிகையில் முதற்கவிதை வெளிவந்தது. தினக்குரல், சுடரொளி, வீரகேசரி, ஞானம், மல்லிகை ஆகியவற்றில் எனது கவிதைகள் வெளிவந்துள்ளன. தற்போது அப்புறமென்ன என்ற கவிதைத் தொகுதி மல்லிகைப்பந்தல் வெளியீடாக வந்துள்ளது.

**கேள்வி:** 'குறிஞ்சி இளந்தென்றல' என்ற பெயரை ஏன் புனைப்பெயராக்கினீர்கள்.

**பதில்:** கவிஞர் குறிஞ்சித் தென்னவன், குறிஞ்சி மணவாளன் ஆகியோரும் எனக்கு வழிகாட்டியாக இருந்தனர். அவர்களில் குறிஞ்சித் தென்னவனே எனக்கு 'இளந்தென்றல்' என்ற புனை பெயரைச் சூட்டினார். நான் குறிஞ்சியையும் என்னுடன் சேர்த்துக் கொண்டேன்.

**கேள்வி:** உங்களது ஆதர் படைப்பாளி யார்?

**பதில்:** பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம். அவருடைய சீர்திருத்தப் பாடல்கள் என்னைக் கவர்ந்தவை. அண்மையில் நான் தமிழ்நாடு சென்றபோது, பட்டுக்கோட்டைக்கும் சென்றேன். பட்டுக்கோட்டையாரின் அண்ணன், மனைவி கௌரவம்பாள் ஆகியோரைச் சந்தித்து வந்தேன். இலங்கையிலிருந்து முதன் முதலாகத் தங்களைத் தேடி வந்தமையையிட்டு அவர்கள் பெருமைப்பட்டார்கள். எனக்கும் அது பெருமையாக இருக்கிறது.

**நேர்காணல்:- இயல்வாணன்**

**கேள்வி:** உங்களது இலட்சியம் என்ன?

**பதில்:** 'இருப்பதல்ல முக்கியம்; இயங்குவது' என்பதே எனது குறிக்கோள். பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்துக்கு வருடாந்தம் விழா எடுப்பது, அந்நிகழ்வில் ஒரு படைப்பாளியினது நூலினை வெளியிடுவது என்பன எனது எதிர்காலத் திட்டங்கள்.

**கேள்வி:** யாழ்ப்பாணத்துக்கு வந்தமை தொடர்பான தங்களின் உணர்வலை என்ன?

**பதில்:** நான் நேசிக்கும் எழுத்தாளர்கள் பலர் யாழ்ப்பாணத்தில் உள்ளனர். அவர்களைப் பார்த்து, இங்குள்ள சூழலைப் பார்த்தது மகிழ்வைத் தருகிறது. எங்கு பார்த்தாலும் 'தமிழ' என்பதே இங்கு நிறைந்துள்ளது. ❑

# முஸ்லிம்களின் படைப்புகளை யாழ்ப்பாணத்தவர்கள் மதிப்பதில்லை என்பது தவறு என உணர்கிறேன்

*உருவகக் கதை, சிறுகதை, கவிதை, நாடகம், நாட்டார் இலக்கியம் எனப் பலதுறைகளிலும் படைப்பாக்க மற்றும் ஆய்வு முயற்சிகளில் ஈடுபட்டுவரும் சின்னத்தம்பி முத்துமீரான் அம்பாறை மாவட்டம் நிந்தவூரைச் சேர்ந்தவர். சட்டத்தரணியாகப் பணியாற்றும் அவர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உயர்மட்ட உறுப்பினருமாவார். இலங்கை இலக்கியப் பேரவையின் பரிசளிப்பு விழாவில் இவரது 'மானிடம் சாகவில்லை' நாடகநூலுக்குப் பரிசு கிடைத்தது. அதைப் பெறுவதற்கு யாழ்ப்பாணம் வந்த அவரை 'உதயன்' சார்பாகச் சந்தித்தோம்.*

**கேள்வி:** எவ்வாறானதொரு குடும்பப் பின்னணியிலிருந்து தோற்றம்பெற்றீர்கள்?

**பதில்:** மிகவும் ஏழ்மையான குடும்பம். தந்தையார் விவசாயக் கூலித்தொழிலாளி. நானும் நான்கு சகோதரர்களும் சகோதரியொருவரும் கொண்ட குடும்பம் எங்களுடையது. நான் 5 ஆம் வகுப்புப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தேன். ஆனால், மேலே நல்ல பாடசாலைகளில் படிக்க எனக்கு வசதியில்லை. அதனால் இராமகிருஷ்ண மிஷன் சிவானந்தா வித்தியாலயத்தில்தான் எனக்கு இடம்கிடைத்தது. அங்கு சென்று சேர்வதற்கான படிவம் நிரப்பும்போது தந்தையாருக்கு கையெழுத்துவைக்கத் தெரியாது. அவர் கைநாட்டு வைக்கும்போது எனக்கே வெட்கமாக இருந்தது. நான் க.பொ.த. உயர்தரம் முதலாம் ஆண்டில் படித்துக்கொண்டிருந்தபோது 45 ரூபா பாடசாலைக் கட்டணம் கட்ட முடியாமல் இருந்தது. அந்த நேரம் People teacher வேலைக்கு விண்ணப்பித்து சிறிது காலம் பணியாற்றினேன். அட்டாளைச்சேனை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் படித்துக்கொண்டிருந்தபோது, நான் க.பொ.த. உயர்தரத்தில் கலைத்துறையில் பரீட்சை எடுத்தேன்.

**கேள்வி:** அதற்கு முன்னர்?

**பதில்:** விஞ்ஞானத்துறையில்தான் முதலில் படித்தேன். ஆசிரியப் பயிற்சியை முடித்ததும் எனக்கு பொலனறுவவுக்கு மாற்றம் கிடைத்தது. எனது பெயர் சின்னத்தம்பி முத்துமீரான். நான் ஒரு முஸ்லிம். எனது பெயரை சின்னத்தம்பி முத்துவீரன் என மாற்றி எழுதி, சைவப் பாடசாலை ஒன்றுக்கு நியமனம் செய்தார்கள்.

**கேள்வி:** தந்தையார் ஒரு தமிழரா?

**பதில்:** இல்லை அவரது பெயர் சிக்கந்தர் லெப்பை சின்னத்தம்பி. பெயர் தமிழ் பெயரன்றி அவர் முஸ்லிம்தான். ஆனால், எமது கிராமம் தமிழர்களும் முஸ்லிம்களும் ஒற்றுமையாக வாழ்ந்த கிராமம். இரு இனத்தவர்களிடையேயும் தாய்மையான அன்பு இருந்தது. அதன் காரணமாக இப்பெயரை வைத்திருக்கலாம்.

**கேள்வி:** எவ்வாறு சட்டத்தரணியானீர்கள்?

**பதில்:** ஆசிரியராக இருந்தபோது, ஆங்கிலம் கற்பிக்கச் சந்தர்ப்பம் கிடைத்தது. அதே வேளை கொழும்புக்கு இடமாற்றமும் கிடைத்தது. எனவே, கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்டமானிக் கற்கையை மேற்கொண்டேன். பின்னர் ஆசிரியத் தொழிலிலிருந்து நீங்கினேன். கடந்த 20 வருடங்களுக்கு மேலாக குற்றவியல் வழக்குகளில் வாதாடும் சட்டத்தரணியாக உள்ளேன்.

**கேள்வி:** இலக்கியத்துறைக்குள் உங்களது பிரவேசம் பற்றிக் கூறுங்கள்?

**பதில்:** 1957 ஆம் ஆண்டு 'காதலும் கருணையும்' என்ற நாடகத்தை இலங்கை வானொலிக்கு எழுதினேன். அப்போது 16 வயது. 'சானா' என்ற சண்முகநாதன் அந்நாடகத்தைத் தயாரித்து அளித்தார். அது ஒரு பாரசீகக் கதை. அந்த நாடகத்துடன் இலக்கிய உலகுக்குள் நுழைந்தேன். இதுவரை 206 நாடகங்கள் இலங்கை வானொலியின் தமிழ்ச்சேவை, முஸ்லிம் சேவை ஆகியவற்றில் வந்துள்ளன. சிறுகதைகள், கவிதைகள் பலவும் எழுதியுள்ளேன்.



**கேள்வி:** ஈழத்தில் உருவகக் கதை எழுதிய சிலருள் நீங்களும் ஒருவர் என்று அறிகிறோம். அதுபற்றிச் சொல்லுங்கள்.

**பதில்:** ஆமாம் சு.வே., செம்பியன் செல்வன், எஸ்.பொ. போன்றோருடன் என்னையும் சேர்த்துச் சொல்வார்கள். காண்டேகருடைய படைப்புக்கள் தான் உருவகக் கதைகளை எழுதத் தூண்டின. முத்துமீரான் உருவகக்கதைகள், இயற்கை ஆகிய இரு உருவகக் கதை நூல்கள் வெளிவந்துள்ளன.

## இலக்கியம், அரசியல்: மனம் திறக்கிறார் முத்துமீரான்...

**கேள்வி:** நாட்டார் இலக்கிய ஆய்விலும் ஈடுபட்டு வருகிறீர்கள். கிழக்கிலங்கையில் கூத்துக்கள் முக்கியத்துவம் வகிக்கின்றன. இஸ்லாமிய நாட்டார் இலக்கியத்தில் கூத்துக்கள் எவ்வாறு உள்ளன?

**பதில்:** மட்டக்களப்பில் சைவ, கிறிஸ்தவ சமயத்தவர்களே கூத்தில் ஈடுபடுகிறார்கள். பெரும்பாலும் மட்டக்களப்பிலுள்ள மண்டூர், கொக்கட்டிச்சோலை, வெல்லாவெளி, ஆரப்பத்தை, கிரான், நாவற்குடா, மொறக்கொட்டாஞ்சேனை எனச் சில இடங்களில் கோவிற் திருவிழாக் காலங்களில் இத்தகைய கூத்துக்கள் இடம்பெறுகின்றன. இஸ்லாமியர்களிடத்து கூத்துப் பாரம்பரியம் இல்லை.

**கேள்வி:** ஏன் அவ்வாறு இல்லாதுள்ளது?

**பதில்:** இஸ்லாமியர்கள் வேசம்போட்டு நடிப்பதையோ, ஆண்பெண்ணாக மாறி நடிப்பதையோ பெண்கள் ஆண்களுடன் பகிரங்கமாக நடிப்பதையோ இஸ்லாம் திட்டவட்டமாகத் தடை செய்கின்றது. இந்நிலையில், நாடகமொன்றை எழுதுபவர்களும் கூட நுணுக்கமாக மதச்சட்டத்தை அனுசரித்து எழுதவேண்டிய. கடப்பாடு உண்டு.

**கேள்வி:** வேறு எவ்வாறான நாட்டார் கலைவடிவங்கள் உள்ளன?

**பதில்:** 'கவி' என்று சொல்லக்கூடிய நாலடிப்பாடல்கள் உள்ளன. அதைவிட 'ஊஞ்சற் பாட்டு' என்றொரு பாடல் உள்ளது. நோன்புப் பெருநாள், ஹஜ்ஜுப் பெருநாள் காலங்களில் ஊரிலே தென்னை மரங்களை நாட்டி ஊஞ்சல் அமைத்து, இத்தகைய பாடல்களைப் பாடுவார்கள். 'வழிநடைச் சிந்து' என்றொரு பாடல் அமைப்பு உள்ளது. ஒரு இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்குப் பயணம் செய்யும்போது களைப்புத் தெரியாதிருக்கப் பாடுவது, இத்தகைய சிந்தாகும். ஊரின் வர்ணனை, இயற்கை வர்ணனை, கண்ட காட்சிகளின் வர்ணனை என்ற வகையில் இப்பாடல்கள் அமையும்.

**கேள்வி:** பாரம்பரியக் கூத்துக்களை மீள் புனரமைப்புச் செய்து வரும்பணியில் பேராசிரியர் மௌனகுரு ஈடுபட்டு வருகிறார். நாட்டார் இலக்கிய ஆய்வாளன் என்ற வகையில் அதை ஆதரிக்கிறீர்களா?

**பதில்:** கூத்துக்கலை தொடர்பாக நுணுக்கமான ஆய்வுகளை மௌனகுரு செய்துவருகிறார். கூத்துக்களை மீள்புனரமைப்பதை நான் ஆதரிக்கவில்லை. வாய்மொழி இலக்கியம் தனியான வடிவத்தையும், மொழியையும் உடையது. அதை நவீனப்படுத்துவது என்ற வகையில் கூத்து வடிவை உருவாக்குவது அதன் இயல்பைச் சிதைப்பதாகிவிடும்.

**கேள்வி:** படைப்புத்துறையில் நீங்கள் எழுதி நூல்களாக வெளிவந்தவை எவை?

**பதில்:** முத்துமீரான் சிறுகதைகள், மானிடம் உயிர்வாழ்கிறது ஆகிய சிறுகதைத் தொகுதிகள், முத்துமீரான் கவிதைகள், கருவாட்டுக் கஸ்ஸா ஆகிய கவிதை நூல்கள், மானிடம் சாகவில்லை நாடகநூல், முத்துமீரான் உருவகக் கதைகள், இயற்கை ஆகிய உருவகக் கதை நூல்கள், கிழக்கிலங்கை முஸ்லிம்களின் நாட்டார் கவியமுதம், கிழக்கிலங்கை முஸ்லிம்களின் நாட்டார் பாடல்கள், இலங்கைக் கிராமத்து முஸ்லிம்களின் பழமொழிகள் ஆகிய தொகுப்பு, ஆய்வு நூல்கள் என்பவற்றை வெளியிட்டு உள்ளேன்.

**நேர்காணல்:– இயல்வாணன்**

**கேள்வி:** உங்கள் நூலுக்குப் பரிசு கிடைத்தமை தொடர்பாக என்ன கூறுகிறீர்கள்?

**பதில்:** சாகித்திய மண்டலத்திலிருந்து உங்கள் படைப்புப் பரிசுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது என்று சிலர் சொன்னார்கள். ஆனால், எனது படைப்புத் தேர்ந்தெடுக்கப்படாமல் வேறொருவருக்கு சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்தது. ஆனால், இந்தப் பரிசு அவருக்குக் கிடைக்காமல் எனக்குக் கிடைத்திருப்பது மகிழ்ச்சியைத் தந்தது. உண்மை என்றும் அழியப்போவதில்லை என்பதையே அது உணர்த்துகிறது.

முஸ்லிம்களின் படைப்புக்களை யாழ்ப்பாணத் தமிழர்கள் மதிப்பதில்லை என்ற கருத்து முஸ்லிம் எழுத்தாளர்கள் பலரிடமும் இருந்தது. ஆனால், அண்மைக் காலத்தில் இங்குவந்த போது தான் இந்த எண்ணம் பிழையானது என்பது புரிந்தது. சில வருடங்களுக்கு முன்னர் நான் இங்கு வந்த போது நோன்பில் இருந்தேன். அவ்வேளை, பேராசிரியர் தில்லைநாதன் குடும்பத்தினர் எனக்குப் பள்ளிவாசலில் தொழவும், நோன்பைச் சரியாக மேற்கொள்ளவும் உதவினர். இது யாழ்ப்பாணத்தவர்களின் விருந்தோம்பும் பண்பை எனக்கு நன்கு உணர்த்தியது.

**கேள்வி:** கிழக்கிலங்கையின் இலக்கிய ஆளுமைகள் என்று யார் யாரைக் கருதுகிறீர்கள்?

**பதில்:** ஈழத்து இலக்கியம் என்பது கைலாசபதியின் காலத்தில் இருந்து குழுக்களின் இலக்கியமாகப் போய்விட்டது. கைலாசபதி ஒரு சித்தாந்த அடிப்படையில் இருந்த காரணத்தால், அச்சித்தாந்தப் போக்குடைய சிலரது கதைகளையும், கவிதைகளையும் சிறந்தவையாகச் சுட்டிக்காட்டினார். அவருக்குப் பின்னால் வந்தவர்கள் கா.சிவத்தம்பியோ, கே.எஸ்.சிவகுமாரனோ, சில்லையூர் செல்வராசனோ இவர்கள் எல்லோருமே அதையே பின்பற்றிச் சொன்னார்கள். இன்று சர்வகலாசாலைகளிலும் கூட கணபதிப்பிள்ளை, செல்வநாயகம் காலத்திலிருந்து சொல்லப்பட்டவற்றையே பேராசிரியர்களும், கலாநிதிகளும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். புதிதாக ஒன்றையும் சொல்லப்போவதில்லை. இந்த நிலையில் இந்த நாட்டின் நல்ல இலக்கிய கர்த்தாக்களை யாரால் இனங்காண முடியும்? இன்னொருவர் சொன்னார் யார் சிறந்த படைப்பாளி என என்னால் சொல்ல முடியாது. காலம் சரியான பதிலைச் சொல்லும்.

**கேள்வி:** ஈழத்தமிழ் இலக்கியத்தில் முஸ்லிம், தமிழர்களுடைய படைப்புக்கள் எவ்வகையான அரசியற் பரிமாணமுடையவை?

**பதில்:** தமிழ் மொழியில் எழுதுகின்ற முஸ்லிம்களும் தமிழ் எழுத்தாளர்களே. ஒரு சிறுகதையிலோ, நாடகத்திலோ முஸ்லிம் பாத்திரத்தையோ, சூழலையோ பயன்படுத்துவதால் அதை முஸ்லிம் படைப்பாகக் கொள்ளமுடியாது. இது காலவரை சீதனப்பிரச்சினை, ஏழைகளைப் பணக்காரன் சுரண்டுவது போன்ற வர்க்கப் பிரச்சினை சார்ந்த படைப்புகள் தான் வெளிவந்தன. அண்மைக் காலத்தில் தமிழர் விடுதலைப் போராட்டத்தினால் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட சில பாதிப்புக்களை வைத்துப் படைப்புக்களைச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. நானும் அவ்வாறு எழுதியுள்ளேன். 'ஒரு கிராமம் அழுகிறது' என்றொரு சிறுகதை என்னுடையது. ஒரு இரவில் ஒரு கிராமம் அழிக்கப்பட்டதை வைத்து எழுதப்பட்டது. அக்கிராமத்தில் உள்ளவர்கள் அன்றாடம் கூலிவேலை செய்யும் தொழிலாளர்கள். அவர்களுக்கு ஏன்? எதற்காகத் தாங்கள் தாக்கப்பட்டோம் என்பது இன்றுவரை தெரியாது.

இவ்வாறான சம்பவங்கள், அது தொடர்பான அவலங்களை வெளிப்படுத்தும் படைப்புக்கள் சில வெளிவந்துள்ளன. இவை அரசியற் பரிமாணம் என்று சொல்லத்தக்கவையல்ல.★

**(முத்துமீரான் அரசியல் சம்பந்தமாகத் தெரிவித்த கருத்துகளை உதயனில் படியுங்கள்)**

---

# தாம்பாளத்துக்கு ஒரு கைப்பிடி போட்டால்....!

*இப்பொழுதெல்லாம் நாட்டிலே வாள்வெட்டுச் சம்பவங்கள் பற்றியும் வாள் கொண்டு நடைபெறும் அச்சுறுத்தல்கள் பற்றியும் செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அவைகளுக்குப் பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படவிருந்த வாள்களின் படங்களையும் கூட பத்திரிகைகளில் காண முடிகிறது.*

*'வாள்-படம்' என்றதும் எமக்கு அந்தக் காலத்து தமிழ் வாள் சண்டைப் படங்கள் நினைவுக்கு வரத் தவறுவதில்லை.*

*அக்கால கிராமியப் படங்கள் என்றால் அவைகளிலே சண்டைக் காட்சிகளாக சிலம்படி இடம் பெறுவதுண்டு. அவைகளிலே 'சடபட' வென்று கோலாட்டச் சப்தம் போன்ற ஓசை பிறக்கும். மற்றும்படி தமிழ்ப் படங்களுக்கே சிறப்புரிமையாகவுள்ள தீப்பிடித்து எரிகின்ற தீவைப்புச் சம்பவங்களுக்கும் குறைவிருக்காது.*


*இவைகளை விட புராண. அரச படங்களை எடுத்துக் கொண்டால் அவைகளிலே வாள் சண்டைகளுக்குத்தான் முக்கியத்துவம். 'மயிர்க் கூச்செறியும் வாள் சண்டைகள் நிறைந்த படம்' என்றெல்லாம் அவைகளுக்கு விளம்பரம் செய்வார்கள்.*

*'ஆயிரம் தலை வாங்கிய அபூர்வ சிந்தாமணி' என்றொரு படம். அதை நான் பார்க்கவுமில்லை. கதை இன்னதென்றும் தெரியாது. ஆனால். அந்த அபூர்வ சிந்தாமணி என்பவர் வாள் கொண்டுதான் அந்த ஆயிரம் தலைகளையும் வாங்கியிருப்பார் என்பது எனது ஊகம். (ஊகம் பிழையெனில் மன்னிப்பீராக!)*

*இடைக்கால எம்.ஜீ.ஆர்.. சிவாஜி படங்களிலும் வாள் சண்டைகளுக்குக் குறைவிருந்ததில்லை. மதுரைவீரன். நாடோடி மன்னன். கட்டப் பொம்மன் என்பனவெல்லாம் வாள் சண்டைகள் நிறைந்த படங்கள் தான். இவர்களின் வாள் வீசும் தோற்றத்திலமைந்த பிரமாண்டமான 'கட்அவுட்' களை திரையரங்க வாயில்களில் வைத்திருப்பார்கள். துப்பாக்கி துளைக்காத சட்டை என்பது போல வாள் துளைக்காத மார்புக் கவசங்களைக் கூட அவர்கள் அணிந்திருந்தார்கள்.*

**வாள் வீச்சும், வாய் வீச்சும்**

*என்ன இருந்தாலும் வாள் சண்டையில் வல்லவர் எம்.ஜீ. ஆர்தான். வசனம் பேசுவதில் சிவாஜி என்பதுபோல....... இதனை அக்கால ரசிகர் பாணியில் சொல்வதாயிருந்தால்..... 'வாள் வீச்சுக்கு எம்.ஜி. வாய் வீச்சுக்கு சிவாஜி.' இவர்களின் வாள் வீச்சுக்கு இறுதியில் பலியாகும் நடிகர்களாகத் திகழ்ந்தவர்கள் பி.எஸ்.வீரப்பா. என்.எம். நம்பியார். ஓ.ஏ.கே.தேவர் என்போர்கள். ஆனால் அதெல்லாம் உக்கிரமான சண்டையின் பின் தான் வாளை உறையில் இருந்து உருவி எடுக்கின்ற 'உர்ர்' என்ற சப்தம் தொடக்கம் 'டங்...டிங்....டொங்....' என்ற தாளலயம் போன்ற வாள் சண்டைச் சப்தங்களும் படத்தைப் பார்த்து விட்டு வந்தபின்னர் கூட எமது செவிகளில் ரீங்காரமிட்டவாறிருக்கும்.*




*வாளை எதிராளிமீது வீசுவதுடன் எதிராளியின் வாள் தம்மீது விழுவதைத் தடுப்பதற்கும் ஒரு கவசம் பாவனையில் இருந்தது. அது நடுவிலே கைப்பிடிபோட்ட தாம்பாளம் போன்ற அமைப்பிலானது. வாள் இதன்மீது பட்டுத் தெறிக்கும் ஓசை வேறு.... சும்மா சொல்லக் கூடாது. இப்படியான சிலவேகமான வாள் சண்டைகளின்போது நெருப்புப் பொறிகள் கூடப் பறந்ததுண்டு.....அந்தப் பொறிபட்டுத் தீ பரவுவதுமுண்டு... என்ன நான் தமிழ்ப் படங்களைப் பற்றித்தானே சொல்லிக்கொண்டு வருகிறேன்.*

*நிராயுதபாணியுடன் சண்டைக்குப் போவது போர் மரபாகாது. வாள் சண்டை தொடங்குவதும் அப்படித்தான். 'என் வாளுக்குப் பதில் சொல்லி விட்டு.....' என்று தான் சண்டைக்குத் தாபமிடப்படும். எதிராளியிடம் வாள் இல்லாவிட்டால் அவருக்கும். ஒரு வாள் வீசி எறியப்படும். இப்படித்தான் ஒரு படத்தில் நகைச்சுவை நடிகர் நாகேசுக்கும் ஒரு வாள் கொடுக்கப்படுகிறது. வாளைப் பெற்ற நாகேசுக்கு உடம்பெல்லாம் உதறல் எடுக்கிறது; கையிலுள்ள வாளும் தான். அப்பொழுது அவர் சொல்லுகிறார் 'எனக்குமட்டும் ஏன் நடுங்குகிற வாளைத் தந்திருக்கிறார்கள்'*

*இப்பொழுது இங்கு நடைபெறுகின்ற வாள் வீச்சுக்களிலே வாளும வாளும் உராய்கின்ற சத்தங்களோ அல்லது அவை கேடயம் - கவசங்களில் படுகின்ற ஓசைகளோ எழுவதற்கு வழியில்லை. அது ஒரு தரப்புத் தாக்குதல் என்பதால் 'தினத்தந்தி' நடையில் சொல்வதானால் 'சதக் சதக்' தான்!*

*ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே சான்றோனாக்குதல் தந்தைக்கு கடனே என்பது போல வேல் என்ன? வாள் வடித்துக் கொடுத்தல் கொல்லார்க்குக் கடனே என்றொரு பாடல் இருக்கிறதல்லவா? வாளுடன் யாரும் வந்தால் நிராயுதபாணிகளானவர்களுக்கு ஓடி ஒழிந்து கொள்வதைத் தவிர வேறு வழியில்லை . அந்தக் கடமை உணர்வு மிக்க கொல்லர் அப்படியானவர்களுக்கெல்லாம் 'கேடயம்' அமைத்துக் கொடுப்பதையும் தங்கள் கடமையாகக் கொண்டால் என்ன? அப்படி இல்லாவிட்டாலும் வீட்டுத் தாம்பாளங்களுக்கு நடுவிலே ஒரு கைப்பிடி பொருத்திக் கொடுத்தாலும் சரிதான்! இப்பொழுது செம்புத் தாம்பாளங்கள் மிகக் குறைவாகவே பாவனையில் உள்ளதால் எவர் சில்வர் ட்ரேகளுக்குப் பிடிபோடும் புதிய தொழிலை ஆரம்பிக்கலாம் என்று நண்பர் ஒருவர் காதில் முணுமுணுக்கிறார். உங்களுக்கு கேட்கிறதோ இல்லையோ........... நான் என்ன செய்ய.........!*

**சண் அங்கிள்**

# செங்கோல் கடத்தப்பட்டது; சம்பிரதாயங்கள்...

(I ஆம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்கள் சபையின் சம்பிரதாயங்களைப் பொறுத்தளவில் அதிக சிரத்தை காட்டியதை நான் பல சந்தர்ப்பங்களில் பார்த்திருக்கிறேன்.

## அறிவுரை

சபையில் உறுப்பினர் ஒருவர் இன்னோர் உறுப்பினரைப் பற்றிக் குறிப்பிடுகையில் அவரைப் பெயர் சொல்லி விளிப்பது மரபல்ல. இன்னொரு தொகுதியின் மாண்புமிகு உறுப்பினர் என்றே ஒருவரைப் பற்றிக் குறிப்பிடுவது சபையில் நீண்ட காலமாகப் பின்பற்றப்பட்டுவரும் மரபாகும். 1965 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஒரு நாள் ஆர்.ஜீ. சேனநாயக்கா அவர்கள் உரையாற்றுகையில், எஸ்.தொண்டமான் அவர்களை 'தொண்டமான் சகோதரயா' என்று குறிப்பிட்டபொழுது அவர் மாண்புமிகு சபாநாயகரின் அறிவுறுத்தலுக்கு இலக்கானார். சபையின் கௌரவ உறுப்பினர் ஒருவரை 'சகோதரயா' என விளித்தலாகாது என்பது அன்றையதினம் சபாநாயகர் வழங்கிய அறிவுரையாகும்.

உறுப்பினர்கள் எவரும் தம் உரைகளை முன்கூட்டியே எழுதி வாசிப்பது சபையின் ஒழுங்கு விதிகளுக்கு முரண்பட்டதாயினும் சில உறுப்பினர்கள் தமது உரைகளைச் சில வேளைகளில எழுதிப் படிப்பதுமுண்டு. அத்தகைய சந்தர்ப்பங்களில் ஒழுங்குப் பிரச்சினை கிளப்பப்பட்டால், சம்பந்தப்பட்ட உறுப்பினர் தனது உரையை எழுதிப் படிக்கவில்லை என்றும் தனது குறிப்புக்களைப் பார்த்தவாறு உரையை நிகழ்த்துவதாகவும் கூறித் தப்பித்துக்கொள்வதும் உண்டு.

## பண்ணிசைக்க முடியாது

சபையில் உரையாற்றுகையில் உறுப்பினர்கள் சமய சந்தர்ப்பத்துக்கேற்றவாறு பாடல்களைக் கையாள்வார்கள். ஆனால், பாடல்களை எவரும் ராக தாள ஆலாபனையுடன் இசைக்கமுடியாது. பொய்யன், கள்ளன், போக்கிரி, மோசக்காரன், இலஞ்சக்காரன் என்பன போன்ற வார்த்தைகளை எவரும் சபையில் உபயோகிக்கமுடியாது. இத்தகைய வார்த்தைகளை எவராவது உறுப்பினர் தப்பித்தவறிக் கடும் வாதப் பிரதிவாதங்களின் போது உபயோகித்தால் அவர் சபாநாயகரின் கண்டனங்களுக்கு ஆளாவதுடன் அத்தகைய வார்த்தைகளை மீளப்பெறவும் நேரிடும். மேலும் உறுப்பினர் ஒருவர் உரை நிகழ்த்துகையில் பிற உறுப்பினரின் புத்திசாலித்தனமான குறுக்கீடுகளையே சபாநாயகர் அனுமதிப்பது வழக்கம். வேண்டுமென்றே தொடர்ச்சியாக எந்த உறுப்பினராவது இன்னோர் உறுப்பினரது உரையில் அர்த்தமில்லாமல் குறுக்கிடுவதைச் சபாநாயகர் ஒருபோதும் அனுமதிக்கமாட்டார். சபாநாயகரைப்பார்த்தே உரைநிகழ்த்த எல்லா உறுப்பினர்களும் கடமைப்பட்டவர்கள் தவிர எந்த உறுப்பினரும் அமைச்சர்களின் சொந்த நடத்தை பற்றிப் பேசச் சபையில் அனுமதிக்கப்படுவதில்லை. ஆனால், அமைச்சர் ஒருவரின் அல்லது உறுப்பினர் ஒருவரின் சொந்த நடத்தை பற்றி சபையில் விவாதிப்பதானால் அதன் பொருட்டு தனியான பிரேரணை ஒன்று கொண்டுவரப்படல் வேண்டும். எந்த உறுப்பினரும் தனக்கென ஒதுக்கப்பட்ட ஆசனத்திலிருந்து மட்டுமே உரை நிகழ்த்த அனுமதிக்கப்படுவர். சபையில் விவாதிக்கப்படுகின்ற விடயங்களை ஒட்டியன்றி அவற்றுக்குத் தொடர்பில்லாதவை பற்றிப் பேச உறுப்பினர்களைச் சபாநாயகர் அனுமதிக்கமாட்டார்.

## கன்னிப் பேச்சுக்கள்

புதிய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் சபையில் தனது கன்னிப் பேச்சை நிகழ்த்துகையில் அவர் எந்தக் கட்சியைச் சார்ந்த உறுப்பினராக இருப்பினும் சரி கட்சிப் பாகுபாடின்றி எல்லா உறுப்பினர்களுமே கரகோஷம் செய்து அவரை உற்சாகப்படுத்தி அதன் மூலம் மறைமுகமாக அவரை வாழ்த்தி வரவேற்பதுண்டு. சபைக்குள் பிரவேசிக்கும் பொழுதும் பின்னர் சபையை விட்டு வெளியேறும் சந்தர்ப்பங்களிலும் உறுப்பினர்கள் சிரம் தாழ்த்திச் சபாநாயகருக்கு மரியாதை செலுத்துவது மரபு. உறுப்பினர் சபையினுள் பிரவேசிக்கவோ வெளியே போகவோ சபாநாயகரின் அனுமதியைப் பெறுவதற்குரிய சம்பிரதாயமாகவும் இது கொள்ளப்படும். சபையில் தம்மைப்பற்றிய ஏதாவது கூற்றுக்களை அமைச்சர்களோ உறுப்பினர்களோ மறுத்துரைத்தால் அத்தகைய மறுப்புரைகளை எவரும் எதிர்க்கமுடியாது. அத்தகைய மறுப்புரைகள் சபையில் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியவை.

சபையில் நிகழும் ஒவ்வொரு விவாதத்தின் போதும் எந்த உறுப்பினரும் ஒரேயொரு தடவை மாத்திரமே உரைநிகழ்த்த அனுமதிக்கப்படுவர். ஆனால், சபையானது குழுநிலையில் விடயங்களை பரிசீலனை செய்யும் பொழுது இந்த விதி நடைமுறையில் கடைப்பிடிக்கப்படுவதில்லை. குழுநிலை விவாதங்களின்போது மாண்புமிகு சபாநாயகர் அவர்களை "சபாநாயகர் அவர்களே" என்று விளித்துப் பேசுவதற்குப் பதிலாக உறுப்பினர்கள் அவரைத் "தலைவர் அவர்களே" என்று விளித்துப் பேசுவதும் சபையின் நடைமுறையாகும்:

சபையில் வாய்மூல வினாக்களுக்கான நேரத்தில் உறுப்பினர் ஒருவர் வினாக்களை ஒட்டிய உப, வினாக்கள் மூன்று மட்டுமே கேட்க அனுமதிக்கப்படுவர். வினாக்களை ஒட்டிய உரைகளை நிகழ்த்த இந்த வேளைகளில் எந்த உறுப்பினரும் அனுமதிக்கப்படுவதில்லை.

நீதிமன்றங்களின் முன்னுள்ள விசாரணைகளைப் பாதிக்கக் கூடிய முறையில் சபையில் உரை நிகழ்த்துவது என்றும் தவிர்க்கப்படுவதுண்டு. அதே நேரத்தில் சபையில் நிகழ்த்தப்படும் உரைகளை ஒட்டிச் சட்ட நடவடிக்கைகளை எவரும் மேற்கொள்ளமுடியாத அளவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலவித சிறப்புரிமைகளுக்கு உரித்தானவர்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## செங்கோல்

நாடாளுமன்றத்தின் ஒவ்வொரு கூட்டத்தின் போதும் நாடாளுமன்றத்தினுள் பவனி ஒன்று இடம்பெறுவதுண்டு. இதனைச் சிலரே அறிவர். பலர் அறியமாட்டார்கள். இந்தப் பவனியின் பிரதான கதாநாயகர் மாண்புமிகு சபாநாயகர் அவர்களேயாவார். சபையின் செயலதிகாரி, உதவிச் செயலதிகாரிகள், படைக்கலச் சேவிதர், உதவிப் படைக்கலச்சேவிதர், இரு சேவகர்கள் இந்தப் பவனியில் இடம் பெறும் மற்றும் பிரதானிகளாவர். கூட்டம் ஆரம்பமாவதற்கு அறிகுறியாக முதலில் ஐந்து நிமிடங்களுக்கு நிறைவெண் மணியோசை நாடாளுமன்றக் கட்டடம் முழுவதும் எழுப்பப்படும். இம் மணியோசையின் முடிவிலே தான் சபாநாயகரது பவனி அவரது அலுவலகத்திலிருந்து சபா மண்டபத்தை நோக்கி ஆரம்பமாகின்றது. படைக்கலச் சேவிதர் செங்கோலைத் தமது வலது கையாற் பற்றி வலது தோளிற் சார்த்தித் தாங்கியபடி முன்னேவரப் பவனி சபையின் முன்புற வாயிலை அடையும். அதே நேரத்தில் இரு சேவகர்களும் மண்டபத்தின் இரு கதவுகளையும் அகலத் திறந்து நிற்க, உதவிப் படைக்கலச் சேவிதர் சபாநாயகரின் வருகையை அறிவித்துப் பராக் கூற, சபையோர் அனைவரும் எழுந்து நின்று மரியாதை செலுத்த, மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் சபாமண்டபத்திற்குள் பிரவேசித்துத் தமது ஆசனத்தைச் சென்றடைவார். இவ்வாறான வேளைகளில் சபாநாயகருக்கும் படைக்கலச் சேவிதருக்கும் இடையில் செல்ல எவரும் அனுமதிக்கப்படுவதில்லை. சபாநாயகரது இருக்கைக்கு முன்புறமாக அமைந்துள்ள செயலதிகாரிகளின் இருக்கைகளுக்கு முன்னேயுள்ள உயர்பீடத்தில் அதற்குரிய இடத்தில் செங்கோல் வைக்கப்படும். அதற்கென உரிய இடத்தில் செங்கோல் இடம்பெறும்பொழுது தான் நாடாளுமன்றம் முறைப்படி கூடுகின்றது என்று அர்த்தமாகும். நாடாளுமன்ற நடைமுறைகளில் சபாநாயகர் அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரச் சின்னமான செங்கோல் சபாமண்டபத்துக்கு வெளியே இருக்கும் பொழுது சபையில் எவ்வித அலுவல்களையும் சட்டப்படி மேற்கொள்ளமுடியாது. சுருங்கச் சொன்னால் செங்கோல் இன்றிச் சபைக் கூட்டங்களே இல்லை.

## மகிமைகள்

முடியாட்சிக் காலத்தில் இடம்பெற்ற செங்கோல் இன்றைய குடியாட்சிக் காலத்திலும் நாடாளுமன்ற ஆட்சிமுறையில் அரசின் அதிகாரச் சின்னமாகப்பெருமைப்படுத்தப்பட்டுள்ளது. முடியும் குடியும் இணைந்து ஆட்சி நடைபெறும் இங்கிலாந்து நாட்டில் இன்று அரச அதிகாரச்சின்னமாகவே செங்கோல் சபாநாயகரிடம் இடம்பெற்றிருக்கின்றது. பதவியிலுள்ள அரசனோ அன்றி அரசியோ நேரடியாகப் பங்குபற்றும் கொமன்ஸ் சபைக் கூட்டங்களில் செங்கோல் ஒரு போர்வையால் மறைக்கப்பட்டு வைக்கப்பட்டிருக்கும். அரசனோ, அரசியோ நேரடியாகப் பங்குபற்றும் வைபவங்களில் அவர்களது அதிகாரச் சின்னம் அங்கு பலனற்றுப்போவது இயல்பானதே. முதலாவது அரச கட்டளையின் சின்னமாகவும் பின்னர் மரபுவழியின் காரணமாக சபாநாயகரும் சபையினதும் அதிகாரச் சின்னமாகவும் செங்கோல் விளங்குகின்றது என்கிறார் நாடாளுமன்ற நடைமுறைகள் பற்றிய அறிவாற்றலில் பெரும் பண்டிதராகக் கணிக்கப்படும் எஸ்கின்மே என்பார். செங்கோல் எனும் பொழுது அஃது எமது வரலாற்றிற்கு ஏதோ ஒரு புதிய அம்சம் ஆகாது. எங்கள் மன்னர்கள் செங்கோல் தவறாது. நீதிசெலுத்தியதாக வரலாறுகளில் காண்கின்றோம். தேர்கள், யானைகள், குதிரைகளுடன், மந்திரி பிரதானிகள் ஆயிரவர் வாய்க்கப்பெற்ற பெரு மன்னனைக்குறிப்பிடும் பொழுது மிக உயர்ந்த விற்கொடியையும் செம்மையான செங்கோலையும் உடையவன் என்று சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது. இங்கே செங்கோல் என்பது அரசாட்சியின் சின்னமான நேர்கோலையே குறிப்பதாயுள்ளது. "சேயுயர் விற்கொடிச் செங்கோல் வேந்தே" என்பது சிலப்பதிகார மேற்கோளாகும். - இவ்வாறு அந்தக் கட்டுரை தொடர்கிறது. ✪

# அமெரிக்க டொலர்களுக்காக...

(II பக்கத் தொடர்ச்சி)

### இடித்துரைக்கும் வார்த்தைப் பிரயோகம்

இறுதி ஆவண வாசகம் நான்குமுனைகூட்டுத் தலைமை வகித்த அமெரிக்கா, நோர்வே, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான் ஆகியோரின் சார்பில் வெளியிடப்பட்டது. வாசகர்களின் ஆர்வம் கருதி அந்த இறுதி ஆவணத்தின் முக்கியமான பகுதிகளின் மொழிபெயர்ப்பைத் தருகின்றோம். அதன் முதற்பந்தி தடித்த எழுத்துக்களில் சம்பந்தப்பட்ட தரப்பாரின் கவனத்தை ஈர்க்கும் வகையில் முக்கியத்துவப்படுத்தி உரைக்கப்பட்டுள்ளது.

*"போட்டா போட்டியான நெருக்கடிகள் நிறைந்த இந்த உலகத்தில் இலங்கைக்கு உதவும் கொடையாளி நாடுகள், அமைப்புக்களுக்கு கூட்டுத்தலைமையேற்போர் இன்று இங்கே ஒன்று கூடி, இடித்துரைக்கத்தக்க வார்த்தைப்பிரயோகத்தின் மூலம் அவசர அவசியமாக வேண்டிக்கொள்வது யாதெனில், சர்வதேச சமூகத்தின் தாராள உதவிவழங்கும் பண்பின் பயன்களை இலங்கை பெறத்தக்க வகையில் சமாதானப் பேச்சுக்கள் துரித கதியில் ஆரம்பமாக வேண்டும் என்பதாகும். கொடையாளிகள் மீதான பல்வேறுபட்ட நிர்ப்பந்தங்களுடன் அவர்கள் குறித்தெடுத்துக்கொள்வது யாதெனில், இலங்கை சமாதான முயற்சிகளில் முன்னேற்றம் இல்லாவிட்டால் கொடையாளிகளின் கவனமும் ஈர்ப்பும் வேறு எங்காவது திரும்பினாலும் திரும்பக் கூடும் என்பதாகும்."*

### சமாதானமும் அபிவிருத்தியும்

அந்த ஆவணவாசகத்தின் இறுதிப்பந்திகளின் மொழி பெயர்ப்பையும் தருகின்றோம்.

"கடந்த வருடம் டோக்கியோ மாநாட்டில் இணங்கிக் கொண்டது போல சமாதான நடவடிக்கைகளும் அபிவிருத்தி நடவடிக்கைகளும் பரஸ்பர அமுலாக்கமும் பரஸ்பர அகத்தொடர்பும் கொண்டவை. அந்தவகையில், கூட்டுத் தலைமையாளர்கள் வலியுறுத்துவது யாதெனில் சமாதான முயற்சிகளை ஆரம்பித்து முன்னெடுத்துச் செல்வதில் பின்னடிப்புக்களோ தாமதங்களோ இருக்கக்கூடாது என்பதாகும். முறைப்படியாக ஒழுங்குபடுத்தப்பட்ட சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படக்கூடிய நிலைமைதோன்றுமெனில், அதில் முன்னேற்றம் எய்தப்பட்டால் டோக்கியோவில் இணங்கப்பட்டதன் அடிப்படையிலான அமுலாக்கத்தைச் செய்வதற்கு கொடையாளி நாடுகளும் நிறுவனங்களும் உதவிவழங்கும் வேகத்தை அதிகரிக்கத் தயாரானநிலையில் இருக்க வேண்டும் என்பதுடன் அத்தறுவாயில் அபிவிருத்தி உதவிகள் தவிர்க்கமுடியாதபடி அதிகரிக்கும் என்பதையிட்டும் கூட்டுத் தலைமையாளர்கள் கொடையாளிகளை நோக்கி தெரிவிக்கிறார்கள். குறிப்பாக ஏழ்மையில் மூழ்கியுள்ளோர் பிரதேசங்களையும் இனப்பிரச்சினையால் காவுகொள்ளப்பட்ட பிரதேசங்களையும் கருத்தில் எடுத்து இலங்கை முழுவதுக்குமாக அந்த உதவிகள் விஸ்தரிக்கப்படவேண்டும் என்பதையும் கூட்டுத்தலைமையாளர்கள் அடையாளங்கண்டு கொள்கிறார்கள். எங்கெல்லாம் தேவைப்படுகிறதோ அங்கெல்லாம் மனிதாபிமான உதவிகளை வழங்குவதைத் தொடர்வதே அவசியமானதாகவிருக்கும்."

### மாற்றத்தை வலியுறுத்தும் ஆவண வாசகம்!

"இலங்கை அரசும் ஒரு திறன் மிகுந்த பேரண்டப் பொருளாதாரம், அபிவிருத்திக் கொள்கைகளை (Sound Macro Economic and Development Policies) வகுத்து அமுலாக்கவேண்டும். அத்துடன், ஏனைய மறு சீரமைப்புக்களையும் மேற்கொள்ளவேண்டும்."

"இவற்றுக்கு மேலதிகமாக வடக்கு-கிழக்குக்கு செயற்படுதிறனுள்ள நிர்வாகக் கட்டமைப்புக்களை ஏற்படுத்தும்வரை, கூட்டுத் தலைமையாளர்கள், சம்பந்தப்பட்ட தரப்பினரை வடக்கு-கிழக்குக்கான கொடையாளிகளின் நிதியிடல் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஏற்ப செயற்படுதிறனுள்ள நிர்வாகப் பொறிமுறையை நிறுவுவதற்கான இணக்கப்பாடுகளை அடைவதற்கு உற்சாகப் படுத்துவார்கள்"

### உரப்பான நிபந்தனைகளால் உயர் அழுத்தம்!

பெல்ஜியம், பிரஸல்ஸில் நான்கு முனை-கூட்டுத் தலைமையாளர்களான அமெரிக்கா, நோர்வே, ஜப்பான் , ஐரோப்பிய ஒன்றியம் ஆகியோரின் இவ்வகையான உரப்பான நிபந்தனைகள் அழுத்தங்களைக் கொடுத்தபடி இருக்கின்றன. மக்களால் தெரிவுசெய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் ஒன்று கூடி விவாதித்து அரசியல், பொருளாதாரத் தீர்மானங்களை எடுக்கவேண்டிய நாடாளுமன்றம் குத்துச் சண்டைக் களமாக மாறியுள்ள நிலையில் உதவிகள் வழங்கும் கொடையாளிகளின் அக்கறைகளையும் கவலையையும் யார் கவனத்துக்கு எடுக்கப்போகிறார்கள் என்பது விடை தெரியாத கேள்வியாகும். ஜே.வி.பி. சமரசப் பேச்சுக்களை ஆரம்பிக்கும் வகையிலான சூழலை உருவாக்குவதில் விடுதலைப் புலிகளுக்கு எதிரும் புதிருமான போக்கை தீவிரமாக கடைப்பிடிக்கின்ற இந்நிலையில், இலங்கை அரசு சர்வதேசத்தின் பல்கோடி டொலர்களை இழக்கும் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுவிடலாம் என்றும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

### அடுத்த கூட்டத்துக்கான திகதி இல்லை!

மற்றுமொரு முக்கியமான முடிவையும் அமெரிக்கா, நோர்வே, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான் ஆகிய நாலுமுனை - கூட்டுத்தலைமையாளர்கள் பெல்ஜியத்தில் எடுத்துள்ளனர். அடுத்த கூட்டத்திற்கான திகதியை நிர்ணயிப்பதில்லை என்று அவர்கள் எடுத்த முடிவுதான் அது. இலங்கைக்கு வழங்கப்படக் கூடிய நிதியுதவிகள் தொடர்பாக மேலதிக முடிவுகள் எடுப்பதாயின் இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் ஒன்று சேர்ந்து சமாதானப் பாதையில் நகர்வார்களா என்பதைப் பொறுத்திருந்து அவதானித்தே செயற்படவேண்டியுள்ளது என்பதை கூட்டுத் தலைமையாளர்கள் இதன்மூலம் வெளிப்படுத்தியுள்ளனர். ❑

---

**வாசகர்களுக்கு....**

கடந்த வார (06-06-2004) சூரியகாந்தியில் வெளியான "திருமண நிகழ்வின் தாற்பரியங்கள்" என்ற கட்டுரையில் அந்தணர்களின் திருமணங்களில் கைக் கொள்ளப்படும் கிரியைகளே பெருமளவில உள்ளடக்கப்பட்டிருந்தன. சமாவர்த்தனம் கன்னியூஞ்சல், யுகசித்திரம் ஆகியனவும் அவற்றுள் அடங்கும்.

குறிப்பிட்ட கட்டுரையில் "கோப்பாய் சிவம்" எழுதிய 'விவாஹ சோபனம்' என்ற நூலில் இருந்து பெறப்பட்ட தகவல்கள் பலவும் சேர்க்கப்பட்டுள்ளன. அதற்கான அடிக்குறிப்பு தவறுதலாக கடந்த வாரம் இடம்பெறவில்லை. (ஆ-ர்)




# 400 மீற்றர் தடைதாண்டல் போட்டியில் சாதனையை சமப்படுத்தினார் கிருபானந்தன்



வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத்திணைக்களத்தினால் நடத்தப்பட்ட மாவட்டமட்ட தடகள விளையாட்டு விழாவில் ஆண்களுக்கான 400மீற்றர் தடை தாண்டல் ஓட்டப்போட்டியில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த பொ.கிருபானந்தன் சாதனை ஒன்றை நிலை நாட்டியுள்ளார்.

கடந்த முதலாம் திகதி யாழ் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற பிரதேச செயலகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டு விழாவில் ஆரம்பநாள் நிகழ்வில் இச்சாதனை நிகழ்த்தப்பட்டது.

2002ஆம் ஆண்டு நடைபெற்ற விளையாட்டு விழாவில் நல்லூர் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த எஸ்.சுதேஸ்வரன் 400மீற்றர் தடை தாண்டல் ஓட்டப்போட்டியில் 58.8 செக்கன்களில் ஓடிமுடித்து சாதனை ஒன்றை ஏற்படுத்தியிருந்தார்.

தற்போது கிருபானந்தன் அதே நேரத்தில் ஓடிமுடித்து சுதேஸ்வரனின் சாதனையைச் சமப்படுத்தியுள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவனான பொ.கிருபானந்தன் அண்மையில் யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெற்ற அனைத்துப் பீடங்களுக்குமிடையிலான தடகள விளையாட்டு விழாவில் 400மீற்றர் தடைதாண்டலில் 59.3 செக்கனில் ஓடி புதிய சாதனையை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

யாழ்.பல்கலைக்கழகத்தின் மெய்வல்லுனர் அணியின் தலைவராக இருக்கும் இவர், பல்கலைக்கழக முன்னாள் விளையாட்டு அவையின் தலைவராகவும் செயற்பட்டவர்.

இதேவேளை, இந்த விளையாட்டு விழாவில் நடைபெற்ற ஆண்களுக்கான 800மீற்றர் ஓட்டப் போட்டியில் நல்லூர் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த ஜே.ஜெயதாஸ் என்பவர் புதிய சாதனை ஒன்றை நிகழ்த்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

(5-100)









உங்கள் கனவுகளை நனவாக்க வேண்டுமாயின் பெண்களுக்கென்றே விசேடமாக வகுக்கப்பட்டு, அதிசிறந்த பலாபலன்களைத் தரும் திவ்யாங்கனா ஆயுட் காப்புறுதி திட்டத்தை தெரிவுசெய்யுங்கள்.

லை.்.ப் இன்சூரன்ஸ் கோப்பரேஷன் (லங்கா) லிமிட்டட் அறிமுகப்படுத்தியுள்ள திவ்யாங்கனா உங்கள் வாழ்நாள் முழுவதும் பல்வேறு நன்மைகளை வழங்கும். எனவே,பெண்களாகிய நீங்கள் ஆசைக்கனவு கண்ட ஒரு அதிசிறந்த முதலீட்டுத் திட்டமாக அது விளங்குகின்றது. நிதி அனுகூலங்கள் மற்றும் போனஸ்களை பெற்றுத்தருவதோடு, உங்கள் வசதிக்கும் வருமானத்திற்கும் ஏற்ப காப்புறுதிக் கட்டணங்களைச் செலுத்துவதற்கும் இத் திட்டம் இடமளிக்கிறது.

திவ்யாங்கனா உங்களுக்குத் தருவது: இலகு கொடுப்பனவு வழி... இலகு வாழ்க்கை இதுவே உங்கள் வாழ்க்கையின் புதிய கொள்கையாக இருக்க வேண்டும்.

# திவ்யாங்கனா

பெண்களுக்கான ஆயுட் காப்புறுதி

வாழ்க்கையில் எனது புதிய திட்டம்

காக்கும் கரங்கள்

ஆயுள் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் (இலங்கை) லிமிடெட்

யாழ்ப்பாணம் கிளை: ஆர்.கி.கட்டடம், 1ஆம் மாடி, 55,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 2226325/6
ஷார்லெல் பில்டிங், 29/2 விசாகா வீதி, கொழும்பு 04 தொலைபேசி: 5334353.
வெப்சைட்: www.liclanka.com

Rediffusion|DYR



# பெயாரோஸ் சுபமாங்கல்யம்



## விரைவில் நீங்கள் திருமணம் செய்து கொள்வதாயின் திருமணத்திற்கான செலவுகளை நாம் ஏற்போம்

2005ம் ஆண்டு மார்ச் மாதத்திற்கு முன்பு திருமணம் செய்து கொள்ளவிருக்கும் ஒரு இளம் பெண் தனக்குப் பிடித்த இடத்தில் திருமணத்தைச் செய்து கொள்ள நாம் உதவி செய்வோம். இதற்கான பெயாரோஸ் சுபமாங்கல்யம் 2004ம் ஆண்டு ஆரம்பித்துவிட்டது.

மணப்பெண்ணின் புடவை, தங்கச் சங்கிலி, பாதணிகள், தோழியர் இருவரின் புடவைகள்,
ஆபரணங்கள், பாதணிகள், முக அலங்காரம், தலையலங்கார ஆலோசனைகள்,
மலர் அலங்காரம், மணமேடை அலங்காரம், மேசை அலங்காரம், திருமண கேக்,
திருமண ஸ்ரக்சர் கேக், திருமண அழைப்பிதழ் கேக் பெட்டிகள், DJ இசை,
புகைப்படங்கள்/வீடியோ படங்கள், 150 பேருக்கான விருந்துபசாரத்துடனான
மண்டபச் சேவைகள் இவை அனைத்தையும் வழங்க நாம் தயாராக உள்ளோம்.

ஆறுதல் பரிசாக 10 தங்க நாணயங்கள்.

நிலங்கா, துஷார்
(22.03.2004 பெயாரோஸ் சுபமாங்கல்யம் வெற்றியாளர்)

**நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம்**
உங்கள் வருங்கால துணைவருக்கும் உங்களுக்கும் இடையில் நடந்த மறக்க முடியாத சம்பவத்தை சுவைபட எழுதி, இருவரும் சேர்ந்து அண்மையில் எடுத்த புகைப்படத்துடன் உங்கள் பெயர், முகவரி, அடையாள அட்டையின் இலக்கத்தையும் குறிப்பிட்டு 25கி அல்லது 50கி பெயாரோஸ் வெற்று உறை அல்லது சஷே உறையை இணைத்து இன்றே எமக்கு அனுப்பி வையுங்கள்.

முடிவுத் திகதி 2004 ஜூலை 31.

பெயாரோஸ் சுபமாங்கல்யம்,
ஹேமாஸ் மார்க்கட்டிங் (பிரைவட்) லிமிட்டட்.
36, பிரிஸ்டல் வீதி, கொழும்பு 01.

மலர் அலங்கார அனுசரணையாளர்
Starling Flowers (Pvt) Ltd.,

சிகை அலங்கார அனுசரணையாளர்
Salon Nayama

தங்க நகைகளுக்கான அனுசரணை

புடவைக்கான அனுசரணை
SAREE MANDIR

# FairRose

Fairness Cream
With Rosewater & Sandalwood Paste




மென்மையான சருமத்திற்கு
வெண்மையான முகத்திற்கு

PHOENIX O&M 0147 Licence No. C/39/2003